மக்களின் சமயநெறி

டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன்

மக்களின் சமயநெறி

டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன்
(டாக்டர் எஸ்.ஆர்.கே)

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41–பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை 600 098.

MAKKALIN SAMAYANERI

By

Dr. S. Ramakrishnan

முதற் பதிப்பு : ஜூன், 1979

இரண்டாம் அச்சு : அக்டோபர், 1984

திருத்திய மூன்றாம்பதிப்பு: செப்டம்பர், 1999

Code No. A 880

ISBN - 81-234-0459-X

விலை: ரூ. 27-00

ஒளி அச்சு: *சாயி கிராபிக்ஸ்*

அச்சிட்டோர்:

பதிப்புரை

மக்களின் சமயநெறி என்ற இந்நூலைப் படைத்துத் தந்தவர் எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் மிக்க **டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன்** அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை எழுதிப் புகழுக்குப் புகழ் சேர்த்தவர். இலக்கிய உலகின் மேதையான **டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்** பொன்மலர் மணம் பெற்றதைப் போல் இந்நூலைத் தனது புலமையால் நூலாசிரியர் பொலிவு பெறச் செய்கிறார்.

கடவுளுக்குக் கர்ம பந்தம் இல்லை என்பது சைவ வைணவ நிலை. சங்க இலக்கியம் வடநூல்களைப் போலவே சிவனின் திருவுருவையும் சாதனைகளையும் பற்றிப் பேசுகிறது. பிரபஞ்ச தத்துவங்களைக் குறித்த தெய்வங்களில் பிரமன் முதலியோர் வடபுலத்தைப் போலவே தமிழகத்திலும் சிறு தெய்வங்களாக மாறினர். சங்க காலத்துக்கு முன்பே ஜைனம் தமிழர் வாழ்வில் இடம் பெற்றது. சங்க காலத்தில் ஜைனத்தைப் போல் பௌத்தமும் விளங்கியது. பல்வேறு சமய நெறிகளுக்குச் சம வாய்ப்புத்தரும் பொது நோக்கால் பண்பட்டது தமிழகம். பல மதங்களின் கொள்கையையும் விருப்பு வெறுப்பின்றி பயின்று உண்மையை அறிவதை முன்னோர் போற்றினரென்று துணியலாம். ஆனால் சங்கம் மருவிய காலத்தின் பிற்பகுதியிலேயே சமயக் காழ்ப்பு இங்குத் தோன்றியது. எல்லா மதங்களுக்கும் உள்ள பொதுவான அடிப்படையைப் போற்றி அனைவரும் ஒப்பும் வகையில் தம் கொள்கைகளை எடுத்துரைப்பதில் சங்கச் சான்றோர் சிரத்தை எடுத்தனர்.

வடபுலம் கண்ட மெய்யறிவுத்தேட்ட முயற்சிகளின் பயனையெல்லாம் ஜீரணித்துத் தன் மயமாக்கித் தன் பண்பாட்டுக்கு வளம் கூட்டியதுடன் தமிழகம் அமையவில்லை. அனைத்திந்திய சமய வாழ்வுக்கு அது அளப்பரிய ஆற்றல் அளித்தது. வேதாந்தத்துக்குத் தென்னகம் புரிந்த தொண்டு பன்மடங்கு சிறந்ததாகும். சைவ சித்தாந்தத்தை உருவாக்கியதில் தமிழ் நாட்டின் பங்கு மிகப் பெரிது. இந்நாட்டுத் தத்துவங்கள் பலவாயினும் அவை அனைத்திந்திய அடிப்படையிலேயே வளர்ந்தன என்பதும் அவற்றுக்கு வளம் கூட்டுவதில் தென்னகம் வகித்த பாத்திரம் மிகப் பெரிது என்பதும் தெளிவு. வன்முறையினைத் தழுவாது கருத்தின் வலிவால் மனத்தை

மாற்றும் பண்பினையே பாரதம் நாடியது. பாரதநாட்டு வரலாற்றில் பக்தி இயக்கத்தின் பங்குப் பெரிது. பக்தி இயக்க வரலாறும் இந்திய மக்களின் தேசிய ஒருமைப்பாட்டுக்கே சான்று பகர்கிறது. ஆழ்வார்களும் நாயன்மார்களுமே பரத கண்டத்தில் பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்த பெரியார்களாவார்கள். இராமாயண, மகாப்பாரதக் கதைகள் பக்தி இயக்கத்துக்கு வளம் சேர்த்தன. சிற்பக்கலை, நடனக் கலை தோன்றுவதற்குப் பக்தி இயக்கம் வகை செய்தது.

தொழில் பிரிவினை அடிப்படையில் தோன்றிய சாதி முறை ஏற்றத்தாழ்வு பாராட்டும் சமுதாயக் கொடுமையைப் பக்தி இயக்கம் சாடியது. ஆண்டவனது சந்நிதானத்தில் அனைவரும் சமம் என்று சாற்றியது.

ஆழ்வார்களின் பக்தி இயக்கம் வட நாட்டிலும் பரவியது. வாழ்வையும் கலை இலக்கியங்களையும் சிறக்கச் செய்தது. பன்மையில் ஒருமை காணும் பாரதப் பண்பாட்டின் தன்மை பண்டிகை கொண்டாடுவதிலும் மிளிர்கின்றது.

முன் கூறப்பட்ட மூன்று பத்திகளிலும் உள்ள ஒவ்வொரு வாக்கியங்களும் நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்ற முத்திரை வாக்கியங்கள். ஒவ்வொரு வாக்கியங்களும் பல தகவல்களை உள்ளடக்கி விளக்குன்றன. மக்களின் சமயநெறி மனங்களை வளப்படுத்த வேண்டும். வெறி உணர்வுகளை மாற்றி எட்டுத் திசைகளில் வாழும் மக்களையும் இணைத்து இன்பம் பெறச் செய்ய வேண்டும். அதற்காகப் பல நல்ல நூல்கள் படைக்கப்பட வேண்டும். நாட்டு நலன் கருதி நல்ல நூல்களை வெளியிடும் எமது **நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்** இந்நூலையும் வெளியிட்டு வாசகர்களின் ஆதரவை நாடுகிறது.

-பதிப்பகத்தார்.

டாக்டர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின்

அணிந்துரை

மனிதன் பிறவுயிர்கள் போலத்தான் உலகில் பிறக்கிறான். இயற்கை உண்மை பல பல நிலைகளில் பரிணாம வளர்ச்சி வகையாக இவ்வண்டமும் உலகமுமாய் விரிந்து வருகிற போக்கில் மனிதனும் உருவானான். பிறவுயிர்கள் இயற்கையோடு ஒன்றுபட்டே இயல்பாக வாழ்கின்றன. இவன் எப்படியோ அவை போல் வாழாது வாழ்ந்து வரும் போதே தான் வாழ்ந்து வருவதைத் திருப்பித் தன்னுள் உணர்ந்து பார்க்கிறான். தவறு செய்தால் தவறு செய்யும் போதே கூட தவறு என்றுணர்ந்து திருத்திக் கொள்ளுகிறான். விளக்கமாக உணர்ந்ததை, உணர்ந்தது போலப் பிறர்க்கு விளக்கக்கூடிய பேச்சுத் திறனும் இவனிடம் வளர்கிறது. கூடி வாழும் வாழ்விலே, ஒருவன் அறிந்தது உலகம் அறிந்ததாக ஒற்றுமைப்படுவதால், அறிவிலும், ஆற்றலிலும், அன்பிலும் சிறந்து விளங்கும் தனிச் சிறப்புப் பெற்ற உயிர் வகையாக மனிதன் ஓங்குகிறான்.

உலகத்தைக் காண்கிறான். அதன் உண்மையைத் தேடுகிறான். அந்த உண்மை வழியே உலகத்தை மாற்ற முயலுகிறான். படிப்படியாகத் தோல்வியும் வெற்றியாகிறது. விளங்காத புதிராக உலகம் தோன்றுகிறது. உலகில் இருக்கிற மலை இருக்கட்டும்–ஒரு ஆலமரத்தையோ, ஒரு யானையையோ நோக்க இவன் எம்மாத்திரம்? அண்டத்தை நோக்க இவன் ஒரு கொசுகு என்றாவது சொல்ல முடியுமா? இருந்தும் கேட்கிறான்;''இது என்ன உலகம்?'' என்று. அதனை அடக்க முயல்கிறான். ''இது உண்டா, இல்லையா, வெறும் தோற்றமா?'' என்று கேட்கிறான். கேட்பது மட்டுமா? சங்கப் புலவன் பாடினான்; ''எட்டாத பொருளின் அகல நீளத்தை எல்லாம் இங்கிருந்தே கணக்கிட்டுக் கூறுகின்ற அறிஞர்களும் இருக்கிறார்கள்'' என்று. இது வெறும் கற்பனையா? இன்று விஞ்ஞானி 'உலகின் எடை எவ்வளவு' என்று

கணக்கிடுகிறான், இந்த மனித கொசுகு சிறகை அசைக்காமலேயே கணக்குப் போடுவது புராணக் கதை அல்ல; அன்றாடம் நடக்கின்ற விஞ்ஞானச் செய்தி. ''உலகம் என்ன'' என்று கேட்கத் தொடங்கியவன் ''நான் யார்'' என்கிறான். எத்துணையோ விடைகள்! பொய்யா? பொய் என்றால் என்ன என்கிறான். மெய் என்றால் என்ன என்கிறான். குழந்தை தட்டி, தவறித் தான் நடக்கக் கற்றுக் கொள்ளுகிறது. தட்டியதெல்லாம் தவறுதானா? மலையுச்சியில் சென்று காண விரும்புகிற நாம் ஒவ்வொரு படிக்கட்டாகத்தான் ஏறுகிறோம். முதல் படிக்கட்டில் ஏறினது சரியா? தவறா? அங்கே காண்பது மெய்யா? அன்றி பொய்யா? மேலே ஏற ஏற முன்னிலும் உணர்கிறோம். அங்கங்கே காணும் காட்சி மேலும் மேலும் அகலமுடையதாக, ஆழமுடையதாக, பொருள் விளக்கமுடையதாக மிகுந்து கொண்டே போகிறது. அப்போது முன்னே கண்ட காட்சியெல்லாம் பொய்யா? முன்னேற முன்னேற முன்னே கண்ட மெய் ஆழமுடையதாகிறது. தோல்வியே வெற்றிக்கு வழிகாட்டுகிறது.

எனவே பொய்யென ஒன்றில்லை. தோல்வி என ஒன்றில்லை. எல்லாம் மெய்தான். ஒரு வெற்றியிலிருந்து இன்னொரு வெற்றிக்குப் போகிறோம். ஒரு மெய்யிலிருந்து இன்னொரு மெய்யைக் காண வழி ஏற்படுகிறது. பொய் என்று கூறுவதெல்லாம் நிறை பெறாத மெய்யே. இதனை இப்போது எங்கும் உணருகிறோம். விஞ்ஞானியோ தன்னுடைய ஆராய்ச்சியில் ஒவ்வோர் இமைப்பொழுதும் இந்த உண்மை விளக்கத்தின் வியப்பை உணர்கிறான். வரலாற்று ஆராய்ச்சியாளனும் அப்படித்தான்! கலை அனுபவத்தில் திளைப்பவனும் அப்படித்தான்! பாட்டனுபவத்தில் அழுந்தியவனும் அப்படித்தான்! தத்துவ ஆராய்ச்சியிலும் இந்த ஆழம் ஆழ்ந்து கொண்டே போகிறது. விஞ்ஞானி ஆழ்வாராகிறான்.

ஆனால் அன்று கேட்ட கேள்விதான் இன்றும் கேட்கிறான் மனிதன். நான் யார்? இந்த அண்டம் என்ன? நான் வேறா? இந்த அண்டமே தானா? அண்டமும் நானும் வேறில்லையானால் பின் உண்மைதான் என்ன? அற்புத சக்தியின் பெருவிளக்கத் திருவிளையாடலில் நானும் விளையாடி வருகின்றேனா? இப்படியெல்லாம் கேட்கிறதே

அறிவு, அதுவும் கல்லோடு கல்தானா? எல்லாவற்றையும் மறந்து அந்த அறிவு தான் எல்லாம் என்று கூறுவதா? ஆனால் அறிவு எல்லாவற்றையும் அறியவில்லையே? அறிவு அறிந்தது தவிர வேறொன்றுமில்லையா?

துன்பம்தான் முடிவா? ஆமாம், துன்பம்தான் முடிவு. என்றைக்கோ சூரியன் இருளும்; உலகம் சாகும். இதற்கு அஞ்சாத மனிதனே மனிதன். துன்பமான உலகில் கூடிய வரையில் துன்பம் குறையும்படி வாழ்வதே வாழ்வு. அது தான் உண்மை. அதுதான் வெற்றி. இப்படி ஒரு மனநிலை.

இல்லை. அறிவு வளர்ந்து கொண்டே போவது, அது தான் அடிப்படையான உள்ளுணர்வு. அந்த உள்ளுணர்வு தான் கல்லிலும் செம்பிலும் மறைந்திருந்து சிறிது சிறிது விளக்கம் பெற்று சிறு செடி கொடிகளாய், விலங்குகளாய், மேலும் மேலும் விளக்கம் பெற்று, மூளை வளர்ச்சி பெற்று வரும்போது, கொசுகே அண்டத்தை அடக்குகிறதல்லவா? இந்த அடிப்படை உணர்வு உள்ளே இருக்கிறது. அதுதான் உள்ளுணர்வு. இந்த ஒற்றுமைக் காட்சியை அனுபவிக்கும் போது எல்லாம் விளங்கி விடுகிறது. எல்லாம் இன்பம்! எல்லாம் வெற்றி! அச்சமில்லை, இப்படியொரு மனநிலை.

போராட்டம், மனக்கசப்பு—இந்தப் போராட்டத்தில் சாகின்றவர்கள் தொகை சிலபோது இயற்கைச் சாவை விட மிகுதி ஆகிறது. இந்தப் போராட்டத்திலும் அமைதி கண்டு உயிரையும் கொடுத்து உண்மை அன்பு விளக்கமாக வாழ்கிறார்கள் சிலர். போரையே நம்பிய நாடுகள் போலல்லாமல் கருத்தொற்றுமையில் களிநடம் புரிந்த பெரியோர்கள் இந்திய நாட்டில் மிகுதி, தமிழ் நாட்டிலும் மிகுதி. கெய்ட் (Gaite) என்பவர் மக்கட் தொகை கணக்கு எடுக்கும் போது, இந்திய நாட்டில் எழுதப்படிக்கத் தெரியாத பாட்டியும் கூட, இந்தச் சமயப் பொதுமையை உள்ளூர உணர்ந்திருந்தாள் என்று கணக்கெடுத்துக் கண்டார். இந்த வியப்பு எப்படி நிகழ்ந்தது? இந்த நாட்டுச் சமய வளர்ச்சியை உணர்ந்தால் இந்த உளவு நமக்கு விளங்கும்.

அங்கே வடக்கும் இல்லை, கிழக்கும் இல்லை, தெற்கும் இல்லை, மேற்கும் இல்லை. அங்கே ஒரு ஒற்றுமை. அதனை இந்திய ஒற்றுமை என்றான் இந்தியன். ஆனால் அவன் இந்தியா என்று பேசியது உலகம்தான்! இல்லை, அண்டம்தான். ''யாதும் ஊரே–யாவரும் கேளிர்'' இது வெறும் பேச்சா? இல்லை. அனுபவித்த அனுபவம். இந்த அனுபவத்தை நம்மையும் உணரச் செய்கிறார் நண்பர் எஸ். இராமகிருஷ்ணன். சிந்துவெளிப் பண்பாட்டின் வரலாற்றிலிருந்து நேற்றைய பாரதியின் பாட்டு வரை வளர்ந்த இந்தக் கருத்தொற்றுமை வளர்ச்சியை நமக்கு நினைப்பூட்டுகிறார்.

வேதம் பிறந்தது வடக்கே. அதற்கு விளக்கம் கண்டவர்கள் தென்னாட்டு சங்கரரும், இராமானுசரும், மத்வரும். ஜைனம் பிறந்தது வடக்கே. அதன் ஆழத்தை, அருளை வாழ்ந்து காட்டிய பெரியோர்கள் தென்னாட்டில். பௌத்தம் பிறந்தது வடக்கே. அதன் ஆழத்தைக் கண்ட நாகார்ஜுனரும், திங்நாகரும், தருமபாலரும் பிறந்தது தெற்கே. கீதை பிறந்தது வடக்கே. அதனை உலக நெறியாகக் கண்ட வள்ளுவர் பிறந்தது தெற்கே.

எது வழி, எது மெய்? இந்தக் கேள்வி சரியா? கடவுள் உண்டா? கடவுள் என்பதற்குப் பொருள் என்ன? – 'உளன் எனில் உளன் – இலன் எனில் இலன்' உண்மை என்றால் அது இன்மை என்று சொல்பவரையும் தன்னுள் அடக்க வேண்டும் அல்லவா?

ஜைனர் அருள் என்றார். புத்தர் அன்பு என்றார். காந்தி உண்மை என்றார். ஆனால் என்ன காண்கின்றோம்? எங்கும் பட்டினி, எங்கும் பஞ்சம்! இந்தியாவில் நூற்றில் எண்பது பங்கு செல்வத்தை இருபது குடும்பங்கள் அனுபவிக்கின்றன. சாதியின் பேயாட்டம்! ஈவு இரக்கமின்றி கீழ்ச் சாதியினரைச் சுட்டுப் பொசுக்குகின்றனர். படித்தவர்கள் பிறரைப் பற்றிக் கவலைப்படுவதே காணோம். பல்கலைக் கழக ஆசிரியர்களும் கூட தங்கள் ஊதியம், தங்கள் புகழ் என்று வேட்டையாடுகின்றனரேயன்றி இந்த நாடு உயர வேண்டும் என்கிற வகையில் மாணவர்களை உருப்படுத்துகின்றார்கள் என்று கூறுவதற்கு இல்லையே! கருத்தொற்றுமை என்று சொல்வது எல்லாம் உலகை ஏமாற்றுகிற வழியல்லவா? இப்படி நமக்கு மனம் எரிகின்றது.

ஆனால் இது தோல்வி மனப்பான்மை. மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும் ஒன்றாகி வருகிறது. உலகம் தோன்றியநாளாக மனிதன் அறிந்த அறிவு இந்த நூற்றாண்டில் பத்தாண்டில் இரட்டிக்கிறதாம். இப்போது ஏழாண்டுகளில் இரட்டிக்கிறதாம். எனவே, உண்மை வளர்ச்சி, உண்மையுலகம் முழுவதுமாகப் பரவுகிறது. தனிமனிதன் முன்பு எல்லாம் முயன்று சிறிது சிறிது உண்மை விளக்கம் பெற்றுவந்தான், அப்போது அருள் வீழ்ச்சி – சத்தி நிபாதம் – எழுந்ததாம். ஆனால் இப்போது உலகம் முழுவதும் ஒருமுகமாக எல்லோரும் ஆராய்ச்சி செய்வதால், மனத்தையும் கடந்த அந்தப் பெருநிலை எல்லாருக்குமாக தானாகவே இறங்கிப் பெருகி வரும் என்று அரவிந்தர் கூறியது உண்மையாகிறது. ஆனால் கற்றவர் எண்ணிக்கை மிகுதியாக வேண்டும். இந்த அறிவு வளர்ச்சி இன்று இராஜ சக்தியை நம்பியிருக்கிறது. இந்த அறிவு உண்மையில் லோக சக்தியாக மாற வேண்டும். மாறி வருகிறது. எனவே மனம் சோர்ந்து போக வேண்டியது இல்லை.

இந்த அறிவு வளர்ச்சியில் நம்மை ஒன்றாக்கிக் கொண்டு உழைத்தல் வேண்டும். 'அது வருமா, வராதா' என்று நம்முடைய உணர்ச்சியை எழும்பவிட்டுக் குழம்பக் கூடாது. ஒளி அறிவு எழ வேண்டுமேயன்றி உணர்ச்சிப் புகை அதனை மங்க வைக்கக் கூடாது. ''செய்வது உன் கடமை, அதன் பயன் பற்றிக் கருதுவது தவறு'' – இதுதான் கீதையின் உபதேசம். ''உலகம் முழுவதையும் அருள் வடிவாக உன்னோடு ஒன்றாக்கிப் பார். ஆனால் அங்கே பற்றுக்கு அடிமையாகி விடாதே.'' என்று கூறினார் புத்த பெருமான். இப்படிப் பற்றில்லாமல் அருள் பூண்டு ஒழுகுதலை Abstract sensitivity என்று பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் (Bertrand Russell) என்ற இன்றைய நூற்றாண்டைய பேரறிஞர் விளக்குகிறார். நண்பர் இராமகிருஷ்ணன் இந்திய சமய வாழ்வின் வரலாற்றைக் கூறிவரும்போது இந்த உண்மை எங்கெங்கும் தோன்றி வழியக் காண்கிறோம். எனவே நண்பருடைய தொண்டு சிறந்த தொண்டாகும். நாடு இதனைக் கற்று நன்மை அடைவோமாக.

தெ.பொ.மீ.

பொருளடக்கம்

உலக நாடுகளிடையே ஆத்மிக எழுச்சியின் வரலாற்றில் ஒப்புயர்வில்லாத நிலையினை மேவி மிளிர்வது பாரதம்.[1] அதிகார அமைப்புக்கு அடிபணியாதும் அடவாதத்துக்கு இடம் கொடுக்காதும், தங்கு தடையில்லா உரிமையோடும் தன்னேரில்லாத் துணிவோடும் ஆன்மிகத் தேட்டத்தில் ஈடுபட்ட சான்றோரின் சாதனை அது.

1. சிந்துவெளிச் சமயம்

இந்தியர்தம் சமய வாழ்வின் தொன்மைப் பெருமையைக் கி.மு.2500 முதல் கி.மு.1500 வரையில் தழைத் தோங்கிய சிந்துவெளி நாகரிகத்திலிருந்து உய்த்துணரலாம். தாய்வழிச் சமுதாயத்தில் ஏற்றம் பெற்ற அம்மை வழிபாட்டுடன் பரமசிவனைப் பரவும் நெறியும் சிந்துவெளி மக்களை ஆட்கொண்டது. சிவபெருமானின் பண்டைய வடிவம் என்று ஆய்வாளரால் கருதப்பெறும் இலச்சினையில் அவர் விலங்குகள் சூழப் பத்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார். பசுபதி[2] யாகவும் மகாயோகியாகவும் பரமசிவனைக் கருதும் மரபு அந்நாளிலேயே நிலை கொண்டதற்கு அத்தாட்சியாகும் அது. அவரை மூன்று முகமுடையோராக முத்திரையில் காண்கிறோம். இதிலிருந்தே அவரை முக்கண்ணனாகக் கருதும் கொள்கை வளர்ந்தது எனலாம். இருபுறம் கொம்புகளும் இடையில் நீண்ட தலைப்பாகையும் தரித்திருக்கிறார். இதிலிருந்தே திரிசூலம் (முத்தலைச் சூலம்) தரித்தவராகச் சிவனைக் காணும் கொள்கை உருவானதாகலாம் என்பர். வேறு இரண்டு இலச்சினைகளில், கொம்புகளுக்கிடையே, தலையிலிருந்து தழையோ மலரோ உடைய சிறு கிளை முளைத்திருப்பதைக் காண்கிறோம். சிவனைத் தாவர வளர்ச்சித் தெய்வமாகக் கருதினர் என்று இதிலிருந்து

---

1. இங்கும் இதன் பின் வரும் வரலாற்றுச் செய்திகளிலும், பாரதம் அல்லது இந்தியா என்பதில் பாகிஸ்தானும், வங்க தேசமும் அடங்கும்.

2. பசுபதி: விலங்குகளின் தலைவன் 'ஆத்மாக்களின் தலைவன்' என்று பின்னாளைய சாஸ்திரம் பொருள் கண்டது.

உய்த்துணர்வர். இதுவும் பின்னாளைய கொள்கைக்கு ஏற்றதே. பரமசிவனின் வாகனமாகப் போற்றப்பெறும் ரிஷபம், பசுபதி முத்திரையின் விலங்குகளோடு காணப்பெறவில்லை. எனினும், அது புனிதமானதாகக் கருதபெற்றதென்பதைக் காளைமாட்டு முத்திரைகளி லிருந்து ஊகிக்கிறோம். அரச மரத்தில் கொம்புடைய பெண் தெய்வத்தை வழிபடும் இலச்சினை கிடைத்திருப்பதால், அரச மரம் புனிதமானதாகக் கருதப் பெற்றது விளங்கும். குறிப்பிட வேண்டிய மற்றொன்று யாதெனில், நமது ஆலயங்களில் புனித நீராடுவதற்காக உள்ள திருக்குளங்களை நினைவூட்டும் வகையில், மொகஞ்சதாரோ கோட்டையில் பெரியகுளம் அமைந்திருப்பதே. வீட்டுக்கு வீடு கிணறும் (குளியலறையும்), சந்துக்குச் சந்து பொதுக்கிணறும், ஊருக்கு அருகில் ஆறும் உடைய நகரம், பெரிய குளத்தை அமைத்துச் சிறப்பாகப் பராமரித்ததென்றால் அதற்கு சமயமே காரணமாக இருந்திருக்க வேண்டும்.

2. வேதகாலத் தெய்வங்கள்

உலக சமய நூல்களில் தொன்மையானது, ஆரியர் வருகையைத் தொடர்ந்து இந்நாட்டில் எழுந்த ரிக் வேதமே. ரிக்வேத கால ஆரியர் இயற்கையின் பேராற்றல்களைத் தெய்வங்களாக வணங்கினர். வானம், வையம், கதிரவன், காற்று, அக்கினி முதலியன வழிபடப்பெற்றன. பிரபஞ்ச நிகழ்ச்சி அனைத்திலும் முறை நிலவச் செய்வோன் வருணன் என்பது ரிக்வேதம் கொண்ட முடிவு[1] பகலும், இரவும் மாறி மாறி வருவதற்கும், கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பருவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்வதற்கும், அந்த முறை அல்லது ரித என்பதின் வீறுதான் காரணம். அண்டத்து முறையின் காவலனான வருணன் என்னும் விண்ணுலகத் தேவன்

---

1. ரித (பிரபஞ்ச முறை) என்னும் இந்தக் கோட்பாடு ரிக்வேத சிந்தனை எழுச்சியின் சிகரமாகலாம் என்பர் பாஷம் (The Wonder that was India,p.238).

எங்கும் நிறைந்தவன்; அவன் அறியாதது ஏதுமில்லை; பொய்ம்மை, வெகுளி முதலிய குற்றங்களைப் புரிவோரை ஒறுப்போன் அவன். எனவே, தமது குற்றங் குறைகளைப் பொறுத்தருளுமாறு அவனை இறைஞ்சுவர் ரிக்வேத கவிகள்.

வருணனையும் விஞ்சிய புகழை இந்திரன் அடைந்தான். அவன் மழைக்கும் போருக்கும் அதிபதி. புயலுக்குத் தலைவனாம் உருத்திரனை ரிக்வேத ரிஷிகள் வான்பேரச்சத்தோடு வணங்குவர். சூரியனே விஷ்ணுவாகப் போற்றப் பெறுவான். மூன்றடியால் உலகளப்பவர்[1] என்று விஷ்ணுவைப் புகழ்வர். உஷை (விடிவெள்ளி), சரசுவதி நதி, பூமி முதலிய பெண் தெய்வங்கள் சிலவே. கோயிலோ உருவ வணக்கமோ ரிக் வேதத்தில் இடம் பெறவில்லை. வேள்வியே ஆரிய வழிபாட்டின் மையமாம். வேள்வியில் சோமம் என்னும் கொடியிலிருந்து சாறு பிழிந்து கடவுளர்க்குப் படைத்துப் பின் பருகுவதைச் சிறப்பாகப் போற்றினர். ரிக்வேதத்தின் பத்து மண்டலங்களில் ஒன்று (9–வது) சோமக் கொடியின் அதிதேவதையான சோமனைப் பரவும் சூக்தங்களை உடையது. தொல்லோர் தாவர வளர்ச்சிக்கும் சந்திரனுக்கும் தொடர்பு கண்டதால், பின்னாளில், தனிச் சிறப்பான தாவரத் தேவதையின் பெயரே (சோமன்) சந்திரனுக்கும் பெயராயிற்று.

இயற்கை வழிபாட்டுடன் அமைந்தாரல்லர் ரிக்வேத முனிவர். தெய்வம் பலவாகக் குறிப்பிடப்பெற்ற போதிலும், அவையெல்லாம் பெயர் வேற்றுமையே என்றும், பரம் பொருள் ஒன்றே என்றும் தெளிந்து விளம்புவார் ஒருவர்: ''உண்மை ஒன்று; அதனை உயர்ந்தோர் பல பெயரால் அழைப்பர்.''[2] மற்றொரு முனிவரோ, ஏகமாகிய பொருளிலிருந்து எழுந்ததே பிரபஞ்சம் என்று கூறும்போதே, மானிட அறிவுக்கு விளங்காத புதிரைப் பற்றிய துணிவே அது என்பதைத் துலாம்பரமாக்குவார்; உலகம் எவ்வாறு உதித்தது என்பதை

---

1. வாமனாவதாரக் கதையின் கரு இதுவே என்பர்.

2. ''ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி'' என்பது மூலம் (ரிக் I.164)

அந்நிகழ்ச்சியை மேற்பார்வை செய்த இறைவன் அறிவான் என்று திட்டமாகச் சொல்வதற்குக் கூட மனிதனால் முடியாது; மானிட விவேகத்தின் குறை அது என்பது அவர்தம் கருத்து.[1]

பிற்பட்ட வேதங்களின் காலத்தில், யாகம் பெருவேள்வியாக வளர்ந்தது. முறையாகச் செய்யப்பெறும் வேள்வியே உலக முறையைக் காப்பதாகக் கருதினர். ரிக்வேத ருத்திரனும் சிந்துவெளிச் சிவனும் ஐக்கியமடைந்தனர்; ரிக்வேதக் கடவுளரில் பலர் தம் மகிமையை இழந்தனர் சிவனும் விஷ்ணுவும் பெரும் புகழ் எய்தினர்.

யமன், தந்தையர் உலகக் காவலனாக விளங்குகிறான் என்றும், முறையாக வேள்வி செய்து அறவாழ்வு வாழ்ந்தோர் அங்குச் சென்று பேரின்பம் துய்ப்பர் என்றும் ரிக்வேதம் சாற்றியது. ஆனால் மறு பிறப்பைப்பற்றி அதில் ஒரு குறிப்புமில்லை. மறுபிறப்புக் கொள்கை பிருகதாரணியக உபநிடதத்திலேயே முதன் முதல்ல் இடம் பெறுகிறது. ஆசையால் கருமம் உண்டாகிறதென்றும், கருமத்தின் பயன்களை நுகரும் பொருட்டு ஒன்றன்பின் ஒன்றாகப் பிறவிகளை எடுக்க வேண்டியதாகிறதென்றும், இந்தப் பிறப்பிறப்பு வட்டமான சம்சாரத்திலிருந்து விடுதலை பெறுதலே பிறப்பிறப்பற்ற நிலையான முக்தியென்றும் உபநிடத ஞானிகள் மெய்யுணர்வால் கொண்டனர். இத்தகைய கொள்கையின் கரு, ஆரியர் வருகைக்கு முன்பே சிந்துவெளியில் விளக்கம் பெற்றிருக்கலாம். அல்லது, ஆரியரும் பண்டைய இந்தியரும் உறவாடிக் கலந்தபோது உண்டான அறிவுக் கிளர்ச்சியால் இந்த மெய்யுணர்வு மலர்ந்திருக்கலாம்.

3. உபநிடத ஞானம்

சம்சாரம், முக்தி முதலிய கொள்கைகளுக்கு அடிப்படையாக உள்ளது. பிரமம் ஆன்மா என்பன பற்றிய மெய்யறிவாம்,

1. *ரிக்வேதம், X.129*
2. *X.14.*

அங்கிங்கெனாதபடி, எங்கும் பரந்து ஒளிமயமாய், அனைத்திற்கும் அடிப்படையாய், ஆதி மூலமாய் அமைந்தது பிரமம். ஒவ்வொருவருக்கும் உள்ளே நின்று இயங்கும் பொருள் ஆன்மாவாம். பிரமமும் ஆன்மாவும் ஒன்றே என்பது உபநிடதஞானம். 'நீயேஅஃது'[1] என்ற சாந்தோக்கிய உபநிடத மகா வாக்கியமே உபநிடதங்களின் தலைமைப் பொருள். பருப் பொருள்களில் தொடங்கி, இதுவன்று, இதுவன்று (நேதி,நேதி) என்று ஒன்றொன்றாக விலக்கி, இறுதியில், யாவற்றுக்கும் சூட்சுமமாய் விளங்குவதே உண்மைப் பொருள் என்று ஓதுவர் உபநிடதப் பெரியார்.[2] ஆலமரத்தின் உயிர்ப் பொருள் அதன் விதையில் கட்புலனாகாது உள்ளது போலவும், நீரில் கரைந்த உப்பு அதற்குச் சுவை கூட்டிய போதிலும் கட்புலனாகாதிருப்பதைப் போலவும், அனைத்தின் வாழ்வுக்கும் ஆதாரமாகப் பிரமம் இலங்குகிறது என்பர்.[3] அஞ்ஞானத்தால் பீடிக்கப்பட்ட உயிர் இதனை உணராது, யான், எனது என்னும் செருக்கோடு சம்சாரச் சக்கரத்தில் சுழல்கிறது. அறியாமை நீக்கி அவா அறுத்த உயிர்,[4] தான் ஆன்மா அல்லது பிரமமே என்பதைத் தெளிந்து வீடு பேறு எய்தும். அதுவே மனிதப் பிறவியின் உயர் நோக்கும் உயிர்ப் பயனுமாம்.

வைதிக இலக்கியத்தில் முதன் முதலாக கேன உபநிடதத்தில்தான் உமையம்மையைக் காண்கிறோம்; அவர் தோற்றத்துக்கு வாய்ப்பாக அமையும் பின்புல நிகழ்ச்சி சுவையானது (III.IV-I) அசுரரை வென்ற தேவர் ஆணவமுற்றனர். அவர்தம் அறியாமையை அவர்க்கு உணர்த்த வேண்டி, யட்ச வடிவத்தில் தோன்றியது பிரமம். அந்த உருவத்தைக் கண்டு அமரர் திகைப்புற்றனர். அக்கினி தேவன் அதனிடம் சென்று அனைத்தையும் எரிக்கவல்ல ஆற்றலுள்ளவனாகத் தன்னை அறிமுகம்

---

1. *தத் தவம் அஸி (தத்துவமசி) என்பது மூலம் (VI,8,7).*
2. *பிருகதாரணிய உபநிடதம், IV,4,22.*
3. *சாந்தோக்கிய உபநிடதம், VI,12-13.*
4. *'வேதாந்தமாவது வேட்கை ஒழிந்திடல்' என்பர் திருமூலர் (79)*

செய்து கொண்டான். ஆனால் அந்த விநோத வடிவன் தந்த காய்ந்த புல் இதழை எரிக்க முடியாது மானமிழந்து மீண்டான். அடுத்துச் சென்ற காற்றுக் கடவுளும் வைக்கோல் துண்டை அசைக்க முடியாது வெட்கித் தலைகுனிந்து திரும்பினான். அதன்பின் அமரர் சார்பில் அங்கு இந்திரன் வந்தபோது. அந்த நூதன வடிவத்தைக் காணோம். அங்கு மெய்ஞ்ஞானத்துக்குத் தலைவியான உமையம்மை நின்றார். முன்னர் இங்கு நின்றவர் எவர் என்று இந்திரன் உமையை வினவ, ''அது பிரமம். பிரமத்தின் அருளாலேயே நீங்கள் அசுரரை வென்றீர்கள்'' என்று மொழிந்தார் உமை. அதன்பின் தேவர் தம் பேதைமையை உணர்ந்து, பிரமம் பற்றிய மெய்யறிவைப் போற்றினர். வேதகாலத் தெய்வங்களுக்கு ஏற்பட்ட தாழ்வும், பரம் பொருளான பிரமமே உமை எனும் அன்னை பராசக்தி என்ற தெளிவும் இந்தக் கதையில் விளக்கம் பெறுகின்றன.

மோட்சத்திற்கு துறவறம் இன்றியமையாதது என்று உபநிடதம் கூறவில்லை. அரியணையில் அமர்ந்து அரசு புரிந்தோரும் பிரமஞானம் பெற்றனர் என்பதை உபநிடதங்களில் காண்கிறோம். யாஞ்ஞவல்கியர் இல்லறத்தில் நின்றபோதே பிரமஞானியாக ஒளிர்ந்தார். நிலையாப் பொருள்பாலுள்ள இச்சையை நீக்கியும், தன்னில் பிறரையும் பிறரில் தன்னையும் காணும் தெளிவு எய்தியும் முதிர்ச்சி பெறுவதே முக்திக்கு வழி. இதற்கு முதல் தேவை தரும வாழ்வு. அறவழியில் தேர்ச்சி பெறாதவனுக்கு ஆத்மஞானம் கிட்டாது என்பது உபநிடதக் கொள்கை. மேலும் ஒருவன் தன்வினையின் பயனைத் துய்த்தேயாக வேண்டுமென்ற கொள்கை உலக வாழ்வில் நன்னெறியில் படர்வதற்குத் தூண்டு கோலாகும். தவிர, இல்வாழ்வுக்குரிய அறநெறிகளையும் உபநிடதம் பேசும். தன் பணியை ஆற்றியும், வாய்மை பயின்றும், வேதம் ஓதியும்–, வமிசம் விளங்கச் செய்தும், தேவர்க்கும் பிதிரர்க்கும் கடன் இறுத்தும், தாய் தந்தையரையும் ஆசானையும் அத்தியையும் தெய்வமாகப் போற்றியும் வாழ வேண்டுமென்று கூறும் தைத்திரிய

உபநிடதம் (I.11). பிருக தாரிணிய உபநிடதத்தில் வரும் நீதிக்கதை[1] (V,2) தன்னடக்கம், கொடை, கருணை என்னும் மூன்று பண்புகளை வற்புறுத்தும். எனினும், பிரமஞானம் எய்துவதே அரிது என்பதும், உலக இயல் வாழ்வின் இன்ப துன்பங்களுக்கிடையே அதனை அடைவது அரிதினும் அரிது என்பதுமே உபநிடதங்களின் அடிப்படைக் கொள்கை.

சிக்கல் மிகுந்த திருவினைகள் நிறைந்த வேள்வி நெறியால் ஏற்படும் பொருள் விரயத்தையும், இடையறாத போர்களால் உண்டாகும் படுகொலையையும் தவிர்த்து இல்வாழ்வு நடத்த விரும்பிய பொது மக்களால் உபநிடத நெறியில் படர முடியவில்லை. யாவரும் எளிதில் கடைப்பிடிக்கத்தக்க அறநெறியை வகுப்பது இன்றியமையாப் பணி ஆயிற்று. அந்த வரலாற்றுப் பணியை நிறைவேற்றினார் பாரதம் கண்ட தன்னேரில்லாப் பெருமகனான கௌதம புத்தர்.

4. புதிய நெறிகள்

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் அறிவுத்துறையிலும், ஆன்மிகத் துறையிலும் பெருங்கிளர்ச்சியைக் கண்டது கங்கை வெளி. பலவகையான கொள்கைகள் தோன்றின. மண், காற்று, நீர், தீ என்னும் நான்கு பூதங்களின் சேர்க்கையாலேயே மனிதன் அமைகிறான் என்றும், மனிதன் மாண்டு மயானத்தில் எரிந்த பின்னர் மிஞ்சி நிற்பது ஏதுமில்லையென்றும் அறுதியிட்டு

---

1 பிரஜாபதியின் புதல்வரான தேவர், மனிதர், அசுரர் என்னும் மூவகையினரும் ஓர் உபதேசம் அருளிச்செய்யுமாறு அவரிடம் தனித் தனியே சென்று கேட்டனர் மூவகையினரிடமும் த என்ற ஒலியை இசைத்துப் பொருள் விளங்குகிறதாவென்று அவர் வினவினர். புரிந்ததாக மூவரும் கூறினர். ''தம்யதா (தன்னடக்கம் பேணுக) என்று தேவரும், 'தத்த' (கொடு) என்று மனிதரும், 'தயத்துவம்' (இரக்கம் காட்டுக) என்று அசுரரும் அந்தத் 'த' ஒலிக்குப் பொருள் கொண்டனர். மூன்றுமே சரியானவை என்றார் பிரஜாபதி. இந்தக் கதையைக் கூறி, இறையருள் பெற்ற இடிகூடத் தன்னடக்கம், தானம், தயை என்ற மூன்றையும் வற்புறுத்தவே த, த, த என்று ஒலிப்பதாகவும் யாவரும் அம்மூன்று பண்புகளையும் பயில வேண்டுமென்றும் அந்த உபநிடதம் ஓதும்.

உரைத்தான் அஜித கேசகம்பளன்.[1] அவனது கொள்கை முழுமையான நாஸ்திகமாகும். வேதம், வேள்வி, கொடை முதலியவற்றால் விளைவது ஒன்றுமில்லை என்பது அத்துறவியின் முடிவு. ஒருவன் எதைச் செய்தாலும் பாவமோ புண்ணியமோ விளைவதில்லை என்னும் கொள்கையில் அஜிதனுக்கும் பூரணகசியபன்[2] என்னும் துறவிக்கும் வேறுபாடு இல்லை. ஆயினும் வினைப்பயனை மறுத்த கசியபன், மனிதன் மாண்டபின் ஆன்மா எஞ்சியிராது என்று கூறவில்லை. ஆசீவகம் என்னும் நெறியைக் கண்ட கோசாலன்[3] என்னும் துறவியும் வினைப்பயனைப் பற்றிய கொள்கையை மறுத்தான். எல்லாம் ஊழின் வலியால் நிகழ்வதாகவும் மனித முயற்சியால் நடைபெறுவது யாதுமில்லையென்றும் கூறினான் கோசாலன். ஒவ்வொருவனுமே எண்பத்துநான்கு லட்சம் பிறப்பு எடுத்தாக வேண்டு மென்றும், தன் சீலத்தாலோ தவத்தாலோ ஒருவன் பிறவாப் பேற்றை அடைய முடியாதென்றும் கோசாலன் கருதினான். நூற்கண்டை எறிந்தால், நூல் முழுவதும் பிரியும் வரையில் அது உருளுவது போல, அனைவருமே சம்சாரச் சக்கரம் முழுமையும் சுழன்று முடிக்க வேண்டுமாம். இவ்வாறு அவன் வினைப்பயனை மறுத்தபோதிலும், அவனும் அவன் வழியினைத் தழுவிய துறவிகளும் கடுந்தவம் புரிந்தனர். ஆசீவக குழுவினை உருவாக்குவதில் கோசலனோடு பூரணகசியபனும் பகுத

---

1. கேசத்திலான கம்பளத்தை உடுத்தியதால் அஜிதன் கேச கம்பளன் என்று குறிப்பிடப் பெற்றான் என்பர். அஜிதன் குழுவினருக்கு அதுவே சீராடை என்று ஊகிப்பார் பாஷம் (பக்.298). அஜிதன், கசியபன் முதலியோரின் கொள்கைகளைப் பௌத்த நூல்களிலிருந்தே அறிகிறோம்.

2. மானிட முயற்சியால் பயன் ஏதுமில்லை என்று கசியபன் கூறியதால் அவனது கொள்கையைச் 'செயல் வேண்டா வாதம்' (அக்கிரியை வாதம்) என்பார்.

3. ஆசீவகக் கொள்கைகளை, அவற்றை மறுத்துரைக்கும் பௌத்த, ஜைன நூல்களிலிருந்தே உய்த்துணர்கிறோம்.

கச்சாயனும்[1] பங்கு பற்றினர் என்று தெரிகிறது. மற்றொரு கொள்கையை விட்சேபவாதம் என்று குறிப்பிடும் பௌத்த இலக்கியம். ''மேல் உலகம் உண்டா? தேவர் நரகர் என்னும் உயிர்கள் உளவா? நற்செயலுக்கும் தீச்செயலுக்கும் பயன் முதிருமா, முதிராதா? மாண்டபின்னர் ஒருவன் ஆத்மா எஞ்சியிருக்குமா, இருக்காதா? முதலிய பத்து வினாக்களுக்குத் திட்டமான விடைதர முடியாது'' என்று கூறுவான் சஞ்சயபேலட்ட புத்தன் என்னும் விட்சேபவாதி (விட்சேபம்–கலக்கம்). இவற்றையெல்லாம் மங்கச் செய்தவை ஜைனமும் பௌத்தமும் ஆம்.

5. ஜைன மரபின் பெருமை

புத்தர் காலத்தில் வாழ்ந்த மகாவீரரை இருபத்து நான்காவது தீர்த்தங்கரர்[2] என்று ஜைனர் கூறுவர். முதல் தீர்த்தங்கரரான ரிஷபதேவரே ஜைனத்தின் அடிப்படையான அகிம்சா தருமத்தை அருளியவர் என்பர். சிந்து வெளியில் ஜைனமதம் வழங்கியதென்ற கொள்கையும் உண்டு. பார்சுவநாதர் பற்றி வரலாற்றுச் சான்று உண்டு. அவர் கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்பது மரபுரை. கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, அவாவின்மை என்னும் நான்கு விரதங்களை உபதேசித்தார் பார்சுவ முனிவர். அவற்றோடு பிரமசரியம் என்னும் ஐந்தாம் விரதத்தையும் சேர்த்துக் கொண்டார் மகாவீரர்.

---

1. பகுத கச்சாயனனின் கொள்கையை அன்னியோன்ய வாதம் என்பர். மண், நீர், தீ, காற்று, இன்பம், துன்பம், உயிர் என்னும் ஏழு பொருள்களும் அசையாதும் மாறாதும் உள்ளன என்றும், அவற்றை எவரும் படைத்தாரல்லர் என்றும், அவற்றை எவரும் ஏதும் செய்ய முடியாதென்றும், ஒருவன் தலையை வாள்வெட்டும் போதும் அந்த ஏழு பொருள்களுக்கிடையிலுள்ள வெளியில் படைக்கலம் செல்கிறதேயன்றி, அவனது உயிரை அது அழிக்கவில்லை, அழிக்கவும் முடியாது என்றும் அன்னியோன்ய வாதம் கூறும்.

2 தீர்த்தங்கரர்–பிறவிப் பெருங்கடலிலிருந்து ஆன்மாக்களைக் கரையேற்றுவோர்.

ஜீவப்பொருள்கள், அஜீவப்பொருள்கள் என்ற இரு வகையால் அமைந்தது உலகம் என்று ஜைனதரிசனம் கூறும். தாவரப் பொருள்கள் ஓர் அறிவு உடையன; விலங்குகள் இரண்டு, மூன்று, நான்கு, அல்லது ஐந்து அறிவு உடையன; மனமாகிய ஆறாவது அறிவைவும் உடையவர் மக்கள், தேவர், நரகர் ஆகியோர்.[1]

ஒவ்வொர் ஆன்மாவும் தன் பழவினைக்கேற்ற பிறவி எடுத்து வினைப்பயனை நுகர்கிறது என்றும், பிறப்பிறப்புச் சுழலிலிருந்து விடுபடுவதே பெரும் பேறு என்றும் ஜைனம் செப்பும். கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, அவா அறுத்தல், பிரமசரியம் என்னும் ஐந்து விரதங்களையும் மேற்கொண்டு முற்பிறவியின் வினைகளைக் கரைத்து முக்தி எய்துவதே ஜைன நெறி. பரம்பொருளில் ஜைனருக்கு நம்பிக்கையில்லை. எனவே கடவுட் கருணையைப் பற்றி ஜைனம் பேசாது. மனிதன் தன் முயற்சியாலேயே பழவினையைக் கரைத்தும் புதிய வினைக்கட்டைத் தவிர்த்தும், 'வானோர்க்கு உயர்ந்த உலக' மான வீட்டுலகத்தில் புக வேண்டும். அவா அறுப்பதற்குத் துறவிகள் உண்டி சுருக்கிக் கடுந்தவம் புரிவர்.[2]

இல்லறம் ஓம்பும் ஜைனரைச் சிராவகர் என்பர். அகிம்சை, வாய்மை, கள்ளாமை என்ற விரதங்களோடு அவா அறுத்தலுக்குப் பதிலாக மிகு பொருள் விரும்பாமையும் பிரமசரியத்துக்குப் பதிலாகக் கற்புடைமையையும் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களாம். சிராவகரோ சன்னியாசியோ, எந்த ஜைனருக்கும் கொல்லாமையே முதற்பெரும் விரதமாம்.[3] அகிம்சையை ஒழுக்கத்தின் ஆணிவேராகச்

---

1. இவற்றின் விளக்கத்தைத் தொல்காப்பியத்தில் காணலாம் (பொருள் 582-88).

2. ஆடையும் உடுத்தாத் துறவிகள் திகம்பரர் ஆவர். சுவேதாம்பரர் வெள்ளை ஆடை உடுத்தினர்

3. 'ஒன்றாக நல்லது கொல்லாமை, மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று' (323) என்ற குறளில் இக்கருத்தைக் காணலாம் (ஒன்று ஆக-தனக்கு ஒப்புவமை இல்லாததாக. மற்று அதன் பின்சார-அஃது ஒழிந்து அதன் பின்னே).

செய்து இந்தியப் பண்பாட்டை உயர்த்திய பெருமை ஜைனரையே சேரும். இந்நாட்டு ஒழுக்கம் ஜைனரின் அகிம்சையால் ஏற்றம் பெற்றது போலவே, இந்நாட்டுச் சிந்தனை ஜைனஞானிகளின் அளவையியற் கொள்கையால்[1] வளம் பெற்றது. அக்கொள்கையை சியாத்வாதம் ('இருக்கலாம்' கொள்கை) என்பர். அது ஒரு பொருளைப் பலவேறு நோக்கில் அறிய முற்படுவதால், அதனை அனேகாந்த வாதம் என்றும் கூறுவர். ''உண்டாம்; இல்லையாம்; உண்டும் இல்லையுமாம்; சொல்லொணாததாம்; உண்டுமாம் சொல்லொணாததுமாம்; இல்லையுமாம் சொல்லொணாததுமாம்; உண்டும் இல்லையுமாம் சொல் லொன்ரததுமாம்'', என ஏழு வகையில் 'ஒரு பொருள் உண்டா?' என்ற கேள்விக்குச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு விடை கூறலாம் என்பதே அனேகாந்தவாதம். இது ஏழு பிரிவு உடையது என்பதால் சப்தபங்கி என்றும் பெயர் பெறும். ஒன்றுக்கொன்று முரணாகவும் முன் பின் முரணாகவும் இந்த விடைகள் தோன்றலாம். ஆயினும் வெவ்வேறான நோக்கில் வெவ்வேறு விடையும் உண்மையே என்பர் ஜைனர். அறிவின் சார்பு நிலையை வலியுறுத்தும் இந்தக் கொள்கையை மறுத்துரைப்பது எளிதாயிருக்கலாம். ஆனால் அனேகாந்தவாதத்தால் விளைந்த நன்மை பெரிது. எதையும் அறுதியிட்டு உறுதியாகச் சாற்ற முடியாது என்பதால் அது அடவாதத்துக்கு இடம் தரவில்லை, மேலும், எல்லா அறிவுமே 'உண்மையாக இருக்கலாம்' என்றே கூறத் தக்கதெனில்; ஒரு நோக்கில் உண்மையாக இருப்பதே வேறு நோக்கில் மாறு படலாமெனில்;[2] எதிரியின் கருத்தும் தன் கருத்தைப்போல் உண்மையானதாயிருக்கலாம். எனவே, மாற்றுக் கொள்கையை மதித்து நடக்கும் மேன்மை போற்றப் பெறுகிறது. மேலும், உலகம் நாம் நினைப்பதை விடச் சிக்கலாகவும்

---

1. *உண்மையான அறிவு எவ்வாறு ஏற்படுகிறது? அறிவின் தன்மை யாது? அறிவின் மெய்ம்மை, பொய்ம்மைகளைத் துணிவதும், அளப்பதும் எப்படி? - அளவை இயற்கொள்கை* (Epistemology) *இந்த் வினாக்களை எழுப்பி விடை காண முற்படுகிறது.*

2. *எல்லா அறிவுமே தனிநிலை* (absolute) *இயல்பு உடையதாயில்லாமல் சார்பு நிலையாகவே* (relative) *உள்ளது எனில்.*

நுட்பமாகவும் உள்ளதை உணர்ந்த வகையிலும் சியாத்வாதத்துக்குச் சிறப்புண்டு. ஜைன மதம் இந்நாட்டில் தொடர்ந்து வாழ்வதற்கு, அதன் கொள்கைப் பிடிப்போடும், சிராவகர் நலனைப் பேணுவதில் அது புலப்படுத்திய அக்கறையோடும், சியாத்வாதக் கொள்கையின் பயனான இணங்கி வாழும் பண்பும் காரணமாகும். மேலும், பல்வேறு படி நிலைகளை உடையது உண்மை என்பதை உணர்வதாயும், முரணான பல்வேறு கொள்கைகளின் மெய்மையை மதிப்பதாயும், அனைத்துக் கொள்கைகளையும் ஒருசேரத் தழுவுவதாயும், பன்மையில் ஒருமை காண்பதாயும், பாரதப் பண்பாடு விழுப்பம் எய்துவதில் ஜைனரின் அளவைஇயற்கொள்கைக்குப் பெரும் பங்கு உண்டு.

6. புத்தர் கண்ட கொள்கை

கங்கை வெளியில், கூட்டுப் பொறுப்பைப் பெரிதும் பேணிய பண்டைய குல அமைப்பு அழிந்து, தனி உடைமைக்கு நிறைவுரிமை வழங்கிய புதுமையான பிரதேச அரசுகள் தோன்றிய சூழலில் திகைத்துச் சோர்ந்த அஜிதன், பகுதன், கசியபன், சஞ்சயன் முதலியோர் மானிடர் செயலால் பயனில்லை என்றனர்; கோசாலனோ, இனங்காண முடியாத விதி அல்லது நியதி எல்லா நிகழ்ச்சிகளுக்கும் காரணம் என்றான். உலக வாழ்வைப் பொறுத்த மட்டில், ஜைனத்திலும் சோர்வு வாதம் இழையோடியது. பௌத்தமும் இதற்கு விதி விலக்கல்ல. உலக வாழ்வு துக்க மயமானது என்பதே கௌதம புத்தர் கண்ட முதல் பேருண்மை. ஆனால் அறிவுக்கு விளங்காத பொருளைப் பற்றி சித்தாந்த வாதங்களில் ஈடுபட மறுத்தார் புத்தர் பெருமான். "உலகம் எவ்வாறு உண்டாயிற்று? மனிதன் மாண்டபின்னர் எவ்வாறு இருப்பான்?" முதலிய வினாக்களுக்கு விடைகாணும் முயற்சியில் இறங்குவதற்கு அவர் உடன் பட்டாரில்லை. அதுவே, அவரது அறிவுத் தேட்டத்தின் முதற் புதுமையாகும். இரண்டாவதாக, காரணமின்றிக் காரியம் ஏதும் நிகழ்வதில்லை என்ற உண்மையைத் தேர்ந்து தெளிந்து, உலக வாழ்வை விஞ்ஞான நோக்குடன் ஆய்வதற்கு முற்பட்டார். அவர் கணிப்பும்

கொள்கையும் மனோதத்துவ ஆராய்ச்சி வழியில் அமைந்தன. மூன்றாவதாகச் சுகபோக வாழ்வு கூடாது என்று கூறுவதைப் போலவே, கொடிய விரதங்களை மேற்கொள்வதும் தேவையில்லை என்று உரைத்து, இரண்டுக்கும் இடைப்பட்ட வழியினைக் காட்டினார். யாவரும் அறநெறி பயின்று முறையான வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற வழி அது.

நான்கு பேருண்மைகளை[1]த் தாம் கண்டதாகக் கூறுவார் புத்தர். அவை துக்கம், துக்க காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்பன. பிறப்பும், இறப்பும், பிணியும், மூப்பும், வெறுப்பானவற்றின் தொடர்பும், உகப்பானவற்றின் பிரிவும், நாடிய பொருளை அடையாமையும் துன்பம் தருவன என்பது முதற்பேருண்மை. இந்தத் துக்கத்துக்குக் காரணம் வேட்கையே என்பது இரண்டாம் பேருண்மை. தன்னலம் நாடும் பலவகையான தூண்டலும் வேட்கையே. அறியாமையே வேட்கைக்குக் காரணம். வேட்கையை அழித்தால் துக்கம் நீங்கும் என்பது மூன்றாவது பேருண்மை. வேட்கையை அழிக்கும் வழி உள்ளது என்பது நான்காவது பேருண்மை. அதுவே அஷ்டாங்க (எண் வகை) மார்க்கம் எனப்பெறும். அவ்வழியின் எட்டுப் படிகளாவன:– நற்காட்சி, நல்வாய்மை, நன்னடத்தை, நல்வாழ்க்கை நன்முயற்சி நல்லுறுதி, நல்நினைவு, நல்தியானம்.

நான்கு பேருண்மைகளையும் ஆய்ந்து அறிந்து தெளிவது[2] நற்காட்சியாம்; கற்றதன் வழி நிற்பதென்று உறுதி கொள்வது நல்லுறுதியாம்; இவை இரண்டும் அறிவுத்தெளிவை உறுதி செய்வனவாம்.

பொய், புறங்கூறல், இன்னாச்சொல், பயனில பேசுதல் ஆகியவற்றைத் தவிர்த்து, நல்லனவே பேசுதல் நல்வாய்மை; கொலை, களவு, புலனுகர்ச்சியில் அழுந்துதல் முதலியவற்றுக்கு இடம் தராது,

---

1. இவற்றை ஆரிய சத்தியங்கள் என்பார் புத்தர் (ஆரிய- உயர்ந்த)

2. ஏனைய நெறிகளின் தவற்றை உணர்வதும் அதனுள் அடங்கும்.

நலமே புரிதல் நன்னடத்தை; கண்ணியமான தொழிலை நாணயமாகச் செய்து பிழைப்பதே நல்வாழ்க்கை, இவை மூன்றும் சீலம் பேணுவன.

அகத்தூய்மைக்காக இடையறாது முயலுதல் நன்முயற்சி; அத்தூய்மையை விழிப்பாகக் காப்பது நல்நினைவு; நல்லனவற்றையே எண்ணிக் கொண்டிருத்தல் நல்தியானம்; இவை மூன்றும் மனத்தை ஒருநிலைப்படுத்துவனவாம்.

இவற்றில் முதல் ஒழுக்கமே பௌத்தமதக் கோட்பாடுகளைக் குறிப்பிடுகிறது. ஏனையவற்றில் சமயச் சார்பான கொள்கை ஏதும் இடம் பெறவில்லை; அவையெல்லாம் விழுப்பம் தரும் ஒழுக்கத்தை மன இயல் வழியில் வகைந்துரைப்பனவே. உலகின் மூன்று இயல்புகள் துக்கம், அநித்தம், அநான்மா என்பதை அறியாமையே வேட்கைக்குக் காரணம் என்பர் புத்தர்.[1] இதில் அநான்மக் கொள்கையே உபநிடத மறுப்பாகப் புத்தர் கண்ட புதுமையாகும்.

உலகம் துக்க மயம். வழக்கமான வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் ஏதாவதொரு வகையில் துக்கம் துய்ப்பதைத் தவிர்க்க முடியாது. இதுவே துக்கம் என்னும் கொள்கை.

உலகம் நிலையற்றது. இதில் நிலையான பொருள் ஏதுமில்லை. ஒவ்வொரு பொருளும் இடைவிடாது மாறிக் கொண்டேயிருக்கிறது. மனிதனும் கணந்தோறும் மாறுபடுகிறான். அழியாப் பொருளான ஆன்மா தன்னிடம் குடிகொண்டிருப்பதாக மனிதன் எண்ணுவது மருளே. உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் ஐவகைக் கந்தங்களால் அமைந்தவனே மனிதன்.[2] உருவம் என்பது சடப்பொருள். வேதனை என்பது சுகமும் துக்கமும் - அவ்விரண்டின் கலப்புமான உணர்ச்சி. குறிப்பு என்பது ஐம்பொறியும் மனமும் தரும் உணர்வு.

---

1. *அநித்தம் - நிலையில்லாதது. அநான்மா - ஆன்மா அற்றது.*

2. *"உருவு, நுகர்ச்சி, குறிப்ப, பாவனை, உள்ள அறிவு, இவை - ஐங்கந்தம் ஆவன" (30:189-190) என்று மணிமேகலை இதனைக் குறிப்பிடும். இங்கு நுகர்ச்சி என்றது வேதனையை; உள்ள அறிவு என்றது விஞ்ஞானத்தை, கந்தம் ஸ்கந்தம்) - கூட்டம்.*

பாவனை என்பது மனமொழி மெய்களால் உண்டாகும் புண்ணிய பாவத்தின் பதிவு. விஞ்ஞானம் என்பது ஏனைய நான்கு கந்தங்களின் நிலையை மதிப்பிடும் அறிவு. ஐவகைக் கந்தங்களும் மாறுதல் அடைந்த வண்ணம் உள்ளன. இதுவே அநித்தக் கொள்கை. மனிதனுக்கு ஆன்மா இல்லை என்பது போலவே, பிரபஞ்சத்துக்கும் ஆன்மா இல்லை என்பதே புத்தர் நிலை. எனவே, பிரமம் என்னும் பரமான்மாவைப் பற்றி உபநிடதம் பேசுவதும் மயக்கத்தின் பாற்பட்டதே என்பர்.

ஆக, தன்னியல்பு (சுபாவம்) உடைய மெய்ப்பொருள் என்று ஒன்றும் இவ்வுலகில் இல்லை. உலகமே 'உளதாகும் தன்மை' (being) உடையதன்று; 'ஆதல் தன்மை'யே (becoming) உடையது. அகப் பொருள்; புறப் பொருள் என்றெல்லாம் நாம் குறிப்பிடுவது, இடைவிடா மாறுபாட்டுக்குரிய நிகழ்ச்சிகளின் கோவைக் கோலங்களையே. காரணகாரியத் தொடர்பாக அந்நிகழ்ச்சிகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. தனிமங்களான அந்த நிகழ்ச்சிகள் என்ற தருமங்களின் [1] கணநேரத் தொகுதிகள் இடைவிடாது மாறுவதையே மனநிலை, சடப்பொருள் என்றெல்லாம் கூறுவோம்; மனிதன், மிருகம், பறவை என்றெல்லாம் குறிப்பிடுவோம். இவையெல்லாம் வசதியான இடுகுறிப் பெயர்களே; மெய்ப் பொருள்களைக் குறிப்பன அல்ல. பல்வகையான மரத்துண்டுகளையும் ஆணிகளையும் கொண்டு செய்த கூட்டுப் பொருளை நாற்காலி என்று குறிப்பிடுவதைப் போல, நான், நீ, அவன், இவன், அது, இது என்பனவெல்லாம் வழக்கமான குறியீடுகளே.

அவ்வாறு எனில், மறுபிறவியைப் 'பற்றிப் பேசுவது பொருளுடைத்தாமோ என்று வினவலாம். மறுபிறப்பெடுப்பது ஆன்மாவன்று, கருமத்தின் பயனாக அமைந்த தருமங்களே. ''கருமமே என் உடைமை; கருமமே என் உரிமைப் பங்கு; கருமமே என்னைப் பிறப்பித்தது; கருமமே என் உறவு; கருமமே என் காப்பு'' என்று துறவிகள் அடிக்கடி எண்ண வேண்டுமென்பார் புத்தர். ஒருவன் என்ன

1 தருமம் என்பதற்கு இப்பொருளும் கூறுவது பௌத்த நெறி ஒன்றே.

கருமம் புரிகின்றானோ அதுவாகவே அவன் ஆகிவிடுகிறான். அவன் இறக்கும்போது அவனிடம் உண்டாகியுள்ள ஆசைகள், பற்றுக்கள், உணர்ச்சிகள், உணர்வுகள் முதலிய தருமங்களென்னும் பண்புகள் வேறோர் உடலைத் தேடிக் கொள்கின்றன. அப் பண்புகளின் பயனைப் புதிய மனிதன் நுகர்கின்றான். எனவே மாண்டவனின் வினைப்பயனைப் புதிய மனிதன் துய்க்கிறான். இளமையில் கெட்டலைந்தவன் அதன் பயனாக முதுமையில் நோயுறுகிறான் என்றாலும், கெட்டலைந்த இளைஞனும் நோயால் துன்புறும் முதியோனும் வேறு வேறு ஆட்களே. அதுபோல் முற்பிறவியின் பயனைப் புதிய மனிதன் நுகர்கிறான்.[1]

நிலையானது நிருவாணம் எனப்பெறும் மோட்சமே. அந்த வீடு பேற்றை மானிட மொழியால் விளக்க முடியாது. அகலில் உள்ள எண்ணெயும் திரியும் தீர்ந்தவுடன் எரித்தல் நிகழ்ச்சி நின்றுவிடுவதைப் போல, விறகெல்லாம் எரிந்த பின்னர் நெருப்பு அணைந்து விடுவதைப் போல, மறு பிறப்புக்குக் காரணமான பண்புகள் அழிந்தவுடன், நிருவாணம் என்னும் நிலை கிட்டுகிறது என்றே கூறலாம். ''ததாகதர்[2] இறந்தபின், அவருக்கு என்ன நேர்கிறது? அவர் தொடர்ந்து உளரா? இலரா? உளராயும் இலராயும் ஆவரா? உளராயில்லாதும் இலராயில்லாதும் ஆவரா?'' என்னும் கேள்விகள் புத்தர் காலத்திலேயே எழுந்தன. அந்த நான்கு வினாக்களுக்கும் புத்தர் விடை கூற விரும்பினாரில்லை. அந்த வினாக்களை விடுப்பதே அறியாமையின் பாற்படும் என்பது அவர் கருத்தாகலாம். விறகெல்லாம் எரிந்த பின்னர்

---

1. நல்வினையே ஆற்றும் மக்கள் தாம் மாண்டபின் உண்டாகும் பிறவிகள் ஏற்றம் பெறுவதற்கு அடிகோலுகின்றனர். இவ்வாறு புத்தரின் மறுபிறப்புக் கொள்கை தன்னலத்திற்கு உறுதி தேடாது பொறுப்பாண்மைக் கொள்கைக்கு (principle of trusteeship) அரணாகிறது. வருங்காலத் தலைமுறையினரின் பெருமை சிறுமைகளுக்கு நாம் பொறுப்பாளர் (trustees) என்ற உணர்வோடு செயலாற்றும் தெளிவைத் தரும் கொள்கை அது. எனவே, புத்தர் நெறியில் நிற்போன் தன் கால மக்களுக்குத் தொண்டாற்றுவதோடு பிற்காலத் தலைமுறைக்கும் தொண்டாற்றுகிறான்.

2. ததாகதர் – புத்தர்

நெருப்பு எங்குச் செல்கிறது என்று அறிய முடியாது; அது போலவே, உடல் வடிவ வாழ்வுக்குரிய பொருளெல்லாம் – தனிமனிதன் என்று வழக்கமாகக் குறிப்பிடப் பெறும் நிலைக்கு முன் தேவையான பொருளெல்லாம் – அழிந்தொழிந்தவுடன், ததாகதர் எவ்வாறு இருப்பார் என்பதைக் கூறுவதும் முடியாத காரியம் என்பார் புத்தர்.

இதற்கும் மேல் ஆன்மாவைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் சிந்தாந்த வாதம் நடத்துவதற்கு ஆயிரம் வினாக்களை எழுப்பலாம். ஆனால் புத்தர் அவற்றுக்கு விடைதர விரும்பார். மானிட அறிவுக்கு விளங்காதவற்றைப் பற்றி வரைகடந்த தத்துவ ஆய்வு நிகழ்த்திக் கற்பிதக் கொள்கைகளையும் ஊகங்களையும் மோத விடுவதால் யாது பயனுமில்லை என்பது புத்தர் நிலை. அவ்வாறு நேரத்தை விரயம் செய்யாது, துக்கம், துக்க காரணம், துக்க நீக்கம், துக்க நீக்க வழி என்னும் பேருண்மைகளைப் புரிந்து தெளிந்து, அட்டாங்க மார்க்கத்தில் படர்ந்து நிருவாண நிலைக்காக முயல வேண்டுமென்று அவர் ஓதுவார்.

அவாவே மறுபிறவிக்குக் காரணம். யான், எனது என்னும் ஆசாபாசங்களை அழிக்கும் முறையில் துறவி வாழ வேண்டும். தான் வேறு, உலகம் வேறு என்ற உணர்வு நீங்கும்போது, துறவிக்குப் பிறரிடம் அன்பு சுரக்கின்றது. அறியாமை அல்லது மோகம் காரணமாகப் பிறக்கும் அவாவேறு; தன்னலமழித்த இதயத்தில் பெருகும் அன்பு வேறு. அவாவால் துராசை பிறக்கும்; அன்பு ஈனும் ஆர்வத்தில் அவனி வாழ்வோர் அனைவரையும் தோழராகக் கருதும் மைத்திரி (நட்பு) உதிக்கும். எனவே, அரசமரத்தடியில் மெய்ஞ்ஞானம் பெற்றுப் புத்தரான கோதமர் உலக நன்மைக்காகப் பல்லாண்டு பாடுபட்டார்; தம் பணி தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்வதற்குத் துறவிகளின் சங்கமும் அமைத்தார். ''மக்களின் நன்மைக்காகவும் இன்பத்துக்காகவும் நீங்கள் நான்கு திசைகளிலும் செல்லுங்கள். ஒரே வழியில் இருவர் போகாதீர்கள்'' என்று அவர் துறவிகளுக்கு வழங்கிய அறிவுரை அவர்களின் கடமையை உணர்த்துவதாகும். அனைத்து உயிர்களும் நன்னெறியில் ஆனந்தமாக வாழ வேண்டுமென்று துறவிகள் தியானிப்பர் ஒரே மகனைப் பெற்ற அன்னை அவனிடம் எவ்வாறு

அன்பு சொரிவாளோ அவ்வாறு துறவி அனைத்து உயிர்களிடத்தும் அன்புகொள்ள வேண்டும் என்று ஓதும் பழைய திருநூலான ஸுத்தநிபாதம்.

துறவிகளோடு துறவாதவரும் கையாளக்கூடிய அறநெறிகளைப் புத்தர் வகுத்தார். அவற்றில் சிறப்பிடம் பெறுவன ஐந்து சீலங்கள்: கொல்லாமை (அகிம்சை), கள்ளாமை, காமமில்லாமை, பொய்யாமை, கள்ளுண்ணாமை[1]. கொல்லாமை என்பது எவர்க்கும் இன்னா செய்யாமையே. கொன்று தின்னாது விலைக்கு வாங்கித் தின்பார்க்குக் குற்றமில்லை[2] என்று அகிம்சைக்கு விளக்கம் தந்து, புலால் உணவுக்குத் தடையில்லை என்பர் பௌத்தர். புத்தரே பன்றி மாமிசத்தை உண்டார் என்று சான்றும் காட்டுவர். எனினும், ஜைனருக்கும் அடுத்த நிலையில், பௌத்தரும் தம் அகிம்சைக் கொள்கை மூலம் மரக்கறியே உண்ணும் கொள்கைக்கு ஊக்கம் தந்தனர் என்பது பொருந்தும். கள்ளாமை என்பதில் திருடாமையோடு வஞ்சனையாகப் பிறர் பொருளை வெளவாமையும் அடங்கும். காமமில்லாமை என்றால் பிரமசரியம் என்று துறவிகளும் கற்புடைமை என்று துறவாதவரும் பொருள் கொள்ள வேண்டும். பொய்யாமையும் அட்டாங்க வழியில் இடம் பெறும் நல்வாய்மையும் ஒன்றே. மதுவிலக்கே ஐந்தாம் விதியில் போற்றப் பெறுகிறதென்றாலும், அத்துடன் சூது, சோம்பல், அகாலத்தில்

---

1. துறவிகள் இந்த ஐந்தோடு மேலும் ஐந்து சீலங்களைச் சேர்த்துக் கடைப்பிடிக்க வேண்டும். அந்த ஐந்தாவன:காலந்தவறி (மதியத்துக்குப்பின்) உண்ணாமை; ஆடல், பாடல், நாடகம் முதலியவற்றை விரும்பாமை; சந்தனம், மாலை, நகை முதலியனவற்றை தரியாமை; உயர்ந்த அல்லது அகன்ற படுக்கையில் கிடத்தலின்மை; பொன் வெள்ளிகளைத் தொடாமை.

2. இந்த வாதத்தின் நொய்ம்மையை ஜைனர் எடுத்துக்காட்டுவர்.

'தினற்பொருட்டால் கொல்லாத உலகு எனின், யாரும்
விலைப்பொருட்டால் ஊன் தருவார் இல்' (256)

என்றார் வள்ளுவரும். ஊனை உண்போர் இருப்பதால்தான், பிராணிகளைக் கொன்று ஊனை விற்பவர் இருக்கின்றனர். எனவே கொல்லாது விலைக்கு வாங்குவோரும் கொலைக்கு உடந்தையாகின்றனர் என்பது கருத்து.

ஊர்சுற்றுதல், தூர்த்தர் சேர்க்கை முதலியவற்றையும் இல்லறத்தார்[1] விலக்க வேண்டும்.

7. பௌத்த மரபின் வளம்

தம்மைப் பிறர் வழிபடுதலைப் புத்தர் விரும்பினாரல்லர். ''நான் போதித்த தருமமே உனக்கும் பிறர்க்கும் குரு. பொருள்கள் எல்லாம் அழிவனவே. நீங்களேதான் முயன்று விடுதலை பெற வேண்டும்'' என்று பரிநிருவாணம் அடைவதற்குமுன் புத்தர் இறுதியாக ஆனந்தனிடம் மொழிந்தார். ஆயினும் உயர்ந்தோரைத் தெய்வமாகப் போற்றுதல் இந்திய மரபு. அமரரான சான்றோர், உலகில் வாழ்வோருக்கு உறுதுணையாவர் என்பது வழிவழி வந்த நம்பிக்கை. எனவே, புத்தரையும் வழிபடும் வகையில் மும்மணிக்கொள்கை முன்னாளிலேயே தோன்றியது. துறந்தோர் துறவாதவர் என்னும் இருவகையினருமே,

புத்தன் சரணங் கச்சாமி
தருமம் சரணங் கச்சாமி
சங்கம் சரணங் கச்சாமி

என்று பரவுவர்.

பௌத்தம் உலகத்தை துக்கமயமாகக் கருதியதால், இந்திய சிந்தனையில் சோர்வு வாதம் இடம் பெறுவதற்கு அது உதவியது என்பது மெய்யே. ஆனால் புத்தர் நெறி அவர் அமரரான 200 ஆண்டுகளில் செல்வாக்குப் பெற்றதற்கும், அதற்குப்பின் 400 ஆண்டுகள் இந்திய மக்களை ஒற்றுமைப்படுத்தும் பெருஞ்சக்தியாக அமைந்ததற்கும், பின்னாளைய இந்து மதத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்ததற்கும், சோர்வுவாதம் காரணமாயிருந்திருக்க முடியாது. பார்க்கப்போனால், மெய்யறிவுத் தேட்டத்தில் அக்கறை உடைய சிறுபான்மையோரே துக்கம், அநித்தம், அநான்மா முதலிய

---

1. *இந்தத் தீ நெறிகளில் துறவி படர்வதற்கு இடமில்லை.*

கொள்கைகளை ஆராய்வதில் ஈடுபட்டனர். வேறு பலரிடம் பௌத்தத்தால் நம்பிக்கையே தளிர்த்தது; நல்லார்வமே வளர்ந்தது. அதற்கான காரணங்களைப் பின் வருமாறு ஊகிக்கலாம்:

1. சிந்தனை கடந்த பொருளைப் பற்றிய சித்தாந்த வாதத்தால் ஒரு பயனுமில்லை, மன அமைதியே குலையுமென்று எச்சரித்தார் புத்தர். இது அனுபவத்துக்கு ஒத்த கருத்தென்று அவர்கள் போற்றினர்.

2. எந்தக் கருத்தையும் எவர் கூறுகிறார் என்று பாராது, அதனை ஆராய்ந்து பார்த்துக் கொள்ளுவன கொண்டு தள்ளுவன தள்ளவேண்டுமென்பது புத்தரின் பொன்மொழி, நேர்மையை மதிக்கும் பெருமை உடையதாக இக்கொள்கையை அவர்கள் ஏற்றனர்.

3. சிந்தனை, சொல், செயல் என்னும் மூன்றிலும் தூய்மை காப்பதற்கு இடையறாது முயலுதல் வேண்டுமென்றும், அவ்வாறு தூயவாழ்வு நடத்துவோன் பண்பால் உயர்வான் என்றும் புத்தர் கூறியது அனுபவத்துக்கு இசைந்ததென்று அவர்கள் கண்டனர்.

4. சிற்றின்ப லோலனாவதை எதிர்த்த மாதிரியே, கொடிய நோன்புகளைக் கைக்கொள்வதையும் எதிர்த்தார் புத்தர். அந்த இரு முனைகளுக்கும் இடைப்பட்ட அட்டாங்க மார்க்கம், அளவான வசதியோடு துறவி தூயவாழ்வு நடத்துவதற்கு அடிகோலியது. எனவே, அது பலரும் நடை முறையில் பயிலத்தக்கதாக அமைந்தது.

5. துராசையை நீக்கித் தூய அன்பைப் பேணி, யாவர்க்கும் நலமே நாடும் தொண்டு நெறியில் துறவி படரவேண்டுமென்றார் புத்தர். இது துறவியின் திறன்கள் பயன்படுவதற்கும், அவர் சமுதாயத்தில் இரண்டறக் கலவாது சமுதாயத் தொண்டு புரிவதற்கும் வாய்ப்புத் தந்தது.

6. எந்தத் துறவற மரபுமே சாதி வேற்றுமையைப் பாராட்டவில்லை என்பது மெய்யே. துறவிக்கும் அவனுடைய பூர்வாசிரமப் பெயர், குடி முதலியவற்றுக்கும் தொடர்பில்லை என்பது இந்தியப் பொதுமரபே. நாய் மாமிசம் தின்னும் புலையனான ஹரிகேசிபலன் போன்றோர் ஜைனத்

துறவிகளானார்களென்று படிக்கிறோம். வண்டிக்காரன் ரைக்வனுக்கும் திருமணமாகாத பணிப்பெண்ணுக்கும் பிறந்த சத்தியகாமனும் ஞானிகளானதைப் பற்றி சாந்தோக்கிய உபநிடதம் பேசும். ஆயினும், மேற்சொன்ன அம்சங்களில் பௌத்த நெறி உயர்வாகப் போற்றப் பெற்றதால், சாதிக் கொடுமைக்கு உள்ளானோரும்[1] அதனைக் கண்டு மனம் மறுகினோருமாகப் பலர் பௌத்த நெறித் துறவறம் பூண்டனர். மேலும், குடியாட்சிக் குலங்களின் மரபுகளைத் தழுவிச் சங்கத்தின் செயல்முறைகளை வகுத்தார் புத்தர். துறவிகள் யாவரும் ஒருநிகரான உரிமை பெற்றவராகக் கூடி விவாதித்து ஒரு மனதான முடிவெடுத்துச் செயலாற்றுவதற்கு வகை செய்த அமைப்பு அது. அதுவும் சங்கத்தின் வலுப் பெருகுவதற்குக் காரணமாயிற்று.

7. அட்டாங்க மார்க்கத்தைப் பயிலும் துறவிக்கு வீடுபேறு உறுதியாகக் கிட்டும் என்பது நம்பிக்கைதானே என்று வினவலாம். ஆனால் பௌத்தத்தில் நம்பியாக வேண்டியவை சிலவே; ஏனைய நெறிகளில் அறிவுக்கு அப்பாற்பட்ட நம்பிக்கைகள் பல.

ஆக, மெய்யறிவு நாடிய பலரையும் புத்தர் சங்கம் ஈர்த்தது. புதிதாகத் துறவறம் பூண்டோர்க்குப் பழைய துறவிகளில் தகுதி உடையோர் ஆசாரியராகவிருந்து சமயக் கொள்கைகளையும் சங்க விதிகளையும் கற்பித்தனர். பிற நெறியினரோடு வாதம் செய்வதற்காகத் துறவிகள் தருக்க நெறியும் பயின்றனர். பயிற்சி பெற்ற துறவிகள் புதிய புதிய வட்டாரங்களுக்குச் சென்றனர். அசோகன் காலத்திலேயே நாடெங்கும் விகாரைகள் தோன்றி விட்டன. பிட்சுக்களின் எளிய வாழ்வும் அவர்கள் மக்களின் தாய்மொழியிலேயே தம் கொள்கைகளைப் பரப்பியதும் அவர்கள் வெற்றிக்கு உதவின. வேள்வியில் கால்நடைகளைப் பலியிடுவதைப் பௌத்தம் எதிர்த்ததால் உழவரும்

---

1. சுவாபகன் (புலையன்), சுநீதன் (தோட்டி), உபாலி (நாவிதன்) முதலியோர் பௌத்த நெறிப் பெருந்துறவிகளாக விளங்கினர். புத்தர் பரி நிருவாணநிலை எய்தியவுடன் நடைபெற்ற சங்கக் கூட்டத்தில் உபாலி முக்கியமானபங்காற்றினான்.

பிறரும் அதனை விரும்பிப் போற்றினர். மேலும் பௌத்தத்தின் பஞ்சசீலங்கள்,[1] அமைதியான சூழலில் உழவும் தொழிலும் வாணிகமும் செழிக்கவும் இல்லறம் சிறக்கவும் உறுதுணையாக அமைந்தன. தவிர, பௌத்தம் சாதியை எதிர்க்காத போதிலும், சங்கத்தில் சாதிவேற்றுமை பாராட்டவில்லையென்பதும், உயர்வும் தாழ்வும் பிறப்பையன்று ஒழுக்கத்தையே பொறுத்தது என்று அது வாதம் செய்தது அதற்கு ஆதரவு திரட்டித் தந்தது.

பொதுமக்கள் பௌத்தத்தை நன்னடத்தை விதிகளின் தொகுதியாகவே வரித்தார்கள். அதன் சித்தாந்த உண்மைகளைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டனரல்லர். அசோகனே சித்தாந்தத்தைப் பற்றிக் கவலைப்பட்டானென்று கூற முடியாது. அவன் கல்வெட்டுகளில் நல்லொழுக்க விதிகளைப் பற்றிப் பேசுவானேயன்றி, நிருவாணம் பற்றியோ துக்கம், அநித்தம், அநான்மா முதலியன பற்றியோ பேசான். நல்லொழுக்கத்தைத் தழுவினால் இம்மையில் அமைதியும் தோழமையும் தழைக்கக் கண்டு மறுமையில் துறக்க இன்பம் துய்க்கலாமென அசோகன் நம்பினானென்று அவன் கல்வெட்டுக்களிலிருந்து ஊகிப்பர். பொது மக்களில் பெரும்பான்மையோரும் இத்தகைய எளிமையான கொள்கை யாகவே பௌத்தத்தைக் கண்டனர்.

ஊரின் எல்லைப்புறத்தில், தோப்பிலோ, புனித மரத்தடியிலோ, யட்சர், நாகர் முதலிய சிறு தெய்வங்களை வணங்குவது பண்டைய மரபு. அங்கு இறந்தோர் அஸ்தியை வைத்து அதன்மீது மண்ணைக் குவித்து வழிபடுவதும் உண்டு; அந்தக் குவியலைச் சைத்தியம் என்றனர் வடமொழியில். பௌத்தர் சைத்திய வணக்கத்தைத் தமதாக்கிக் கொண்டதும் அவர் செல்வாக்குப் பெருக்கத்துக்குக் காரணமாயிற்று. புத்தரின் அஸ்திமீது தூபியைக் கட்டினார்கள். அசோகன் புத்தர் அஸ்தியைப் தூபிகளுக்கு அடியிலிருந்து எடுத்து 84 ஆயிரம் கூறுகளாக்கினான் என்றும், ஒவ்வொரு பங்கு மீதும் ஒரு தூபி எழுந்தது

---

1. கொல்லாமை, கள்ளாமை, கற்புடைமை, பொய்யாமை, கள்ளுண்ணாமை

என்றும் கூறுவர். அஸ்தி வழிபாடு பௌத்தத்தில் பெருவழக்கு எய்தியதை இதிலிருந்து உணரலாம். புத்தர் தவிர வேறுபல பெரியார்களின் அஸ்தி அல்லது எலும்பு வழிபடப் பெற்ற இடங்களிலும் தூபிகள் எழுந்தன. அரச மரத்தடியில் புத்தர் ஞானம் பெற்றதால் அம்மரத்தைப்போதி விருட்சம் எனப்போற்றிய பௌத்தர், தூபிக்கருகில் அரசமரத்தை வளர்த்து வணங்கினர். இவ்வாறு வழிவழியாக வந்த அரசமர வணக்கமும் பௌத்தத்தோடு இணைந்தது. லும்பினித் தோட்டமும்[1] கயை போதிமரமும்[2] சாரநாத் மான் பூங்காவும்[3] குசிநகர் அருகிலுள்ள தோப்பும்[4] பௌத்தர் சென்று கண்டு வழிபடும் பெருமை எய்தின. நான்கு இடங்களுக்கும் சென்று வந்தான் அசோகன். அசோகனுக்கு முன்பே, புத்தர் மறைந்த நூறு ஆண்டுகளில், புத்தர் சங்கத்திலிருந்து பிரிந்த மகாசங்கத்தினர் புத்தரையும் போதிசத்துவர்களையும் இயற்கை கடந்த நிலையினராகச் சித்திரித்தனர். புத்தருக்கு இறைமை கற்பிக்கும் கொள்கையாக அது பின்னாளில் வளர்ந்தது. புத்தரைக் கடவுளாகப் போற்றும் கொள்கையைக் கிறிஸ்துவ ஊழியின் தொடக்கத்தில் எழுந்த மகாயானத்தின் சமய இயல் தழுவியது. ஆனால் பொதுமக்கள் புத்தர் காலத்திலிருந்தே அவரைக் கடவுளாக வழிபட்டனர்.

8. வைணவத்தின் வளர்ச்சி

ஜைன, பௌத்த சமயங்களைப் போலவே, வரலாற்றுச் சிறப்புடைய வைணவ, சைவ மதங்கள் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே தோன்றி விட்டன. பக்திக் கொள்கையும் பக்தனுக்குப் பரமன் கருணை கூர்ந்து முக்தி அளிப்பார் என்ற கொள்கையும் இவ்விரு சமயங்களுக்கும் பொதுவானவை.

---

1. புத்தர் பிறந்த இடம்.

2. அவர் ஞானம் பெற்ற இடம்.

3. இங்குதான் புத்தர் தான் பெற்ற ஞானத்தை முதன்முதலாக உபதேசித்தார். அந்த அறிவுரையைத் தர்ம சக்கர பிரவர்த்தனம் என்பர்.

4. புத்தர்பரிநிர்வாணம் எய்திய (உயிர்நீத்த) இடம்.

இந்திரனுக்குத் துணை நிற்கும் சிறு தெய்வமாகவே ரிக் வேதத்தில் காட்சி தரும் விஷ்ணு பின்னாளில் மேவிய புகழுக்கு விஷ்ணுவும் கிருஷ்ணனும் ஒருவரே என்னும் கொள்கையே முதற்பெரும் காரணமாகும்.

ரிக்வேதத்தில் கிருஷ்ணன் இந்திரனுக்கு நண்பனாகவன்று, அவனுடைய பகைவனாகவே காட்சி தருகிறான். அம்ஸுமதி நதிக்கரையில் இந்திரனோடு இகலினான் கிருஷ்ணன் என்று அது இயம்பும்[1] டி.டி. கோசம்பி கூறுவது போல்,[2] கிருஷ்ணன் அசுரனே (அதாவது, ஆரியன் அல்லாதவனே) என்றும், அம்ஸுமதி ஆற்றங்கரைப் போராட்டம் உண்மையில் நிகழ்ந்ததென்றும், அது உட்பொருள் உடைய புனைவு அல்லவென்றும் வழிவழியாக விளக்கம் கூறுவர். ஆனால் அம்ஸுமதி ஆற்றங்கரையில் இந்திரனும் கிருஷ்ணனும் நேருக்கு நேர் நின்று அமர் நிகழ்த்தினர் எனல் பொருந்தாது. பைபிளின் பழைய ஏற்பாடு மீண்டும் மீண்டும் குறிப்பிடுவதைப் போல, சுதேசிகளுக்கும் பரதேசிகளுக்கும் இடையில் நிகழ்ந்த போரே இரு கட்சியினரின் இரு வேறு தெய்வங்களுக்கு இடையில் நடைபெற்ற இகலாகக் கூறப்பெறுகிறது. சிந்துவெளித் திராவிடர்களுக்கும்[3] அன்னியராக வந்த ஆரியருக்கும் இடையில் நிகழ்ந்த பல போர்களில் ஒன்றே அம்ஸுமதிப் போராகும். அதில் ஆரியர் படைக்கு இந்திரனும் திராவிடர் எதிர்ப்புக்குக் கிருஷ்ணனும் தோன்றாத் துணையாக இருந்ததாகக் கருதினர் என்று கொளல் தகும்.

சிந்துவெளியில் வழங்கிய மூலத்திராவிட மொழியில் கிருஷ்ணனுக்கு இட்டு வழங்கிய பெயர் யாது என்பதை நாம் அறியோம். ஆரிய மொழியில் 'கிருஷ்ண' என்னும் சொல் 'கறுப்பு' என்று

1. *VIII96.13-15*

2. *D.D.Kosambi, "Myth and Reality" P.39,Note 16.*

3. *சிந்துவெளி நாகரிகத்தின் சிற்பிகள் திராவிடரே என்னும் கொள்கைக்கான சான்றுகளை இந்தியப் பண்பாடும் தமிழரும் (பக் 48-60) என்னும் நூலில் காண்க.*

பொருள்படும். சிந்துவெளியில் கிருஷ்ணனுக்குக் கருநிறக் கடவுள் என்று பொருள்படும் பெயர் அமைந்திருக்கலாம்.

கிருஷ்ணனைப் பற்றிய பூர்வீகக் கதையின் மற்றோர் அம்சத்தை கி.மு.ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய சாந்தோக்கிய உபநிடதத்தில் காண்கிறோம்.[1] 'தேவகி மைந்தனான கிருஷ்ணன்' கோர ஆங்கிரஸ முனிவரின் சீடனாக மிளிர்ந்து ஆத்ம அனுபூதி[2] எய்தினான் என்று செப்பும் சாந்தோக்கியம். எனவே, . சிந்துவெளி மக்களால் வழிபடப் பெற்ற கிருஷ்ணன், தெய்வநிலை மேவிய முனிவனே எனத் துணியலாம். கோர ஆங்கிரஸர் கிருஷ்ணனின் குருவாக விளங்கினார் என்னும் செய்தி வியத்தற்குரியதன்று; ஏனெனில், வேத சூக்தங்களைப் பாடிய ரிஷிகளே ஆயினும், ஆங்கிரஸர்கள் திராவிடமொழி வழியினரே எனலாம். மமதாவின் மகனாகக் குறிப்பிடப் பெறும் (இவள் மகன் இவன் என்பது தாய்வழிச் சமுதாயத்தின் மரபு) முனிவராம் தீர்க்கதமஸ் ('நீண்ட இருள்' என்று பொருள்படும் அப்பெயரே அவர் திராவிட மொழியினர் என்பதைச் சாற்றும்) ஆங்கிரஸ குடியைச் சேர்ந்தவரே என்பதும் குறிப்பிடத்தக்கது. பார்க்கப்போனால், தேக்கமுற்றிருந்த சிந்து வெளிச் சமுதாயம் ஆரியர் வருகையால் அழிந்தபோது, காடுகளை எரித்துக் கழினியாக்கி விரிவடையும் (எருது பூட்டிய) கலப்பை உழவுப் பொருளாதாரத்தின் அடிப்படையில் எழுந்த கலப்புச் சமுதாயத்தில் சிந்துவெளிப் புரோகிதர்கள் சிறப்பான பங்கு வகித்தனர்.[3] அந்தப் புதிய சமுதாய அமைப்பே கிருஷ்ண–விஷ்ணு ஒருமைப்பாட்டைச் சாத்தியமாக்கியது.

யாதவர் குலத்துதித்த வசுதேவன் மகனான வாசுதேவனும் கிருஷ்ணனே என்பதும் பண்டைய மரபுரையே. வாசுதேவனும் அர்ஜுனனும் வணக்கத்திற்கு உரிய வீரர்களாகத் திகழ்ந்தனர்.

---

1. *III, 17.*

2. *அனுபூதி – அனுபவ ஞானம்*

3. *D.D.Kosambi, An Introduction to Indian History, PP.102-106; இந்தியப் பண்பாடும் தமிழரும், பக் 145–171*

அவ்விருவரையும் போற்றிய பக்தர்கள் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே இருந்தனர் என்பது பாணினி இலக்கணத்திலிருந்து (4,3,98) தெளிவாகிறது. அலெக்சாந்தரை எதிர்த்தெழுந்த போரஸின் படை வீரர்கள் தம் அணிக்கு முன்னர் கிருஷ்ணன் திருவுருவத்தைத் தூக்கிச் சென்றனர் என்று கர்ட்டியஸ் கூறுவார்.[1] யமுனை பாயும் சூரசேனர் நாட்டில் கிருஷ்ண வழிபாடு உயர்நிலை மேவியதையும் தென் திசையில் கடல் வரையில் கிடந்த பகுதிக்கு (அதாவது, பாண்டிய நாட்டுக்கு) பண்டையா என்னும் தன் மகளைக் கிருஷ்ணன் அரசியாக்கினான் என்பதையும் மெகஸ்தனீஸ் குறிப்பிடுவான்.[2] கி.மு.இரண்டாம் நூற்றாண்டில், ஹீலியோடோரஸ் என்னும் கிரேக்கன் தேவதேவனாக வாசுதேவனைப் போற்றும் வகையில் கருடத்துவஜம் அமைத்தான்.

சங்கர்ஷண வழிபாட்டையும் கிருஷ்ண வழிபாடு தன் பால் ஈர்த்தது. தலைமுடியை மழித்துக் கொண்டோ அதனைச் சடையாக வளர்த்துக் கொண்டோ உள்ள துறவிகளில் சங்கர்ஷண பக்தர்கள் இருந்தனர் என்று அர்த்த சாத்திரத்திலிருந்து அறிகிறோம்.[3] ஆனால் சாணக்கியர் அத்தெய்வத்தைக் கிருஷ்ணனுடன் சேர்த்துக் குறிப்பிடார். எனினும், பலராமன் எனப்பெறும் சங்கர்ஷணனையும் கிருஷ்ணனையும் பதஞ்சலியின் மகாபாஷ்யம் (கி.மு.2ஆம் நூ) சேர்த்துக் குறிப்பிடுகிறது. கி.மு.முதல் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றிலிருந்து இராஜபுதனத்தில் சங்கர்ஷணனுக்கும் வாசுதேவனுக்கும் ஒரே கோயில் அமைந்திருந்த

---

1. *Macrindle, Ancient India, PP.158-159 (London,1877)*

2. *Ibid.,கிருஷ்ணனை ஹெராக்கிலீஸ் (ஹெர்க்குலீஸ்) என்று மெகஸ்தனீஸ் குறிப்பிடுவான். உடல் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாக உள்ள கிரேக்கப் புராண வீரனான ஹெர்க்குலீஸைக் கிரேக்கர்கள் தெய்வமாக வழிபட்டனர். கண்ணன் காளிங்கத்தை அடக்கியதைப் போல், கொல்வதற்கு அரிய பல்தலைப் பாம்பு ஒன்றைக் கொன்றவன் ஹெர்க்குலீஸ். இருவரும் வாழ்நாளெல்லாம், செயற்கரிய வீரச்செயல்களைப் புரிந்தவர்கள். மகளிர் பலரை மணந்தவன் என்ற கதை இருவருக்கும் உரியது. மேலும், வெயிலில் கன்றியதால், ஹெர்க்குலீஸும் கண்ணனைப்போல் கருநிறத்தவனே.*

3. *அதிகரணம் 13.அத்தியாயம் 143.*

தென்று அறிகிறோம்; இருவரையும் 'சர்வேசுவரர்' என்று அக்கல்வெட்டு குறிப்பிடும்.[1]

'சங்கர்ஷண' என்றால் 'உழவன்' எனப் பொருள்படும். எனவே, விவசாயத் தெய்வமாக அவன் விளங்கினான் என்பது தெளிவு. கலப்பையைப் படையாக உடையவனாகவே பலராமன் பின்னாளிலும் போற்றப் பெறுவான். முதலில் நாகர் தெய்வமாகத் திகழ்ந்ததாலோ, பல நாகர் குலங்களை ஈர்த்ததாலோ, பலராமன் ஆதிசேஷன் அவதாரமாகப் பரவப் பெற்றான்.

பலராமனைக் கிருஷ்ணனுக்குத் தமையனாக்குவதோடு, பிரத்தியும்நனைக் கிருஷ்ணனின் மகனாகவும் அநிருத்தனைக் கிருஷ்ணனின் பேரர்களில் ஒருவராகவும் கொள்ளும் வழக்குத் தோன்றியது. சங்கர்ஷணன், பிரத்தியும்நன், அநிருத்தன், வாசுதேவன் என்னும் நால்வரும் விஷ்ணுவின் நான்கு வியூகங்களே (மூர்த்திகளே) என்ற கொள்கை, அந்த நால்வரையம் வழிபட்டோரின் ஒற்றுமையைக் குறித்ததாகலாம். வெவ்வேறான பெயருள்ள தாய்த் தெய்வத்தை வணங்கிய பல்வேறு தாய்வழிக் குடிகள் தந்தைவழிச் சமுதாயத்தில் கிருஷ்ண வழிபாட்டைத் தழுவியதற்கு வாய்ப்பாகவோ, தழுவியதின் விளைவாகவோ அந்தத் தாய் தெய்வங்களைக் கிருஷ்ணனின் மனைவியராகக் கருதும் கொள்கை தோன்றியது. இவ்வாறு பதினாயிரத்துக்கு மேற்பட மனைவியரை உடையவனாகக் கண்ணன் வளர்ந்தான். அந்தத் தாய்த் தெய்வங்கள் பழங்குடிகளின் வழிபடு கடவுளர் என்பது, சாம்பவதி, ருக்மணி ஆகியோரைப் பற்றிய புராணக் கதையிலிருந்து விளங்கும். சாம்பவதியைக் கரடி மகளாகவும் (கரடியை இனமரபுச் சின்னமாக வழிபட்ட குலத்துக்கு உரியவளே, இவ்வாறு கதையில் குறிப்பிடப் பெறுகிறாள்), ருக்மிணியை அந்நாளில் அநாகரிக நிலையில் இருந்த போஜர் குலத்தில் உதித்த அரச குமாரியாகவும் புராணங்கள் குறிப்பிடுகின்றன.

---

1. *The History and Culture of the Indian People, Vol.II.P.438.*

நாராயணன் என்ற முனிவரும் விஷ்ணுவும் ஒன்றே என்பதும் பண்டைய கொள்கை. நாராயணன் ஐந்து நாள் யாகம் (பாஞ்சராத்திர–ஸத்திரம்) செய்தார்[1] என்று செப்பும் சதபத பிராமணம் (XII.3,4). அதன்மூலம் அவர் அனைத்துயிர்களையும் விஞ்சிய மேன்மை எய்தினாரென்றும், அனைத்துயிர்களாக ஆனார் என்றும் அது கூறும். நாராயணன் விஷ்ணுவே என்ற கொள்கை போதாயனரின் தரும சூத்திரத்தில் பிற்சேர்வாகக் கருதப் பெறும் பகுதியிலும், மகா பாரதத்தின் சாந்தி பருவத்தின் பிற்சேர்வாகக் கருதப்பெறும் நாராயணியப் பகுதியிலும் இடம் பெறுகிறது. நாராயணனும் நரனும் தருமர் மக்களாகப் பிறந்து அருந்தவம் புரிந்து மெய்யுணர்ந்த முனிவர்களானார்கள் என்பது பாரதக் கதை. நரர்களின் (மனிதர்களின்) இலட்சியமான பரம்பொருளே நாராயணன் என்று குறிப்பிடப் பெறுகிறார் என்பர் பண்டார்க்கர்.[2] நாராயணன் என்பது நீரில் துயில்வோன் எனப் பொருள்படுமென்றும், ஆழ்கடலில் பள்ளிகொண்ட சுமிரியத் தெய்வத்துடன் தொடர்புடைய நாராயணன் சிந்து வெளியிலேயே சிறப்பு எய்தினராகலாமென்றும் ஊகிப்பர் கோசம்பி.[3] 'நீரில் உறங்குவோன்' என்று பொருள்படும் 'நாராயணன்' திராவிடச் சொல் என்பாரும் உளர். 'நீர்' 'நார்' என்னும் முதலசையாக மாறிற்று என்றும் 'அன்' ஆண்பாற் விகுதியென்றும் கூறுவர். ஆனால் 'நீர்' என்பதின் உயிரொலி 'நார்' என்னும் சொல்லின்

---

1. எனவே நாராயணனை வழிபடும் கொள்கைக்குப் பாஞ்சராத்திரம் என்ற பெயர் வந்தது. வாசுதேவனை வழிபட்டோரைப் பாகவதர் என்றனர். விஷ்ணு, நாராயணன், வாசுதேவ – கிருஷ்ணன் என்னும் மூவரும் ஒன்றே என்ற கொள்கை தோன்றியபின் பாஞ்சராத்திரிகரும் பாகவதரும் வைணவர் ஆயினர்.

2. ராமகிருஷ்ண கோபால் பண்டார்க்கர் (1837–1925):மகாராஷ்டிர அறிஞர். கல்வி, சமுதாயச் சீர்திருத்தம், மொழி இயல், சாசன இயல், வடமொழி இலக்கியம் ஆகிய துறைகளில் அருந்தொண்டு புரிந்தார்.

3. பார்க்க Myth and Reality தண்ணீர் என்று பொருள்படும் சொல் 'நாரா' என்றும் அது ஆரியச்சொல் அல்லவென்றும் அவர் கூறுவார்.

உயிரொலியாக மாறியதை விளக்குவது கடினம். கண்வர் வழியினர் காண்வாயனர் என்பதுபோல் நரன் வழியினன் நாராயணன் என்று பொருள் கொண்டு, நரன் என்னும் முனிவர் வழிமுறையை விளக்கம் செய்த ஞானியாக நாராயணனைக் கொள்வார் டி.ஸி.சர்க்கார்.[1] அது எவ்வாறு ஆயினும், தனித்து இலங்கிய நாராயண வழிபாடு கண்ணன் வழிபாட்டுடன் ஐக்கியமடைந்தது என்பது உறுதி. நாராயணனும் நரனுமே முறையே கண்ணனும் அர்ஜுனனுமாகப் பிறந்தனர் என்பது மரபுரை.

9. அவதாரக் கொள்கை

குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் அர்ஜுனனுக்குத் தேரோட்டிய கண்ணனே பரம்பொருளாகவும் எவ்வாறு இருக்க முடியும் என்ற வினாவுக்கு விடையாக அவதாரக் கொள்கை தோன்றியதெனலாம். கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில் எழுந்த பகவத்கீதையே அவதாரக் கொள்கையை முதன் முதலில் பேசுகிறது. கண்ணன் கீதையில் மொழிவான்.

> எனக்குப் பிறப்பு இல்லை; அழிவும் இல்லை; அனைத்து உயிர்களுக்கும் நானே ஈசுவரன். என் தனி இயல்புக்கு நான் தலைவன். எனினும் என் சொந்த மாயையால் நான் பிறப்பெய்துகின்றேன்.
>
> பாரத! அறம் தேய்ந்து அதர்மம் தலை தூக்கும் போதெல்லாம், நான் உடலோடு தோன்றுகின்றேன்.
>
> நல்லோரைக் காக்கவும், தீயோரை அழிக்கவும், அறத்தை நிலைநிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கின்றேன்.[2]

---

1. *The History and Culture of the Indian People Vol.II.PP. 436-37.*

2. *4:6-8*

பிற்காலத்தில், அவதாரக் கொள்கையிலிருந்து தசாவதாரக் கதைகள் உருவாயின. பிரஜாபதி, மீன் (மச்ச) வடிவேற்றுப் பிரளய காலத்தில் மனுவைக் காப்பாற்றினாரென்றும், ஆமை (கூர்ம) உருவெடுத்து மக்களைப் படைத்தாரென்றும், பன்றி (வராக) வடிவு கொண்டு கடலடியிலிருந்து உலகத்தை உயர்த்தினாரென்றும் சதபத பிராமணம் கூறும் இம்மூன்றும் (மச்சம், கூர்மம், வராகம்) திருமாலின் அவதாரங்களென்று பின்னாளைய கதை மாற்றங் கண்டது. ஆமை அவதாரக் கதையில் பழங்குடிகளின் மரபுக் கதை இடம் பெற்றிருக்கலாமென்றும், பழங்குடிகளின் புனிதப் பன்றி வழிபாடு வராகாவதாரக் கதையில் பங்கு பற்றியிருக்கலாமென்று ஊகிப்பர் பாஷம். சிந்துவெளி முத்திரை ஒன்று, பகுதி மனிதனும் பகுதிப் புலியுமான ஓர் உருவத்தைச் சித்திரிக்கிறது. அது நரசிம்மாவதாரக் கதைக்குக் கருவாகலாமென்பர் கோசம்பி. வானவர் வேள்வி செய்வதற்கு வாமனன் அளவு நிலம் தருவதாக அசுரர் கூற வாமன வடிவங் கொண்ட விஷ்ணு, நிலத்தில் படுத்து, உலகம் முழுவதும், வியாபித்தார் என்று சதபதபிராமணம் கூறும். அதுவும் விஷ்ணு மூன்றடியால் உலகளந்தார் என்ற ரிக் வேதக் குறிப்பும் வாமனாவதாரக் கதையாக வளர்ந்தன. பரசுராமனையும் தயரதராமனையும் வழிபட்டவர்கள் வைணவத்தில் ஒன்றுவதற்கு வாய்ப்பாக அந்த இரு இராமர்களும் திருமாலின் அவதாரங்களாயினர். பௌத்தர் பலர் இந்து மதத்தில் ஒன்றிய சூழலில் கண்ணனுக்குப் பின் திருமால் புத்தராக அவதரித்தார் என்ற கதை தோன்றியது. கல்கி அவதாரம் எதிர்காலத்தில் தோன்றவிருப்பதாம். இந்தப் பத்து அவதாரங்களைத் தவிர கபிலர், வியாசர் முதலியோரையும் அவதாரங்களாகக் கருதுவர்.

ஆக்கத்திற்கும் அன்புக்கும் அழகுக்கும் தெய்வமான திருமகளை வழிபடும் நெறி திருமால் வழிபாட்டுடன் இணைந்ததும் பல்தெய்வ இசைவு நெறியின் வெளியீடே ஆகும். ரிக் வேதம் இலட்சுமி என்ற சொல்லைத் திரு என்ற பொருளில் ஆண்ட போதிலும், இலட்சுமி தெய்வமாகக் குறிப்பிடப் பெற்றாளில்லை. அதர்வ வேதத்தில் நன்னிமித்த (சிவ) லட்சுமியும் தீய (பாபிஷ்ட) லட்சுமியும் உடன்

பிறந்தாராக இடம் பெறுவர்.[1] லட்சுமியும் திருமகளும் ஆதித்தன் மனைவியர் என்று கூறும் யஜுர் வேதம், வடமேற்கு இந்தியாவில் கிரேக்க வேந்தர் அரசு புரிந்தபோது (கி.மு. 200 முதல்) கிரேக்கப் பெண் தெய்வங்களின் அறிமுகம் இந்தியருக்கு ஏற்பட்டது. அந்தச் சூழலில் திருமகள் என்னும் லட்சுமி வழிபடு தெய்வமாக ஏற்றம் பெற்றனளாகலாம் என்பர் சர்க்கார்.[2] கிரேக்கக் காதற் தெய்வமான அப்ரடைட்டி (Aphrodite)– இவளை ரோமானியர் வீனஸ் (Venus) என்றனர்.) கடல் நுரையிலிருந்து பிறந்தாள் என்றதுபோல், பாற்கடலைக் கடைந்தபோது இலட்சுமி எழுந்தாள் என்ற கதை தோன்றியது. ஆதன்ஸ் நகரத்தின் தெய்வமும் தலைமைத் தேவனான ஜுஸ் (Zeus) தலையிலிருந்து சர்வாயுதபாணியாக எழுந்தனளென்று கூறப் பெறுவோளுமான அதினே (Athene– இவளை ரோமானியர் மினர்வா என்பர்). என்னும் தெய்வத்துக்கும், பாற்கடலிலிருந்து நிறைந்த அழகுடன் தோன்றி லிஷ்ணுவின் துணைவியான இலட்சுமிக்கும் தொடர்பு இருக்கலாம் என்பர் சர்க்கார். திருமாலின் சக்தியாக அவர் மார்பில் உறைவோள் இலட்சுமி என்ற கருத்து அவதாரக் கதையுடன் இணைந்தது; திருமாலின் அவதாரந்தோறும் இவளும் துணைவியாகத் தோன்றுவாள் என்றனர். பிறகு, ஆன்மாக்களைத் திருமாலிடம் ஆற்றுப்படுத்தி, ஆன்மாக்களுக்காகத் திருமாலிடம் மன்றாடும் தாய் என்ற சிறப்புப் பெற்றாள்.

---

1. பின்னாளிலும், இலட்சுமிக்கு அக்காள் (மூதேவி) துர்ப்பாக்கியத்தின் அதிதேவதையாகக் கருதப் பெற்றாள்.

'மடி உளாள் மாமுகடி என்ப மடியிலாள்
தாள் உளாள் தாமரையினாள்' (617)

என்பர் வள்ளுவரும். (மடி-சோம்பல், மாமுகடி–கரிய மூதேவி; தாமரையினாள்- தாமரை மலரில் உள இலட்சுமி).

மூதேவிக்குக் கொடி காகம் என்றும், ஆயுதம் துடைப்பம் என்றும், ஊர்தி கழுதை என்றும் பிங்கலந்தை கூறும்.

2. History and Culture of the Indian People Vol.III.pp.424-25.

10. கண்ணன் காட்டிய வழி

கைம்மாறு கருதாது கருமம் புரியும் அறநெறியை ஓதுவதன் மூலம் இந்தியப் பண்பாட்டை உருவாக்குவதில் தன்னேரில்லாத் தொண்டாற்றியது பகவத்கீதை. ''நல்வினையாற்றினாலும், அதன் பயனைத் துய்ப்பதற்கு ஆத்மா பிறப்பெடுக்க வேண்டுமாதலால், வீடு பேற்றுக்குத் துறவு நெறியே ஏற்றது'' என்ற கருத்தைக் கீதை மறுக்கிறது. முற்றும் துறந்த முனிவனும் உயிர்த்தல் முதலிய செய்கைகளிலிருந்து விடுபட முடியாது என்பதால், ''எவனும் ஒரு கணமேனும் செய்கையின்றி இருப்பதில்லை''[1] என்பான் கண்ணன். மேலும், வினையாற்றுவதாலன்று, வினையின் பயனில் பற்றுக் கொள் வதாலேயே, மறுபிறப்புக்குக் காரணமான பந்தம் ஏற்படுகிறது என்று அவன் அறிவுறுத்துவான். ''கர்மத்தின் பயனிலே பற்றுதலின்றித் தான் செய்ய வேண்டிய தொழிலை எவன் செய்கின்றானோ, அவனே துறவி, அவனே யோகி''[2] என்பது கண்ணனின் ஞான வாக்கியம். ''அர்ஜுனா, உனக்கு தொழில் செய்யத்தான் அதிகாரமுண்டு. அதன் பயன்களில் உனக்கு எப்போதுமே அதிகாரமில்லை. செய்கையின் பயனைக் கருதாதே; தொழில் செய்யாமலுமிராதே'' (2:47) என்பது கண்ணன் நல்லுரை. பற்று நீக்கி பணியாற்றுவதற்கான தகுதியே யோகம் எனப்பெறும். கடமையாற்றுவதற்குத் தூண்டுகோலாகத் தன்னலம் அமைவதைத் தவிர்ப்பதன் மூலம், நற்செயலே புரிவதை உறுதி செய்வது யோகம் என்னும் சமநிலைச் சித்தமாம். குறிக்கோளின் உயர்வு கருதி நெறி பிறழ்வதையும் தவிர்க்கச் செய்வது யோகம்.

கர்மயோகமும் ஞானயோகமும் ஒன்றுக்கொன்று முரணானவையன்று; ஒன்றோடொன்று இணைந்து நிற்பனவே. தன்னில் பிறரையும் பிறரில் தன்னையும் காணும் ஆன்மஞானம் அல்லது பிரமஞானம், யான், எனது என்னும் செருக்கால் பார்வை யிழந்தோருக்குக் கிட்டாது. தனக்கென வாழாது பிறர்க்குரியாளராகப் பணியாற்றுவோரே ஆன்மசுத்தி எய்தி ஞானத்தை அடைவர். ஆன்மாவே மெய்யென்று உணர்ந்து அனைத்திலும் பிரமத்தைக் காணும்

1. 3:5

2. 6:1

ஞானி, பயன் கருதும் பான்மைக்கும் அதனால் நேரும் அழுக்காறு, அவா, அச்சம், வெகுளி, சஞ்சலம், சலிப்பு முதலியவற்றுக்கும் இடங் கொடான். இவ்வாறு ஞானயோகமும் கர்மயோகமும் ஒன்றுக்கொன்று துணைபுரிகின்றன.

பக்தியோகமும் கர்மயோகத்துடன் இசைந்த ஒன்றே. பாவியும் பரமனைப் பணிவான் எனில் விரைவில் அறவோனாவான். எது செய்யினும் கடவுளுக்கு அர்ப்பணமென்று செய்யும் பக்தன், எவ்வுயிரிலும், எப்பொருளிலும் இறைவனைக் காண்பான்; தொண்டே தெய்வநெறியென்று தெளிந்து கர்மயோகம் பயில்வான். தன்னலம் துறந்த கர்மயோகி இயல்பாகவே* பரமன்பாலுள்ள பக்தியைப் பேணுகின்றான். இவ்வாறு அருவமான பரம்பொருளை உணர முற்படும் ஞானயோகத்தையும், உருவம் மேவிய கடவுளிடம் அன்பு பூண்டு பக்தி செலுத்தும் பக்தியோகத்தையும், தன்னலம் பாராச் சமுதாயத் தொண்டு புரியும் கர்மயோகத்தையும் ஒன்றாக இணைப்பது பகவத்கீதையின் பெருஞ்சிறப்பு. மேலும், வேள்வி செய்தலே கர்மயோகம் என்ற பழைய வாய்பாட்டுக்கு புதிய விளக்கம் தருவது கீதை. தன்னலத்தைத் தியாகம் செய்வதே மெய்யான வேள்வி என்பது கீதை தெளிவிக்கும் உண்மை.

பிரமஞானத்தாலோ, கடவுள் பக்தியாலோ, தன்னலம் கருதாதும், பயனைப் பற்றி எண்ணாதும் கடமை ஆற்றும் திறனைப் பேண வேண்டுமென்பதே கண்ணன் உபதேசம்.

நசைகள்அற்றான், நான் என்பது அற்றான்,
உறுதியும் களிதரும் ஊக்கமும் உடையான்,
வெற்றி தோல்வியில் வேறுபாடு அற்றான்—
இங்ஙனம் ஆகித் தொழில்கள் இயற்றுவோன்
ஒளி இயல்பு உடையான் என்ப[1]

---

1. 18:26. இது பாரதியாரின் தமிழாக்கம்.

இச் செந்நெறியில் படர்வோன் எல்லா உயிர்களிடத்தும் அன்பு உடையவனாக விளங்குவான். எவ்வுயிரையும் பகைத்தலின்றி, அவற்றிடம் நட்பும் கருணையும் உடையவனாய், யானென்பதும் எனதென்பதும் நீங்கி, இன்ப துன்பங்களை ஒருநிகராகக் கொண்டு வாழ்வது பக்தியோகம் (12:13). கல்வியும் விநயமும் நன்குபயின்ற அந்தணனிடத்திலும், பசுவிடத்தும், யானையிடத்தும், நாயிடத்தும், புலையனிடத்தும் சமமான பார்வை உடையோனே ஞானி (5:18).

என்பது கண்ணன் திருவாக்கு. மேலும், ''சிரத்தையுடன் அன்னியத் தெய்வங்களை வழிபடும் பக்தர்களும் விதி வழுவி என்னையே வழிபடுகின்றனர்'' என்று அருளிச் செய்து, சிரத்தையால் புனிதம் பெறும் அனைத்து சமய நெறிகளுக்கும் உரிமை வழங்கும் பெருமை உடையது பகவத்கீதை. எனவே, இந்துக்களின் தலையாய திருநூலாகத் திகழ்வதோடு நல்லெண்ணம் உடைய நானிலத்தோர் அனைவரும் போற்றும் ஏற்றம் பெற்றதாக அது விளங்குகிறது.

11. சைவம் மேவிய சிறப்பு

சிவ வழிபாடு தொன்மையானது. பரமசிவனைச் சிந்து வெளி மக்கள் வழிபட்டனர் என்று ஆய்வாளர் ஊகிப்பதைக் குறிப்பிட்டோம். ரிக்வேத ஆரியரால் அஞ்சத்தக்க தெய்வமாகக் கருதப்பெற்ற ருத்திரன் அந்தப் பழைய கடவுளுடன் இரண்டறக் கலந்தார். அதன் விளைவாக, யஜுர் வேதத்தில் அவர் மகாதேவனாகப் போற்றப் பெறுகிறார். 'நன்னிமித்த மானவன்' என்று பொருள் தரும் 'சிவன்' என்னும் சொல் முதலில் மங்கல வழக்காகவே ருத்திரனைக் குறித்ததாகலாம். பின்னர், அதுவே அவர் தலைமைப் பெயராயிற்று ருத்திர – சிவன் திரிபுரத்தை அழித்து அசுரர்களை வென்ற கதையும், வேள்வியில் புகுந்து பிற தெய்வங்களுக்குரிய பங்கை வன்முறையாகக் கைப்பற்றிய செய்தியும் யஜுர் வேதத்தில் இடம் பெறுகின்றன.

சிவனைத் தலைமைத் தெய்வமாகப் போற்றி அவரிடம் பக்தி கொண்டொழுகும் நெறியைத் தெளிவாக எடுத்துரைக்கிறது சுவேதாஸ்வதர உபநிடதம். அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்த சிவனுக்கு வடிவு ஏதுமில்லையென்று புகன்று, அவரைப் பரம்பொருளாகச் சித்திரிக்கிறது அந்த உபநிடதம். அதேபோதில், அவரே தேவர்கட்கெல்லாம் தேவனான மகேசுவரன் என்றும் அந்த உபநிடதம் சாற்றுகிறது. அவரைத் தவத்தால் அடையலாம்; பக்தியோடு செய்யப் பெறும் வழிபாட்டாலும் அடையலாம். சிவகதியின்றி வேறுசெல்கதி இல்லை. சிவபக்தியோடு குருபக்தியும் சிவநெறி உணர்வுக்கு முன்னிலை தேவை. இவ்வாறு அந்த உபநிடதம் ஓதுகிறது.

நகரங்களில் இந்திரன், அசுவினித்தேவர், திருமகள் ஆகியோரின் ஆலயங்களோடு சிவன் கோயிலும் இருந்ததென்று அர்த்தசாத்திரத்திலிருந்து அறிகிறோம்.[1] பாண்டிய நாட்டில் சிவ வழிபாடு சிறந்திருந்தது என்பான் மெகஸ்தனிஸ்.[2] காஷ்மீரை ஆண்ட அசோகன் மகன் ஜலௌகன் சைவனாக விளங்கினான் என்று காஷ்மீர் வரலாற்று நூலான இராஜதரங்கிணி கூறும். மௌரியர்கள் பொருள் திரட்டு வதற்காகச் சிவன், கந்தன் முதலியோரின் திருவுருவங்களைச் செய்து விற்றனர் என்று பதஞ்சலியின் (கி.மு.2 ஆம் நூற்றாண்டு) மகாபாஷ்யம் கூறும். சிவனைப் பகவனாக வழிபட்ட சிவபாகவதர்களையும் அவர் குறிப்பிடுகிறார். அதே காலத்தில், பாசுபதம் என்னும் சைவநெறி வடபுலத்தில் தோன்றியது. நியாயம் என்னும் முறையைத் தோற்றுவித்த கௌதமரும், வைசேஷிகம் என்னும் கொள்கையைக் கண்ட கணாதரும் சைவர் என்பது மரபுரை. ஆதியில் இவ்விரு கொள்கைகளைத் தழுவியோர் யாவரும் சைவர்களாகவிருந்தனர் என்பது செவிவழிச் செய்தி. கிறிஸ்து பிறப்புக்கு முற்பட்ட காலத்திலேயே, பல்வேறு நாணயங்களில் சிவலிங்கத் திருமேனியோ சிவவடிவமோ அமைந்துள்ளது. தொன்மையான சைவச் சிற்பங்களில் ஒன்று, வட ஆர்க்காடு மாவட்டத்தில் குடிமல்லம் கிராமத்தில் உள்ள சிவலிங்கத் திருமேனியாம். ஐந்து அடி உயரமுள்ள இலிங்கம், சடைக்கற்றை உடைய சிவபிரான் வடிவத்தைத் தாங்கி நிற்கிறது. கி.மு.இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த இதிலிருந்தே இலிங்கோற்பவ மூர்த்தி[3] உருவானது என்பர்.

---

1. *அதிகரணம் 2, அத்தியாயம் 25.*

2. *'ஜுப்பிட்டருக்குப் புனிதமான மலையினை உடைய பாண்டிய நாடு' என்பது மெகஸ்தனிஸ் வாக்கு. ஜுப்பிட்டர் கிரேக்கரின் தலைமைத் தேவன். கிருஷ்ணனை ஹெராக்கிளீஸ் என்றும் இந்திரனை டையனிசியஸ் (Dionysius) என்றும் குறிப்பிடுவதால், ஜுப்பிட்டர் என்று அவன் சிவபெருமானையே குறிப்பிடுகிறான் என்பது தெளிவு.*

3. *இலிங்கோற்பவ மூர்த்தி: சிவலிங்கத்திலே நீல கண்டமும், மான்மழு வரதாபயம் பொருந்திய சதுரப்புயமும், நெற்றிக்கண்ணும், பிறையணி சடையும் தேவி பாகமுமாகத் தோன்றிய சிவன்.*

சிந்துவெளி மக்கள் தாய்த்தெய்வத்தைப் பராசக்தியாக வழிபட்டனரென்பதையும், வைதிக இலக்கியத்தில் முதன் முதலாகக் கேன உபநிடதத்தில் (கி.மு.7 ஆம் நூற்றாண்டு) இமவானின் புத்திரியான உமையம்மை எழுந்தருளுவதையும் கண்டோம். ஆதிகாவியமான வான்மீகி பகவானின் இராமாயணம் தோன்றுவதற்கு முன்பு, அன்னை வழிபாடு சிவவழிபாட்டுடன் கலந்துவிட்டது. அதன் விளைவே, பரமசிவனை உமை மணாளனாகக் கொள்ளும் கருத்து. இமவான் மகளான உமையை ஈசன் மணந்த கதை கோசிக முனிவரின் கூற்றாகப் பாலகாண்டத்தில் இடம் பெறுகிறது. காளி என்றும் துர்க்கை என்றும் பரவப்பெறும் தெய்வம், உமையம்மையின் ருத்ரமூர்த்தமே என்ற கொள்கையும், அம்மை ஆராதனை ஈசன் வழிபாட்டில் ஐக்கியமடைவதற்கு உதவியது.

கந்தன் கோயிலைச் சாணக்கியர் குறிப்பிடுவார் (அதி. 2–அத். 25). கந்தன், விசாகன் என்னும் தெய்வங்களின் திருவுருவங்களை மௌரியர் விற்றனர் என்று பதஞ்சலியின் மகாபாஷ்யம் மொழியும். குஷானரின் நாணயங்களில், கந்தன், மகாசேனன், குமாரன், விசாகன் என்னும் நால்வரின் வடிவங்களும் அவரவர் பெயருடன் காணப்படுகின்றன. ஆனால் நான்கு தெய்வங்களும் நாளாவட்டத்தில் ஒன்றின. அரக்கரை அழிப்பதற்காகத் தேவர்க்குச் சேனாதிபதியாக விளங்கத்தக்க மகனாகக் கந்தன் சிவபார்வதி புத்திரனாகப் பிறந்தான் என்ற கதை, கந்தன் வழிபாடு சிவவழிபாட்டுடன் ஒன்றியதைக் குறிக்கும். வான்மீகத்தில் இந்தக்கதையும் இடம் பெறுகிறது. பரமசிவனிடம் உமையம்மை பெற்ற மகனைக்[1] கார்த்திகை மகளிர் அறுவரும் வளர்த்ததால் அவனுக்குக் கார்த்திகேயன் என்ற பெயர்

---

1. கந்தன் பிறப்பைப் பற்றி வேறு கதைகளும் உள. சிவனின் வீரியத்தை அக்கினி ஏந்திச்சென்று கங்கையில் விடுத்தான் என்றும், கங்கையில் சரவணப் பொய்கையில் (சரவணம்-நாணற்காடு) கந்தன் உருவானான் என்றும் (அதனால் அவனுக்குச் சரவணபவன் என்றும் பெயர்), கார்த்திகை மாதர் அறுவரும் பால் கொடுப்பதற்கு ஆறுமுகம் கொண்டதால் ஆறுமுகன் (சண்முகன்) ஆனான் என்றும் கூறுவது ஒரு கதை, சப்தரிஷிகளின் பத்தினிகளிடம் மையல் கொண்ட அக்கினியைத் திருப்தி செய்வதற்காக அவன் மனைவி சுவாகா, ஆறு ரிஷிபத்தினிகளின் வடிவங்களை ஒன்றன பின் ஒன்றாக

வந்தது என்றும் வான்மீகி முனிவர் மொழிவார். இவ்வாறு, சிந்துவெளியில் வழிபடப் பெற்ற அறுமீன் காதலன் கந்தனோடு ஐக்கியமானான்.[1]

சிவனைப் பற்றிய வேறு சில கதைகளும் இராமாயணத்தில் வருகின்றன. பகீரதன் தவத்தால் உள்ளம் குளிர்ந்து, கங்கையைத் தம் சடையில் தாங்கிக் கீழே இறக்கினார் சிவன் என்ற கதையும், பாற்கடலைக் கடைந்தபோது எழுந்த நஞ்சை ஈசுவரன் பருகிய கதையும், திரிபுரம் வென்ற கதையும், தட்சன் யாகத்தில் சிவனுக்கு அவிர்ப்பாகம் வழங்க மறுத்த கதையும் வருகின்றன. சிவனுக்கு தட்சன் அவிர்ப்பாகம் மறுத்தான் என்ற கதையிலிருந்து, அந்நாளில் சிவனை மகாதேவனாக ஏற்க மறுத்து எள்ளி நகையாடினர் பலர் என்பதை உய்த்துணரலாம்.

சிவனைப் பற்றிய கதைகளின் வளர்ச்சியைப் பாரதத்தில் காண்கிறோம். மேலும், இமயத்தில் பார்த்தன் சிவனை நோக்கித் தவம் புரிந்து, அவரிடம் பாசுபதம் என்னும் அத்திரத்தைப் பெறும் கதையும் உள்ளது. தவிர, கண்ணனே உபமன்யு என்ற குருவிடம் தீட்சை பெற்றுத் தவம் செய்து மகாதேவனையும் உமையம்மையையும் நேரில் கண்டு வரம் பெற்ற கதையும் அனுசாசன

மேற்கொண்ட (ஏழாவது ரிஷிபத்தினியான அருந்ததியின் வடிவத்தை அவளால் மேற்கொள்ள முடியவில்லை) அக்கினியை மகிழ்வித்தாள். அப்போது அக்கினியிடம் அவளுக்குப் பிறந்தான் கந்தன் என்பது இன்னொரு கதை (ரிக்வேதத்தில், ருத்திரனும் அக்கினியும் ஒருவரே என்ற கொள்கையும் இடம் பெறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. பார்க்க. ரிக் 1,27.10; I,724)

1. சிந்துவெளி மக்கள் முருகனை வழிபட்டனரென்று அங்குக் கிடைத்த இலச்சினைகளை ஆய்ந்த பின்னிஷ் அறிஞர்கள் நிறுவியுள்ளனர். ஆறு சிறு கோடுகளைச் செங்குத்தாக வரைந்து, அடுத்து மீன் வடிவை எழுதி, அறு மீன் (கார்த்திகை என்னும் விண்மீன்) என்பதைக் குறிப்பிட்டனர் என்றும், அறுமீனைக் குறிக்கும் அந்தக் கூட்டெழுத்தைத் தொடர்ந்து, கிழமைப் பொருளைக் குறிக்கும் உருவும் ஆண் வடிவும் அமைந்த தொடரால், அறுமீன் காதலன் (கார்த்திகேயன்) என்பதைக் குறித்தனர் என்றும் பின்னிஷ் அறிஞர் கண்ட பொருள். சிந்துவெளி இலச்சினைகளின் எழுத்துக்களை ஆய்ந்த சோவியத் அறிஞருக்கும் ஏற்புடைத்தே.

4

பர்வத்தில் (அந்.45 வருகிறது.[1] உபமன்யுவைப் போன்ற பல குருக்களின் செல்வாக்கால், சிவபெருமானைத் தட்சிணாமூர்த்தி என்னும் குருவாகப் போற்றும் கொள்கை உருவானது. தட்சிணாமூர்த்தி என்னும் தென்முகக் கடவுள் யோகிகளுக்கு யோக நுட்பங்களையும், (அறம், பொருள், இன்பம். வீடு என்னும்) நால் வகை உறுதிப்பொருள்களின் உட்கருத்தையும், மனம் ஒடுங்குதற்கு மௌனோபதேசத்தையும் அருளுவார் என்றும் எல்லா உயிர்கட்கும் ஞானோபதேசம் செய்து மேனிலைக்குச் செல்ல அருள் செய்வார் என்றும் சாஸ்திரம் கூறும்.

12. ஏனைய தெய்வங்களில் சிலர்

தேவர், அசுரர், மனிதர் என்னும் மூவகையினருக்கும் தந்தையாகப் பிரஜாபதியைப் பிரகதாரணியக உபநிடதம் போற்றுவதைக் கண்டோம். பிரஜாபதியே பிற்காலத்தில் பிரமன் என்று குறிப்பிடப் பெற்றான். பழைய பௌத்தத் திருநூல்கள் பிரமனைக் கேலி செய்வதைக் கருதும்போது, அந்நாளில் பிரமன் வழிபாடு பெரு வழக்கு எய்தியிருந்தது என்று ஊகிக்கலாம். மகாபாரதம் பிரமனை முதற் தேவனாகப் போற்றுகிறது. பிரமனே சப்தரிஷிகளைப் படைத்தான் என்றும் அது கூறும். மும்மூர்த்திகளில் ஒருவனான பிரமனை வழிபடும் கொள்கைக்கு, நாளாவட்டத்தில் செல்வாக்கு குன்றியது.[2] ரிக் வேதத்தில் புனித நதியாகப் பொலிவுற்றவளும், அந்நூலில் வரும் வாக்குத் தெய்வத்துடன் (நாமகளுடன்) பிறகு ஒன்றியவளுமான சரஸ்வதி (கலைமகள்), இலக்கியம், இசை, கலை முதலியவற்றுக்கு அதிதேவதையாக உயர்ந்ததுடன், நான்முகனின் (பிரமனின்) மனைவியாகவும் போற்றப் பெற்றாள்.

---

1. சிவன் கண்ணனையும் கண்ணன் சிவனையும் தலைமைத் தெய்வமாகப் போற்றுவர் பாரதத்தில். இருவரையும் ஒரு நிகராகக் கொள்ளும் மன விரிவு பாரதத்தின் பெருமையாகும்.

2. பிரமனுக்கு என்று தனியே அமைந்த கோயில் ஒன்றுதான் உள்ளது. அது அஜ்மீருக்கு அருகில் இருக்கிறது.

ரிக்வேதம் போற்றும் ஆதித்தர்கள் சூரியன் என்னும் ஒரு தெய்வமாக ஒன்றினர். வைதிக மந்திரங்களில் தலை சிறந்ததாகப் போற்றப் பெறும் காயத்திரி மகாமந்திரம் சூரியனை வழிபடுவதே:

செங்கதிர்த் தேவன் சிறந்த ஒளியினைத்
தேர்கின்றோம் – அவன்
எங்கள் அறிவினைத் தூண்டி நடத்துக[1]

சூரியன் எந்நாளும் தன்னிகரில்லா நிலையினை மேவவில்லை; ஒருபோதும் தன் செல்வாக்கை இழக்கவுமில்லை. இன்றும் சூரியனை முழு முதற் கடவுளாகப் பரவும் சௌரமதம், இந்துமதக் கிளையாக உள்ளது. பாரூத் சிற்பத்திலிருந்தும் குஷானர் நாணயங்களிலிருந்தும் ஆரிய வழிபாடு முன்னாளில் எய்திய பெருமையை அறியலாம். இதிகாசங்களிலும் சூரியன் செல்வாக்குள்ளவனாகக் காட்சி தருகிறான். மித்திரன் என்ற பெயரில் சூரியனை வழிபட்ட பாரசீக மகர்களின் வருகையால், சூரிய வழிபாட்டுக்கு ஆதரவு வளர்ந்தது. மித்திரன் உருவத்துடன் கூடிய நாணயங்களைக் கனிஷ்கன் அச்சிட்டதிலிருந்தும் பிற்காலப் புராணங்களிலிருந்தும் இதனை ஊகிக்கிறோம்.

வேதகாலத்துக்குப் பிறகும் இந்திர வழிபாடு நீடித்தது. சாணக்கியர் இந்திரன் கோயிலையும் குறிப்பிடுவார். ஆனால் நாளாவட்டத்தில், கீழ்த்திசைக் காவலனாகத் தாழ்ந்தான் இந்திரன். இந்திரன் அகலிகையிடம் ஒழுக்கம் கெட்டவனாக நடந்து கொண்ட கதையை வான்மீகம் கூறும். ரிக்வேத காலத்தில் உயர்நிலைத் தெய்வமாக விளங்கிய வருணனும் மேல்திசைக் காவலனாகவும் கடலுக்கும் மழைக்கும் தலைவனாகவும் உள்ள சிறு தேவதையாக மாறிவிடுகிறான். செல்வத்துக்கு அதிபதியும், அளகாபுரி அரசனும், சிவபெருமான் தோழனுமான குபேரன் வடதிசைக் காவலன் ஆனான். மனிதருள் முதன் முதல் இறந்து வானுலகம் சென்று, மற்றவரும் அங்குப்போக வழிகாட்டியவனாக ரிக்வேதத்தில் கூறப்பெறும் யமன், இறந்தவருக்கு நீதி வழங்கும் தெய்வமாகவும் தென்திசைக் காவலனாகவும் மாறி

---

1. *பாரதியாரின் தமிழாக்கம் (பாஞ்சாலி சபதம், 153).*

விடுகிறான். வேதத்தில் அதிகமாகத் துதிக்கப் பெறும் அக்கினித் தேவன் தென்கிழக்கு மூலைக்குக் காவலனானான் பின்னாளில். ஆற்றல் மிக்கவனென்றும் அனுமனுக்கும் வீமனுக்கும் தந்தை என்றும் போற்றப் பெற்ற வாயுபகவான் வடமேற்குத் திக்குக்குக் காவலன் ஆனான். நன்மை செய்யும் தேவதையான அனுமன், இராமனுக்குத் தோழனாகவும் சேவகனாகவும் போற்றப் பெறுவான். அறிவும் துணிவும் விழைவோர் அனுமனைச் சிறப்பாக வணங்குவர்.

ரிக்வேதம் காமனைக் குறிப்பிடுகிறது. பின்னாளில் காதல் தேவனாகப் பெருமை எய்தினான் காமன். கரும்பு வில்லும் மலரம்பும் உடையவன் அவன். தன் மலரம்பால் சிவ பிரானின் யோகத்தைக் கலைத்தான் என்றும், அவர் நெற்றிக் கண்ணினால் நோக்கப்பெற்று வெந்து சாம்பலானான் என்றும், அவன் மனைவி இரதிக்கு மட்டும் அவன் உருவோடு காணப்படுவதற்கு ஈசன் அருளினார் என்றும், அதன்பின் அவன் அனங்கன் (உருவிலாளன்) எனப் பெயர் பெற்றான் என்று புராணங்கள் கூறும். சமய சாஸ்திரத்தில் காமனுக்குக் குறிப்பிடத்தக்க இடமில்லையென்றாலும் அவன் வழிவழியாக மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டான். இளவேனிற் காலத்தில் நாடெங்கிலும் நடை பெற்றுவரும் காமன் பண்டிகை இதற்கு ஓர் எடுத்துக் காட்டு.[1]

13. தரணி ஆளும் குறிஞ்சி வேந்தன்

பன்மையில் ஒருமை காணும் செந்நெறியில் அனைத்திந்திய சமய வாழ்வை உருவாக்கும் கொள்கையை வடபுலத்தைப் போலவே தமிழகமும் விரும்பித் தழுவியதைச் சங்க இலக்கியம் தெளிவாக்குகிறது.

1. இந்நாளைய ஹோலிப் பண்டிகையில் காமனுக்கு பங்கு ஏதும் இல்லை என்பது மெய்யே. ஆயினும் காமன் பண்டிகையே ஹோலியாக உருவெடுத்திருக்கிறது. ஈசன் காமனை எரித்தார் என்ற கதையின் அடிப்படையில், எரிந்த கட்சி என்றும் எரியாத கட்சி என்றும் இரு கட்சிகள் சொற்போரிடுவது இன்றும் தமிழகத்துக் காமன் பண்டிகையில் முக்கிய நிகழ்ச்சியாகும்.

மாயோன் மேய காடுறை உலகமும்,
சேயோன் மேய மைவரை உலகமும்,
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்,
வருணன் மேய பெருமணல் உலகமும்,
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே[1]

(பொருள் 5)

என்பர் தொல்காப்பியர். குறிஞ்சிக்கு முருகனும், முல்லைக்குத் திருமாலும், மருதத்துக்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும் இறையாக விளங்கினர் என்னும் இந்தக் கொள்கையே அந்நாளில் உருவான இந்திய ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

முருகன் பழந்தமிழரின் இறைவன் ஆவான். நெல்லை மாவட்டத்து ஆதிச்சநல்லூரில், கி.மு.பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு உரியனவாகக் கிடைத்துள்ள புதை பொருட்கள், முருக வழிபாட்டின் தொன்மைக்குச் சான்று பகர்கின்றன. முருகனுக்குக் காவடி எடுக்கும் அடியார்கள் துணியாலோ வேறு பொருளாலோ வாயை மூடிக் கட்டுவது வழிவழி வழக்கம். எனவே, ஆதிச்சநல்லூர் முதுமக்கள்தாழிகளில் உள்ள பொன்னில் செய்த வாய்மூடிகள் முருக வழிபாட்டுப் பொருளே என்பது உறுதி. ஆதிச்சநல்லூர் புதைகுழிகளில் முருகனின் ஆயுதமான வேலும், அவனுக்கு கொடியாக அமைந்த சேவலின் வெண்கல வடிவமும் கிடைத்துள்ளன.

முருகன் மக்கள்மீது வந்து ஆடுவதை வெறியாட்டு என்று கூறுவர் சங்கச் சான்றோர். முருகன் குறிஞ்சி நிலத் தெய்வமாக இலங்கியதால், வேலன்[2] வெறியாட்டத்தை வெட்சித் திணையின் துறையாகக் கூறுவர்

---

1. மாயோன்-கருநிறத்தோன் (திருமால்). மேய-காதலித்த. உலகம்-நிலம். சேயோன்-சிவந்த நிறத்தோன் (முருகன்). மைவரை-கருமேகம் தங்கியமலை. வேந்தன்-இந்திரன். தீம்புனல்-குளிர்ந்த நீர்வளம் உடைய (மருதம்). பெருமணல் உலகம்-நெய்தல் நிலம்.

2. வேலன்: முருகனுக்குப் பூஜை செய்வோன். செவ்வேளின் வேலைத் தான் எடுத்து ஆடுவதால், இவன் வேலன் என்று பெயர் பெற்றான் என்பர் நச்சினார்க்கினியர்.

தொல்காப்பியர் (பொருள்.60) குறமகளும் வெறியாடுவாள் என்று கூறும் திருமுருகாற்றுப்படை (227–44). முன்னோர் கண்ட இலக்கணக் கட்டுக்கோப்பில் சங்கப்புலவர் புனைந்த அகப் பாடல்களில் வெறியாட்டுத்துறை[1] இடம் பெறுவதிலிருந்து அதன் தொன்மையை உணரலாம். குறிஞ்சி நிலத்தில் கடம்ப மரத்தில் முருகன் உறைவதாகக் கருதி, மலைநாட்டு மக்கள் அதனை பூசிப்பர். குறவரின் முருக வழிபாட்டில் குரவைக் கூத்தும் இடம்பெறுமென்று மதுரைக் காஞ்சியும்[2] திருமுருகாற்றுப்படையும்[3] கூறுகின்றன. முருகன் அவுணரை அழித்த பெருமையும், அவர்தம் தலைவனான சூரனை வென்ற வீரமும் சங்கப் புலவரால் போற்றப் பெறுகின்றன.[4]

இவ்வாறெல்லாம் தொன்று தொட்டுத் தமிழர் உள்ளத்தில் கொலு வீற்றிருக்கும் செவ்வேள் வடபுலத்தில் சிவ குமாரனாகவும் தேவ சேனாதிபதியாகவும் தெய்வயானை மணாளனாகவும் ஆறுமுகனாகவும் உருக்கொண்ட குமரக் கடவுளுடன் சங்கக்காலத்துக்கு முன்பே ஐக்கியமடைந்து விட்டான். திருப்பரங்குன்றத்தில், தேவயானை மணாளனாக முருகன் காட்சி தருவதை விதந்துரைப்பார் நக்கீரர்.[5]

---

1. *களவுத் தலைவியின் இளைப்புக்குத் தெய்வமே காரணம் என்று தவறாக எண்ணி, வேலனை அழைத்து வெறியாட்டுக்கு ஏற்பாடு செய்வர் தாயும் செவிலியும். தோழி உண்மையை உரைத்து அதை தவிர்ப்பதை வெறிவிலக்கு என்பர். வெறியாட்டு செய்திகளுக்குப் பார்க்க:குறுந். 53,111,214,318,360:அகநா.22,98,114, 182: நற்றிணை 34,51,273,322: ஐங்குறுநூறு 241–50. முருகனுக்கு அரலை (அரளி) மாலை சூட்டியும், பொரியும் மலரும் சிதறியும், ஆடு வெட்டிப் பலி கொடுத்தும் வழிபாடு செய்தபின், வேலன் முருகனால் ஆவேசிக்கப் பெற்று ஆடுவான் என்று இவற்றிலிருந்து அறிகிறோம்.*

2. *611–15*

3. *190–217*

4. *குறுந். 1:அகநா. 59;பதிற்றுப்.11; பெரும்பாண். 457–58; திருமுருகு. 45–61; பரிபாடல் 9.18: கலித்தொகை 27,104; சிலப்பதிகாரம் 24.*

5. *திருமுருகு.4–6; 175–76. முருகன் அவுணரை அழித்து அருள் செய்ததால், இந்திரன் தான் வளர்த்த தேவயானையை முருகனுக்குத் திருப்பரங்குன்றத்தில் திருமணம் செய்வித்தான் என்று புராணம் பேசும்.*

திருச்செந்தூரில் வள்ளி மணாளனின் ஆறுமுகங்களும் பன்னிரு கைகளும் ஆற்றும் அருட் செயல்களை விளக்குவார் அவர்.[1] திரு ஆவிநன்குடியில்[2] கடவுளரெல்லாம் குமரனைக் காணவரும் காட்சி தோன்றுகிறது. முனிவரும் கந்தருவரும் முன்வர, ஈசனும் திருமாலும் இந்திரனும் அமரரும் உடனெழ, வான்மீன் பூத்தாற்போல் அவர்கள் ஊர்வலமாக வருகின்றனர். தெய்வயானையோடு வீற்றிருக்கும் முருகனிடம் நான்முகனை விடுதலை செய்யுமாறு அவர்கள் வேண்டுகின்றனராம்.[3] அந்நாளைய புராணங்களையெல்லாம் ஒற்றுமைப் படுத்தும் காட்சி இது. திருஏரகத்தில் அந்தணர் வழிபாட்டை உவந்து ஏற்கும் முருகன்,[4] குன்றுதோறும் குரவை ஆடித் தன்னை வழிபடும் குறவருக்கும் அருள் புரிகின்றான்[5] அச்சத்தை ஊட்டும் வெறியாட்டுக்களத்திலும் அவன் தோன்றுகிறான்.[6] இவ்வாறு பல வகையான வழிபாடுகளும் முருகன் மூலம் ஒன்றுபடும் காட்சியைக் கண்டு களிக்கும் நக்கீரர், அவனே சரவணப் பொய்கையில் கார்த்திகை மகளிர் அறுவரிடம் வளர்ந்து தேவசேனாதிபதியான சிவகுமாரன் என்றும் கூறுவார்:-

> நெடும் பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை,
> ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப,
> அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ!
> ஆல்கெழு கடவுட் புதல்வ! மால்வரை

---

1. *திருமுருகு. 91-118.*

2. *திரு ஆவிநன்குடி: ஆவியரின் (வேளிர் குலங்களில் ஒன்று ஆவியர்குலம்) குடியிருப்பு:பழனி.*

3. *திருமுருகு. 148-174. ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருள் தெரியாது விழித்த பிரமனை முருகன் சிறையிலிட்டான் என்றும், பின்னர் சிவபெருமான் முதலியோரின் கருத்துக்கு இணங்கிப் பிரமனை விடுதலை செய்தான் என்றும் புராணம் கூறும்.*

4. *திருமுருகு. 177-189. திருஏரகம் மலைநாட்டின் கண் உள்ள திருப்பதி என்பர் நச்சினார்க்கினியர் அது தஞ்சை மாவட்டத்திலுள்ள சுவாமிமலையே என்பது அருணகிரிநாதரின் கொள்கை.*

5. *190-217*

6. *227-244.*

மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வேல். போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பின் படையோள் குழவி!
வானோர் வணங்குவில் தானைத் தலைவ![1]

(253-260)

14. அகிலம் போற்றும் ஆயர் இறைவன்

முல்லை நிலத் தெய்வமான மாயோனைத் திருமால் என்றும் கூறுவர். வடபுலம் கண்ட கிருஷ்ணனோடும் அவனுடன் ஐக்கியமடைந்த விஷ்ணு முதலியோருடனும் மாயோன் சங்ககாலத்துக்கு முன்பே ஒன்றிவிட்டான். மாயோன், கிருஷ்ணன் என்ற இரு பெயர்களுமே கருநிறத்தோன் என்ற பொருள் படும். அந்தப் பெயர் ஒற்றுமை இரு தெய்வங்களும் ஐக்கியமடைவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கலாம்.

மாயோனைப் பற்றிய வியப்பான கதை ஒன்றைப் புறநானூறு (174) கூறும். பிறரை வருத்துவதையே இயல்பாகக் கொண்ட அவுணர் ஞாயிற்றைக் கொண்டுபோய் மறைத்து வைத்தார்கள். அதனால் உலகில் இருள் அடர்ந்தது. அப்போது அஞ்சன வண்ணன் (மாயோன்) பகலவனை மீட்டுக் கொணர்ந்து ஆகாயத்தில் நிறுத்தி உலகத்தின் துயரைத் துடைத்தான். வடநூல் அறியாத கதை இது. எனவே, இது

---

1. நெடும் பெரும் சிமையம் - நெடிய பெரிய இமயமலை. நீல பைஞ்சுனை - நீல நிறமுடைய தருப்பை வளர்ந்த பசுஞ்சுனை; சரவணப் பொய்கை. ஐவருள் ஒருவன் - பஞ்சபூதங்களில் ஒருவனாகிய அக்கினி. அங்கை ஏற்ப - சிவபெருமானின் வீரியத்தைக் கையில் ஏற்க. அறுவர் பயந்த - ஏழு முனிவர் பத்தினிகளில் அருந்ததி ஒழிந்த அறுவர்பெற்ற. ஆறு அமர் செல்வ - ஆறுமுகனாக மேவிய செல்வனே. ஆல் கெழு கடவுள் புதல்வ - கல்லால மரத்தின் கீழிருந்த சிவபெருமானின் மகனே. மால்வரை மலைமகள் - பெருமை மிக்க மலையாகிய இமவானின் மகள் உமை. கூற்றே - எமனே. கொற்றவை - துர்க்கை. இழை அணி - பூண் அணிந்த. சிறப்பின் - தலைமை உடைய. பழையோள் - காடுகிழாள். வணங்குவில் - வணங்கியவில்லை உடைய. வானோர்தானைத்தலைவ - தேவசேனாதிபதியே:

பண்டைய தமிழகம் போற்றிய மாயோனைப் பற்றிய பழமரபுக்கதையாகலாம்.

அவுணரை வென்ற மாயோனின் அவதார நாள் திருவோணம் என்றும், ஓணநாளில் சங்ககாலத் தமிழர் விழா எடுத்தனர் என்றும் மதுரைக் காஞ்சியிலிருந்து (590–91) அறிகிறோம். அந்த மரபின் வலிமையைப் பின்னாளைய இலக்கியமும் புலப்படுத்தும். கண்ணன் பிறந்த நாள் உரோகிணி என்பது புராணக்கூற்றாக, அவன் திருவோணத்தில் பிறந்தான் என்பர் பெரியாழ்வார். ''ஓணத்தான் உலகாளும்'' (1,1:3) என்றும் ''அத்தத்தின் பத்தாம் நாள் (திருவோணம்) தோன்றிய அச்சுதன்,' (1,2:6) என்றும் ''நீ பிறந்த திருவோணம்'' (2,4:2) என்றும் அவர் கண்ணனைக் குறிப்பிடுவார். மாயோன் பிறந்த நாளையே அவர் கண்ணன் பிறந்த நாளாகக் கூறுகிறார் என்பது தெளிவு. திருமழிசை ஆழ்வார் ஓண விழாவை விஷ்ணுவுக்கு உரியதென்பார் (4:41). ஓணப்பிரான் என்று விஷ்ணுவைக் குறிப்பிடும் தேவாரம் (643,10). பிறரைக் காட்டிலும் அதிகமாக மரபைப் போற்றும் கேரள மக்கள், ஆவணி மாதத்தில் ஓணவிழாக் கொண்டாடுவதும்[1] சங்ககாலத் தமிழரின் மாயோன் நாள் விழாவுடன் தொடர் புடையதாகலாம்.

யமுனைக்கரை மதுரையிலும் கடற்கரைத் துவாரகையிலும் புகழ் எய்திய யாதவர் சந்திரகுல க்ஷத்திரியராவர் என்பதே முன்னாளைய மரபுரை. எனினும், குப்தர் காலத்தில் இறுதி உருப்பெற்ற புராணங்கள்,

---

1. மாவலி நினைவாகவே இதைக் கொண்டாடுவதாக அவர்கள் கூறுவர். வாமனனாகப் பிறந்த திருமால் மாவலியிடம் மூன்று அடி மண் தானமாகப் பெற்று, ஓங்கி வளர்ந்து, உலகை ஓரடியாலும், வானத்தை ஓரடியாலும் அளந்து, மூன்றாம் அடிக்கு மாவலியின் தலையை இடமாகக் கொண்டு அவனைப் பாதாளத்தில் அமுக்கினார். அப்போது, ஆண்டுதோறும் ஓணநாளில் மண்ணுலகம் வந்து தன் மக்களைக் காணவேண்டுமென்று மாவலி கோரினான். திருமால் அதற்கு இணங்கினார். ஆவணி மாத ஓணத்தில் மாவலி வருகை தருவதைப் போற்றுவதாக விழா நடைபெறுகிறது என்பர். எனினும் இது புராணகால மரபுரையே.

யாதவகுலத் தோன்றலான கண்ணனுக்கு ஆயர் தொடர்பு கண்டு அவனைக் கோவிந்தனாகச்[1] சித்திரிக்கின்றன. தேவகி மைந்தனான கண்ணன், ஆயர்பாடியில் யசோதை கையில் வளர்ந்து, ராஸக்கிரீடை[2] நிகழ்த்தியதாக அப்புராணங்கள் கூறுகின்றன. மாயோன் முல்லைநில ஆயர்களின் இறைவனாக விளங்கியதாலும், கண்ணன் ஆயர் மங்கையருடன் விளையாடிய செய்திகளைப் புராணங்களுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியம் கூறுவதாலும், மாயோனின் அருட் செயல்களே கண்ணன் செயல்களாகக் கூறப்பெறுகின்றன எனலாம். மேய்ச்சல் நாடிச் சென்ற தென்புல ஆயர்கள் வடக்கே கோவிந்தன் வழிபாட்டைப் பரப்பினராகலாம். கிறிஸ்தவ சகாப்தத்தின் தொடக்க நூற்றாண்டுகளில், மேற்குத் தக்கணத்திலும், மாளவத்திலும், தெற்கு ராஜஸ்தானத்திலும், ஸிந்துப் பிரதேசத்திலும் எழுச்சியுற்ற ஆபிரர்கள்[3] கோவிந்தன் வழிபாட்டுக்கு வடபுலத்தில் பேராதரவு திரட்டினர் என்பது வரலாற்று அறிஞர் அனுமானம்.[4]

யமுனை ஆற்றில்[5] நீராடிய ஆயர் மங்கையர்க்கு மரத்தை மிதித்து வளைத்துக் கொடுத்து, மரத்தின் தழைகளை அவர்கள் உடுத்திக் கொள்ள வழி செய்தான் கண்ணன் என்று அகநானூறு (59) கூறும். சிலப்பதிகார

---

1. கோவிந்தன்: இடையர் இறைவன் என்று பொருள்படும் சொல். இது அனேகமாகப் பிராகிருதச் சொல்லாக இருக்க வேண்டுமென்பர் பாஷம், பிராகிருத வடிவை மாற்றாது வடமொழி சேர்த்துக்கொண்டது.

2. ராஸக்கிரீடை: கண்ணன் ஆயர் மகளிருடன் ஆடிய கூத்துவகை.

3. ஆபிரர்: ஆயர்குலம். அவர்களின் பூர்வீகம் விளங்கவில்லை. சாதவாகனர் ஆட்சி மறைந்தபோது, கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் ஆபிரர்கள் வடமேற்குத் தக்கணத்தில் ஓர் அரசும் கண்டனர். பத்து ஆபிர அரசர் அறுபத்தியேழு ஆண்டு ஆண்டனர் என்று புராணங்கள் கூறும். ஆபிர குலத்தினர் வழிமுறையினரே அஹீர் என்னும் ஆயர் சாதியினர் என்பர்.

4. பாஷம். பக். 308.

5. சங்க காலத்துக்கு முன்பே திருமாலும் கண்ணனும் ஒன்றிவிட்டதால் திருமாலின் (மாயோனின்) செயல் யமுனை ஆற்றங்கரையில் நிகழ்ந்ததாகக் கூறப்பெறுகிறது.

ஆய்ச்சியர் குரவையிலும் இச்செய்தி வருகிறது. ஆயர் மகளிர் கரையில் வைத்திருந்த ஆடைகளைக் கண்ணன் விளையாட்டாக எடுத்து மறைத்தான் என்றும், அப்போது பலராமன் அங்கு வருவதைக் கண்ட கண்ணன் தன் செயலை மறைக்கவும் பெண்களின் மானத்தைக் காக்கவும் மரத்தை வளைத்தான் என்றும், இச்செய்திக்கு விளக்கம் கூறுவர். ஆயர் பெண்களுடன் கண்ணன் விளையாடியதற்கு அகநானூற்றுப் பாடலே, இந்திய இலக்கியத்தில் தொன்மையான சான்று.

அதற்கு அடுத்த சான்று, சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் ஆய்ச்சியர் குரவையாகும். கோவலன் வெட்டுண்ட போது, ஆயர் சேரியில் பலவகை உற்பாதங்கள் நிகழ்ந்தன. அப்போது, ஏழு கன்னியரைக் கொண்டு குரவை ஆடி , கண்ணனை வழிபடுவதற்கு மாதரி ஏற்பாடு செய்கிறாள். எழுவரில் ஒருத்தி கண்ணன் என்றும், இன்னொருத்தி பலராமன் என்றும், மற்றொருத்தி நப்பின்னை என்றும் ஏனைய நால்வரும் வேறு ஆயர் மகளிர் என்றும் பாவனை செய்து கொண்டு அவர்கள் குரவையாடுகின்றனர். கண்ணன் ஆயர் பாடியில் கோபிகைகளுடன் ஆடிய குரவையையே அவ்வாறு ஆடுகின்றனர். முருகனும் இம்மாதிரியே குறவர் மகளிருக்குத் 'தலைதத்து' குரவை ஆடுவான் என்பர் நக்கீரர்.[1] இறைவன் ஆன்மாக்களிடம் அன்பு கொண்டு, அவற்றோடு ஒருங்கு மகிழ்ந்து குலாவும் உண்மையைக் குறிப்பதாகக் குரவைக் கூத்து முருக வழிபாட்டிலும் மாயோன் வழி பாட்டிலும் சங்ககாலத்தில் இடம் பெற்றதென்பது இதிலிருந்து விளங்கும்.

கண்ணனுக்கு விருப்பமான தேவி ஆயர்மகளான நப்பின்னையே என்பது தமிழ் வழக்கு. நப்பின்னையை வடமொழிப் புராணங்கள் அறியா; ஆயர்மகள் எவளையும் கண்ணன் மனைவியாக அவை குறிப்பிடவில்லை. இராதையும் இடையர்குலப் பெண்ணே என்பதும், இடைக்காலத்தில் வடபுலத்தில் எழுந்த பக்தி இயக்கம் இராதையைச்

---

1. *திருமுருகு. 216-17. தலைத்தந்து - தலைமையான அன்பினைக் கையால் தழுவிக் காட்டுதல்.*

சிறப்பாக வழிபட்டது என்பதும் மெய்யே. ஆனால் இராதை கண்ணனின் காதலியாகவே போற்றப் பெறுவாள். பண்டைய தமிழரோ வடபுலம் அறியாத நப்பின்னையைக் கண்ணன் உகந்த மனைவியாகப் பரவினர். எனவே, கோவலனுக்குக் கண்ணகி உணவு படைப்பதைக் கண்டபோது,

ஆயர் பாடியின் அசோதை பெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ,
நல்லமுது உண்ணும் நம்பி! ஈங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநம் குலத்துத்
தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை
விழுமம் தீர்த்த விளக்குக் கொல் என,
ஐயையும் தவ்வையும் விம்மிதம் எய்தி
கண்கொளா நமக்கு இவர் காட்சி, ஈங்குஎன[1]

வியந்தனர் என்பர் இளங்கோ அடிகள். இங்குக் கோவலனைக் கண்ணனுக்கு ஒப்பிட்ட மாதரியும் ஐயையும், கண்ணகியை ருக்மிணிக்கோ வேறு தேவியர்க்கோ ஒப்பிடாது நப்பின்னைக்கே ஒப்பிடுகின்றனர். சங்ககாலத் தமிழகத்தில் நப்பின்னைக்கு இருந்த ஏற்றம் இதிலிருந்து விளங்கும். ஆழ்வார்களும் கண்ணன் தேவியருள் நப்பின்னையையே தலைமையாகப் போற்றுவர். நப்பின்னையைத் தமிழ் நூல்கள் புகழ்வதையும் வடநூல்கள் அறியாதிருப்பதையும் கருதும்போது, ஆயர்க்கு இறைவனான மாயோனின் தேவியாகத் தமிழ் மண்ணில் உயர்நிலை மேவிய ஆயர்மகள் நப்பின்னை என்று துணியலாம்.

சங்க காலத்துக்கு முன்பே மாயோன் என்னும் திருமால் விஷ்ணு–கிருஷ்ணனோடு ஐக்கியமானதால், வடபுல வைணவம் கண்ட

---

1. *சிலப்.16:46–53. பூவைப்புதுமலர் வண்ணன் – புதிய காயாம்பூப் போலும் நிறத்தை உடைய கண்ணன். நம்பி – இங்குக் கோவலன். பல்வளைத் தோளி- பலவளைகளைத் தோளில் அணிந்த கண்ணகி. நம்குலத்துத் தூமணி வண்ணன் – நம் (ஆயர்) குலத் தோன்றலான தூய நீலமணி நிறத்தோன் (கண்ணன்). தொழுனை – யமுனை. விழுமம் – துயரம். விளக்கு – நப்பின்னை. தவ்வை – தாய் (இங்கு ஐயையின் தாய் மாதிரி). கண்கொளா – கண்ணுக்குள் அடங்காத.*

கதைகளும் கருத்துக்களும் சங்க இலக்கியத்தில் போற்றப் பெறுவதில் வியப்பில்லை. திருமாலைக் கருடக் கொடியோன் என்பர் நக்கீரர்.[1] திருமகளை மார்பில் உடையோன் என்றும்,[2] 'பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்' என்றும்[3] 'உந்தித் தாமரையிலிருந்து பிரமனைத் தோற்றுவித்தான்' என்றும்[4] கூறுவர் உருத்திரங் கண்ணனார். அவனைச் சக்கரபாணி என்பர் ஆலம்பேரி சாத்தனார்.[5] பூமி அடியாக, கடல் உடையாக, வானம் மேனியாக, சூரியசந்திரர் கண்ணாக, அனைத்தையும் தன்னுள்ளே அடக்கிய சக்கரபாணியான வேத முதல்வன் என்பர் பெருந்தேவனார்.[6] அந்தணர் அருமறை அவன் பெருமையையே ஓதும் என்று பரிபாடல் பேசும் (1,2,3,4). அவன் மந்தர மலையை மத்து ஆக்கி, வாசுகி என்னும் பாம்பைக் கடை கயிறாக ஆண்டு, பாற்கடலைக் கடைந்த கடல் வண்ணன் என்பர் இளங்கோ அடிகள் (17:32). கஞ்சனின்

---

1. *புறநா. 56: திருமுருகு. 150–51 (சிலப்பதிகாரமும் (11:136) பரிபாடலும் (1,2,3,4,8,13) கொடியைக் கூறும்).*

2. *பெரும்பாண். 29–30. பரிபாடலும் (1,2,4). கலித்தொகையும் (104,108,118) திருமகள் உறையும் மார்பன் என்று கூறும். மேலும், 'செய்யாட்கு இழைத்ததிலகம் போல்' (செய்யாள் – சிவந்த மேனியாள் – இலட்சுமி) மதுரை விளங்கியது என்று பரிபாடல் (திரட்டு 10) கூறுவதும் குறிப்பிடத்தக்கது. தாமரை மலரில் எழுந்தருளும் திருமகள் மீது இருபுறமும் நின்ற யானைகள் பூவும் நீரும் சொரிவதைக் கலித்தொகை (44) உவமையாக ஆள்வதால், கஜலட்சுமி வழிபாடு வழக்கிலிருந்தது விளங்கும். பாண்டியன் அரண்மனையின் கோபுர வாயிற் கதவு நிலைக்கு மேலமைந்த உத்தரத்தில் கஜலட்சுமி உருவம் செதுக்கியிருந்தது என்று நெடுநல்வாடை (81–83) கூறும்.*

3. *பெரும்பாண். 371–73. பாம்பணை – ஆதி சேடனாகிய படுக்கை (பரிபாடலும் பாற்கடலில் பாம்பணையில் திருமால் துயில்வதைக் கூறும்)*

4. *பெரும்பாண். 402–404.*

5. *அகநா 175 சக்கரபாணி – சக்கராயுதத்தைக் கையில் உடையவன் பரிபாடலும் இதனைக் கூறும்.*

6. *நற்றிணை . கடவுள் வாழ்த்து*

வஞ்சம் வென்றானும்,[1] வானவர் போற்றவும் வேதம் முழங்கவும் பஞ்ச பாண்டவர்க்காகத் துரியோதனாதியரிடம் தூது சென்றானுமான கண்ணன் நாராயணனின் அவதாரமே என்று இசைப்பார் அவர்:

> மடம்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
> கடந்தானை, நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
> படர்ந்துஆ ரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
> நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே?
> நாராயணா! என்னா நாவென்ன நாவே?[2] (17:37)

புகார், மதுரை, அழகர் மலை, ஆடக மாடம் என்னும் இடங்களில் திருமால் கோயில் இருந்ததை இயம்புவதோடு, ஸ்ரீரங்கத்தில் ஆதிசேடனைப் பாயாகக் கொண்டு திருமால் பள்ளி கொண்டிருக்கும் திருக்கோலத்தையும், திருவேங்கடத்தில் நெடியோன் நின்ற வண்ணத்தையும் விதந்தோதுவர் இளங்கோ அடிகள்.[3] திருவெஃகாவில்[4] திருமால் அனந்தசயனத்தில் காட்சி தருவதைப் பெரும்பாணாற்றுப்படை (373) கூறும். சேரன் தலைநகரில் துளசி மாலை அணிந்த திருமாலின் கோயிலில் மக்கள் உண்ணாநோன்பிருந்து வழிபட்டனர் என்றும், அதிகாலையில் ஆலய மணி ஒலித்ததும் அவர்கள்

---

1. *பண்டைய தமிழர் போற்றிய பதினோராடல்களில் ஒன்றான அல்லியக் கூத்து. கஞ்சனின் (கம்சனின்) வஞ்சம் கடந்த போது மாயோன் ஆடிய ஆடலுள் அடங்கும். என்று இளங்கோ கூறுவதும் (6:46-48) இங்குக் கருதத்தக்கது.*

2. *மடம் தாழும் - அறியாமை தங்கிய, நூற்றுவர் - துரியோதனாதியர், நால் திசையும் - நால் திசைத் தேவரும், ஆரணம் - வேதம், படர்ந்து முழங்க- தொடர்ந்து முழங்க, பஞ்சவர் - பாண்டவர் ஐவர், ஏத்தாத - புகழாத.*

3. *திருமால் கோயில்: புகாரில்:5:72:மதுரையில், 14:8, அழகர் மலையில், 11:105-107. ஆடக மாடத்தில் (திருவனந்தபுரம் அல்லது இரவிப்புரம் இது என்பர்), 26:62, ஸ்ரீரங்கத்தில்,11;35-40; வடவேங்கடத்தில்: 11.41-51.*

4 *திருவெஃகா: காஞ்சி நகரிலுள்ள திருமால் கோயில்.*

நீராடி வந்து பகலெல்லாம் மாயோனைப் பரவிப்பின் இரவு நிலவில் தத்தம் இருப்பிடம் சென்றனரென்றும் பேசும் பதிற்றுப் பத்து(31).

வாசுதேவன், சங்கர்ஷணன் (பலராமன்), பிரத்தியும்னன், அநிருத்தன் என்னும் நான்கு திருமால் நிலைகளைக் கூறும் பரிபாடல் (3). பிரத்தியும்னனைக் காமன் என்பது தமிழ் வழக்கு. தமிழர் கூத்துக்களில் மூன்று அனிருத்தன் காதற்கதை பற்றியவை.[1]

விஷ்ணுவின் வியூகம் என்றும் கண்ணனின் அண்ணன் என்றும் வடபுலம் போற்றிய பலராமனைச் (சங்கர்ஷணன்) சங்ககாலத் தமிழகம் சிறப்பாக வணங்கியது. கலப்பை ஆயுதத்தையும், பனைமர வடிவு எழுதப்பெற்ற கொடியையும் உடைய பலராமனை நாற்பெரும் கடவுளரில் ஒருவராகக் குறிப்பிடும் புறநானூறு (56). பனையென்னும் சொல் வருமொழியோடு புணரும்போது ஐகாரம் கெடுவதே விதியாயினும் (உ-ம். பனங்கிழங்கு, பனஞ்சுளை) பனையும் கொடியும் புணரும்பொழுது ஐகாரம் கெடாது வல்லெழுத்து மிகும் (பனைக்கொடி) என்பர் தொல்காப்பியர் (எழுத்ததிகாரம் 285). இவ்வாறு பனைக்கொடி பற்றி அவர் தனியே விதி வகுத்ததிலிருந்து அவர் நாளில் அக்கொடி பெரிதும் வழக்கிலிருந்ததென்று ஊகிக்கலாம் என்பர் மு.இராகவையங்கார்.[2] பனைக்கொடி பலராமனுக்கே உரியது என்பதால் தொல்காப்பியர் காலத்தில் பலராம வணக்கம் எய்திய சிறப்பினை உணரலாம். சிலப்பதிகாரமும் பூம்புகாரில் இருந்த முக்கியமான கோயில்களில் ஒன்று பலராமன் கோயில் என்று கூறும்

---

1. அனிருத்தன் வாணாசுரன் மகளான உஷையைக் காதலித்து மணந்தான் என்பது கதை இது பற்றிய கூத்துக்கள்; 1) குடக் கூத்து. பல குடங்களை மேலெழ வீசிப் பிடித்து அம்மானை போல் ஆடும் கூத்து. வாணாசுரன் அனிருத்தனைச் சிறை வைத்த போது, கண்ணன் இக்கூத்தை ஆடினான் (சிலப் 6:54-55).2) அனிருத்தனைச் சிறை மீட்டுப் பிரத்தியும்னன் பேடி வடிவில் ஆடியது பேடி ஆடலாம் (சிலப்.6:56-57) மணி 3:110-125). 3)மல்லாடல், மல்லனாகச் சென்று வாணனைத் தாக்கித் தொலைத்துக் கண்ணன் ஆடியது (சிலப்.6:48-49)

2. ஆராய்ச்சித் தொகுதி, பக்கம் 54.

(5:171). அழகர்மலை ஆலயத்தில் கண்ணன் திருவடிவத்தோடு பலராமன் புனித உருவும் இருந்ததாகப் பரிபாடல் கூறும் (15:19–29). பலராமனைத் திருமாலின் அவதாரமாகக் குறிப்பிடும் பரிபாடல் (1,2,13). கலித்தொகையும் பலராமனைக் குறிப்பிடும் (26,36,104,105).

15. பண்டைய தமிழர் கொண்டாடிய இராமாயணம்

திருமாலின் ஏனைய அவதாரங்களையும் பண்டைய தமிழர் போற்றினர். மூவேழு தலைமுறை அரசர்களை அழித்த பரசுராமாவதாரத்தை அகநானூறு (220) குறிப்பிடும். அவன் கோபத்துக்கு இலக்காகக் கூடாதென்றே காந்தன் என்னும் சோழன் தன் கணிகை மகனான ககந்தனிடம் அரசை ஒப்படைத்தான் என்று மணிமேகலை (22:25–37) கூறும். பத்துப்பாட்டில் ஒன்றான முல்லைப்பாட்டு முல்லைநிலத் தெய்வத்தைக் கூறித் தொடங்கும் போது, திருமாலின் வாமனாவதாரத்தைக் குறிப்பிடுகிறது. பரிபாடல் நரசிங்காவதாரத்தையும் (4) பன்றி அவதாரத்தையும் (2,3,4,13) குறிப்பிடுகிறது. ஆயினும், கிருஷ்ணாவதாரத்தைப் போல் தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது இராமாவதாரமே. சோழன் ஒருவனிடம் அணிகலன்களைப் பரிசாகப் பெற்ற ஓர் எளிய புலவரின் குடும்பத்தார், அணிமுறை அறியாமல், விரலணிகளைச் செவியிலும், செவியணிகளை விரலிலும், அரையணிகளைக் கழுத்திலும், கழுத்தணிகளை அரையிலுமாக மாறியணிந்ததற்கு இராமாயணக் கதையிலிருந்து உவமை தருவார் ஊன்பொதி பசுங்குடையார்:

கடுந்தெறல் இராமனுடன் புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வவ்விய ஞான்றை
நிலம்சேர் மதர் அணி கண்ட குரங்கின்

செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந்தா அங்கு
அறாஅ அருநகை இனிது பெற்றிகுமே[1] (புறநா.378)

சீதை கழற்றி எறிந்த அணிகலன்களைக் குரங்குகள் அணி முறை அறியாது அணிந்தன என்ற செய்தியை வான்மீகம் அறியாது; அது தமிழகத்துக்கே உரிய பழங்கதையாகும். அது போலவே, ஆதி காவியம் அறியாத மற்றொரு செய்தியைக் கடுவன் மள்ளனார் உவமையாக ஆள்கிறார்:

வென்வேற் கவுரியர் தொல்முது கோடி
முழங்குஇரும் பௌவம் இரங்கும் முன்துறை,
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல,
ஒலி அவிந் தன்றுஇவ் அழுங்கல் ஊரே.[2] (அகநா.70)

தனுஷ்கோடிக் கடற்கரையில் ஆலமரத்தின் கீழ் இராமன் தன் துணைவருடன் மந்திராலோசனை செய்தபோது, ஆங்குள்ள பறவைகளின் ஓசை அதிகமாகவே, இராமன் தன் திருக்கையால் அமர்த்தி

---

1. கடுந்தெறல் - விரைவாக அழிக்கும் திறன் உடைய, அரக்கன் - இரக்கம் இல்லாதவன் (இங்கு இராவணன்), வவ்விய ஞான்றை - கவர்ந்த போது. நிலம் சேர் - நிலத்தை அடைந்த (அடையாளமாகப் பயன்படுமென்று சீதை கழற்றி எறிந்த). மதர் அணி - ஒளிமிக்க ஆபரணம், குரங்கின் செம்முகப் பெருங்கிளை - செவ்விய முகத்தை உடைய பெரிய குரங்குக் குழு - சுக்கிரீவனைச் சேர்ந்த குரங்குகள். இழைப்பொலிந்தாங்கு - அந்த நகைகளை அணிந்ததுபோல். அறாஅ - நீங்காத. பெற்றிகும் - பெற்றோம்.

2. வென்வேல் - வெற்றிவேல், கவுரியர் - பாண்டியர். தொல்முது கோடி - மிகப் பழமையான தனுஷ்கோடி, இரும்பௌவம் - பெரிய கடல். இரங்கும் - ஒலிக்கும். வெல்போர் - வெல்லும் போரில் வல்ல. அருமறை - அரியமறை- மந்திராலோசனை. அவித்த - பறவைகளின் ஒலியை இல்லையாகச் செய்த. பல்வீழ் - பல விழுதுகளை உடைய, அழுங்கல் - ஆரவாரம் (உடைய) இரண்டு செய்திகளுமே (புறநா.378; அகநா 70) உவமையாக வருகின்றன தெரிந்ததை உவமையாகக் கொண்டு தெரியாததை விளக்குவதே மரபு. எனவே, சங்ககாலத்தில் இராமாயணக் கதை பெருவழக்கு எய்தியிருந்தது என்று ஊகிக்கலாம்.

அவ்வொலியை அடங்கச் செய்தனனாம். இதுவும் தமிழகத்துக்கே உரிய கதையாகும்.

வில் முறிவுக்குப் பின்பே இராமன் சீதையைக் கண்டான் என்று வான்மீகம் கூற, மிதிலையில் நுழைந்து வீதி வழியே நடந்தபோதே இராமன் கன்னி மாடத்தில் நின்ற சீதையைக் கண்டான் என்பன் கம்பன். சீதையும் இராமனும் அப்போதே காதல் கொண்டனர் என்று தமிழ் அகத்திணை மரபுக்கு ஏற்றவாறு கதை அமைப்பான். இது கம்பனாகச் செய்த மாற்றம் அன்று: வழி வழி வந்த தமிழ் வழக்கே இது என்பது தொல்காப்பிய உரையில் (பொருள்.54) நச்சினார்க்கினியர் தரும் மேற்கோள் பாட்டால் விளங்குகிறது.

இராமாயணத்தில் கிளைக் கதையாக வரும் அகலிகை வரலாற்றையும் சங்ககாலத் தமிழர் அறிந்திருந்தனர். கோதம் முனிவர் நீராடச் சென்ற போது இந்திரன் அவர் உருவில் வந்து அவர் மனைவியான அகலிகையின் கற்பைக் கெடுத்தான் என்றும், அப்போது அங்கு வந்த முனிவர் இருவரையும் சபித்தார் என்றும், இராமன் அங்கு வரும்போதே அகலிகைக்குச் சாபம் நீங்குமென்றுரென்றும் ஆதி காவியம் கூறும். திரும்பி வந்த முனிவர் இந்திரனை அவன் இயற்கை உருவத்தோடு கண்டார் என்பது வான்மீகம். அப்போது இந்திரன் பூனை உருக்கொண்டு போகலுற்றுன் என்பது தமிழ் வழக்கு. ''எவர் கண்ணிலும் படாமல் காற்றை உட்கொண்டு கிடப்பாய்'' என்பது அவர் அகலிகைக்கு இட்ட சாபம். ''கல்லாகக் கிட!'' என்று அவர் சபித்தாரென்பது தமிழ் வழக்கு. திருப்பரங்குன்றக் கோயிற் சித்திர மண்டபத்தில் தமிழ் வழக்கைத் தழுவிய ஓவியம் இருந்ததைப் பரிபாடல் கூறும்:

> இந்திரன், பூசை; இவள்அக லிகை; இவன்
> சென்ற கவுதமன்; சினன்உறக் கல்லுரு
> ஒன்றிய படி இது[1] (19:50–52)

---

* *பூசை - பூனை. சினன் உற - (கவுதமன்) கோபங்கொண்டு (சபித்ததால்). ஒன்றிய - பொருந்திய*

இந்தத் தமிழ் வழக்கைத் தழுவியே கம்பனும் பாடிச் செல்வான். துளஸிதாஸின் இராமாயணம் முதலியவையும் இந்த மாற்றத்தைப் பின்பற்றுகின்றன:

இராமன் திருமாலின் அவதாரமே என்பது யாவரும் அறிந்த பழஞ்செய்தியாகவிருப்பதை ஜைன அம்மையாரான கவுந்தி அடிகளின் வாக்காகக் கூறுவர் இளங்கோ அடிகள்.

தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வன் பயந்தோன் என்பது
நீ அறிந்திலையோ நெடுமொழி அன்றோ![1] (14:46–49)

என்று கோவலனிடம் மொழிவர் கவுந்தி அடிகள்.

பௌத்த காப்பியமான மணிமேகலையும் இராமன் திருமாலின் அவதாரம் என்று கூறும். குரங்குகள் மலைகளைக் கொணர்ந்து கடலுள் எறிந்து இலங்கைக்குத் திருவணை அமைத்ததையும் அது உவமையாகக் குறிப்பிடும்:

நெடியோன் மயங்கி நலமிசைத் தோன்றி
அடல் அரு முந்நீர் அடைந்த ஞான்று
குரங்கு கொணர்ந்து எறிந்த நெடுமலை எல்லாம்
அணங்கு உடை அளக்கர் வயிறு புக்காங்கு.[2] (17:9–12)

மேலும் ''குரங்கு செய் கடல் குமரியம் பெருந்துறை''[3] (5:37) என்று

---

1. தாதை–தந்தை (தயரதன்). மாது, காதலி- சீதை, போகி–காடு சென்று. வேத முதல்வன்–பிரமன். பயந்தோன்–பெற்றவன் (திருமால்). நெடுமொழி- புராணக் கதை, யாவரும் அறிந்த செய்தி.

2. நெடியோன்–திருமால், மயங்கி–அறியாமையால் மயங்கி, அறியாமையே பிறப்புக்கு காரணம் என்ற பொதுக்கொள்கை அடிப்படையில் திருமால் அவதாரத்துக்கும் காரணம் காண்கிறார் பௌத்த ஆசிரியர்! அடல் அருமுந்நீர் – வெல்லுதற்கரிய கடல், அணங்குடை அளக்கர் – வருத்தம் தரும் கடல்.

3. குரங்கு செய் கடல்–குரங்குகள் கரை செய்த (திருவணை அமைத்த) கடல்.

கூறி, குரங்குகள் அமைத்த திருவணை குமரியில் தொடங்கியதென்று தொல்லோர் வழங்கியதை உணர்த்தும். பின்னாளைய குமரித்தல புராணமும் அந்த மரபுரையைக் கூறுகிறதென்றும், குமரித்துறையில் நீராடுவோரின் சங்கற்பத்தில்[1] குமரியை ஆதிசேது என்பரென்றும் மு.இராகவையங்கார் கூறுவார்.[2] பராசக்தி கன்னியாக எழுந்தருளும் குமரித்துறையைப் பண்டைய பாரதம் புண்ணியத்தலங்களில் ஒன்றாகப் போற்றியதால்[3] இந்திய ஒற்றுமை பேணிய இராமாயணக் கதை குமரியோடு தொடர்பு கொண்டது இயல்பே.

திருவணை கட்டும் முயற்சியில் அணில்களும் பங்கு கொண்டன என்பதும் வட நூல்கள் அறியாத தமிழ்க் கதையே. இந்த மரபுரையை முதன்முதலில் தொண்டரடிப் பொடி ஆழ்வார் குறிப்பிடுவார்:

குரங்குகள் மலையை நூக்கக்
குளித்துத்தாம் புரண்டிட்டு ஓடி
தரங்கநீர் அடைக்கல் உற்ற
சலம்இலா அணிலம் போலேன்.[4] (திருமாலை 17)

---

1. *சங்கற்பம் (ஸங்கல்பம்) – சடங்குத் தொடக்கத்தில் அச்சடங்கு செய்வதாகக் கூறும் உறுதிக் கட்டுரை (தமிழ் லெக்சிகன்).*

2. *ஆராய்ச்சித் தொகுதி: பக்கம் 30–31*

3. *கி.பி. முதல் நூற்றாண்டில் எகிப்தில் எழுந்த பெரிப்ளூஸ் என்னும் நிலநூல் குமரியின் பெருமையைப் பேசுகிறது. தங்கள் வாழ்நாளைப் புனிதமாக்க விரும்பும் மக்கள் குமரிக்கு வந்து நீராடித் துறவு பூண்டு வாழ்கின்றனர் என்றும், பெண்களும் அவ்வாறு செய்கின்றனர் என்றும், முன்னாளில் பெண் தெய்வம் ஒன்று இங்கே நீராடி வசித்ததாம் என்றும் அந்நூல் கூறும். மாமறை முதல்வனான மாடலன் அகத்தியரின் பொதிய மலையை வலம் கொண்டு குமரி சென்று நீராடினான் என்று (15:14–18;27:68–69) சிலப்பதிகாரம் செப்பும். கங்கையில் நீராடுவதைப் போல் குமரியில் குளிப்பதும் உயர்வாகக் கருதப்பெற்றது என்பது சிலப்பதிகாரத்தால் விளங்கும். குமரியில் குளித்தால் தீராத தீவினையெல்லாம் கழியுமென்று இந்தியர் யாவரும் நம்பினர் என்பது மணிமேகலை தரும் காட்சி (13:5–7;80–83).*

4. *நூக்க-எறிய. தரங்கநீர்-கடல். அடைக்கல் உற்ற- குளித்துப் புரண்டபோது ஒட்டிய மணலால் கடலை அடைக்க முயன்ற. சலம் இலா-வஞ்சனை இல்லாத.*

16. இந்திர விழா

வேந்தனாம் தேவேந்திரனை[1] மருதநிலத் தெய்வமாகக் கூறுகிறார் தொல்காப்பியர். இந்திரனை ஆயிரம் கண்ணோன், யாகம் பல செய்தோன், வெற்றி வீரன், (ஐராவதம் என்னும்) யானையை ஊர்தியாக உடையோன் என்று புகழ்வர் நக்கீரர் (திருமுருகு. 155–59). ஓரம்போகியார் இந்திர விழாவைக் குறிப்பிடுவர் (ஐங்குறு.62). பூம்புகாரில் இந்திரன் கோயிலோடு வச்சிரப்படைக்கும்[2] ஐராவதத்துக்கும். கற்பகதருக்கும்[3] தனித்தனிக் கோயில் இருந்தது என்பர் இளங்கோ அடிகள் (5:141,143,145). வச்சிரக் கோட்டத்திலிருந்த முரசை யானைமேல் வைத்து ஐராவதக் கோட்டத்துக்கு எடுத்துச் சென்று இந்திரவிழா நாட்களை அறிவித்தனர் (சிலப். 5:141–4). அவ்வாறு முரசை எடுத்துச் செல்லும்போது, வீதிகளை அலங்கரித்தும், தெய்வங்களுக்கு வழிபாடு நடத்தியும், அறிவுரைகளைக் கேட்டும்

---

1. ரிக்வேத காலத்தில் தலைமைநிலை மேவிய இந்திரன் பின்னாளில் சிறுதெய்வமாக தாழ்ந்தான் என்றோம். எனினும், அமராவதி என்னும் மேல் உலகத் தலைவனாகவும் கீழ்த்திசைக் காவலனாகவும் அவனை இந்தியச் சமயங்கள் அனைத்தும் போற்றின. பௌத்தர் இந்திரனைச் சக்கிரன் என்றும் கூறுவர். ஆற்றல்மிக்க தெய்வங்களான பிரமனும் இந்திரனும் கூடப் புத்தரை வணங்கினர் என்று தொடக்ககாலப் பௌத்தம் புகன்றதிலிருந்தே, இந்திரனின் தெய்வ நிலையை அது ஏற்றது என்பது விளங்கும். அருக தேவரை முதன்மையாகப் போற்றிய சமணரும் இந்திரனை மதித்தனர். சமண சமயத்தின் முதல் தீர்த்தங்கரரான ரிஷப தேவர் (இவரே ஆதிபகவன் என்பர்) காலத்தில் இந்திர விழா ஏற்பட்டதென்பது சமணர்மரபுரை. எனவே, எச்சமயத்தாரின் தொடர்பால் மருதநிலத் தலைவனாக இந்திரன் ஏற்றம் பெற்றான் என்று துணிய முடியாது.

2. வச்சிரப்படை–இருகலைச் சூலமாய் நடுவுபிடியாயுள்ள ஓர் ஆயுதம் என்பர் அடியார்க்கு நல்லார்.

3. கற்பகத் தரு–வேண்டின வேண்டினர்க்கு அளிக்கும் தேவருலக விருட்சம்.

இந்திர விழாவைக் கொண்டாடுமாறு வள்ளுவன் முரசறைந்து மொழிவான் (மணி. 1:27–72). கற்பகத்தருக் கோயிலில் கொடியேற்றி இந்திரவிழாவைத் தொடங்குவரென்றும், காவிரிப்புண்ணியநீரால் இந்திரனை நீராட்டுவரென்றும், சதுக்கப்பூதத்துக்கும் ஐவகை மன்றங்களுக்கும்[1] பலிகொடுப்பரென்றும், சிவன் முதலிய தெய்வங்களை வழிபடுவரென்றும் சிலப்பதிகாரம் செப்பும் (காதை.5). சித்திரா பௌர்ணமியில்[2] விழாத் தொடங்கியது என்பர் இளங்கோ.

சம்புத் தீவிலுள்ளார்க்கு (இந்தியர்க்கு) அவுணரால் வரும் தீங்கை நீக்குவதற்கு முற்காலத்தில் சம்புத்தெய்வம் இந்திரனுக்கு விழா எடுத்தாள்; எனவே இந்த விழாவைத் தீவக சாந்தி என்றும் கூறுவர் (மணி. 2:1–3). அகத்திய முனிவர் ஆணையிடவே தொடித்தொட் செம்பியன் ஆண்டு தோறும் இருபத்தியெட்டு நாள் இந்திர விழா நடப்பதற்கு ஏற்பாடு செய்தான் (மணி. 1:1–9). விழாவை எடுக்காது விட்டால் புகாரைக் கடல் கொள்ளும் என்று ஆணையிருந்தது (மணி. 24:62–69) பீலிவளைக்குப் பிறந்த மகனை ஏற்றி வந்த கப்பல் கவிழ்ந்த செய்தி கேட்டுத் தவித்தநெடுமுடிக்கிள்ளி மகனைத் தேடும் பரபரப்பில் இந்திரவிழாச் செய்யாது போனதால், புகாரைக் கடல் கொண்டது என்றும் மணிமேகலை மொழியும் (25:175–200).

---

1. ஐவகை மன்றங்கள் - களவாடக் கருதியோரை நடுங்க வைத்த வெளியிட மன்றம், நோயால் அழுகியவரைக் குளித்தவுடன் குணப்படுத்தும் பொய்கையை உடைய மன்றம்; நஞ்சாலும் பேயாலும் துன்புற்றாரின் துயர்நீக்கும் ஒளியைச் சொரியும் கல்நாட்டி நிற்கும் மன்றம்; ஒழுக்கம் கெட்டவரை நிலத்தில் புடைத்து உண்ணும் பூதம் நிற்கும் சதுக்கம்; அரசன் கோல்கோடினும் அவையத்தார் நேர்மை திரியினும் கண்ணீர் உகுத்து அழும் பாவை நிற்கும் மன்றம் (சிலப்.5:111-140).

2. சித்திரா பௌர்ணமி; சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம் கூடிய நிறைமதி. அன்று எல்லாப் பலன்களையும் கொடுக்கவல்ல இந்திர வழிபாடு செய்தல் வழக்கம் என்று பின்னாளைய தேவி புராணமும் கூறும்.

17. பெருமை குன்றிய இந்திர வருணர்

ரிக் வேதத்தில் தலைமைத் தேவனாகத் திகழ்ந்து பின்னர் கடல் தெய்வமாக மாறிய வருணனை நெய்தல் நிலத்தெய்வம் என்பர் தொல்காப்பியர். நெய்தல்நிலப் பரதவர் சுறாக் கொம்பை நட்டு நேர்த்திக் கடன் செலுத்தும்போது[1] ஆண்டு வருணன் வெளிப்படுமென்பர் நச்சினார்க்கினியர். பரதவர், சுறாக்கொம்பை நட்டு அதனிடம் வருணன் எழுந்தருள்வதைக் கண்டு, மாலை அணிந்தும் மலர் சூடியும் கள்குடித்தும் ஆடுவர் என்று பட்டினப்பாலை கூறும் (84–89). 'புகாஅர்த்தெய்வம்' என்றும் கடற்கரை 'அணங்கு' என்றும் நெய்தல் நில இறைவனான வருணனை அகநானூறு குறிப்பிடும் (110,240). பாண்டிய குலம் கண்ட பழைய பேரரசர்களில் ஒருவனான நெடியோன்[2] கடல் தெய்வத்துக்கு விழா எடுத்தான் என்ற மரபுரையை நெட்டிமையார் கூறுவதிலிருந்து (புறநா.9) வருண வழிபாட்டின் தொன்மையை உணரலாம். சிலப்பதிகாரமும் கடல் தெய்வத்தைக் குறிப்பிடும் (7:5).

குறிஞ்சியில் முருகனும் முல்லையில் மாயோனும் மருதத்தில் இந்திரனும் நெய்தலில் வருணனும் சிறப்புடைத் தெய்வமாக விளங்கிய பழைய வரலாற்றின் அடிப்படையில் இலக்கிய மரபு அமைந்ததையே தொல்காப்பியம் கூறுகிறது. உண்மையில், சங்க காலத்தில் நாகரிகச் சமுதாயத்தில் திரண்ட நால்வகை நிலத்தோரும் முருகனையும் மாயோனையும் வணங்கினர் என்பதும், அந்த இருவரும் பல் தெய்வ ஐக்கிய நெறியில் அனைத்திந்திய வழிபாட்டுக்கு உரியராயினர்

---

1. பரதவர் தம் தெய்வத்திற்கு என்ன பெயர் இட்டு வழங்கினர் என்பதை நாம் அறியோம். வடபுலத்திருந்து வந்த மக்களின் தொடர்பால், தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே, அத் தெய்வத்துக்கு வருணன் என்ற பெயர் ஏற்பட்டு விட்டது.

2. நெடியோன்: இவனே வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்பர். மதுரைக் காஞ்சியும் (55-61) சிலப்பதிகாரமும் (22: 56-60) இவனைப் புகழும்.

என்பதும் முற்கூறியவற்றால் விளங்கும். மேலும், முன்னோர் கண்ட முறையினைப் போற்றிய பழந்தமிழர் இந்திரவிழாவினைத் தொடர்ந்து கொண்டாடினராயினும், பரதவர் குப்பங்களில் வருண வணக்கம் நீடித்ததாயினும், இந்திர வருணர்களின் செல்வாக்குக் குறைந்திருந்தது எனலாம். இந்திரன் அகலிகையிடம் நெறி தவறினான் என்னும் கதை திருப்பரங்குன்ற கோயில் மண்டபத்தில் ஓவியமாகக் காட்சி தந்ததும் (பரிபாடல் 19), அகத்தியர் சாபத்தால் இந்திரன் தன் பதவியை இடையே இழந்தான் என்ற கதை வழங்கியதும் (குறள் 899), இந்திரன் பெருமை குன்றியதை உணர்த்தும்.[1] நெய்தல் நில நகரான புகாரில் நடந்த இந்திரவிழாவில் வருண வணக்கம் சிறப்பிடம் பெறாமை வருணன் சிறப்புக் குறைந்ததை உணர்த்தும். இந்திர விழாவிலேயே, சிவன், முருகன், கண்ணன், பலராமன் ஆகியோரின் வழிபாடும் சிறப்பிடம் பெற்றதால், சங்ககால நகரங்களில் இந்திரனோடு அந்நான்கு தெய்வங்களும் உயர்நிலை மேவியதை உணரலாம்.

18. தென்னாடு உடைய சிவன்

சிவபெருமானைத் தொல்காப்பியர் குறிப்பிட்டாரல்லர் என்பது மெய்யே. இலக்கண நூலில் அதற்கான வாய்ப்பில்லை என்பதையே அது உணர்த்தும். முற்கால வரலாற்றில் நால் வகை நிலங்களிலும் வேறு வேறு தெய்வங்கள் ஏற்றம் பெற்றனர்; அவர்களே நானிலத் தெய்வங்களாக இலக்கிய மரபில் இடம் பெற்றனர். மேலும், அவர் காலத்தில் தமிழர் பல கடவுளரை வணங்கியதால், கடவுள் வாழ்த்தைப் பற்றிப் பேசும் போதும் அவர் 'வாழ்த்தியல்' என்றும் 'வழிபடு தெய்வம்' என்றும் பொதுவில் புகன்றார் (பொருள். 421,422). திருமறையே முதல் நூலாகும் என்று கூறுமிடத்திலும் வெவ்வேறு சமயத்தினர் வெவ்வேறு கடவுள் அருளிய திருநூலை ஓதுவதால், கடவுளை முனைவன் என்று பொதுவில் குறிப்பிட்டார்:

---

1. இராமாயண மகாபாரதக் கதைகளின் செல்வாக்கைக் கருதும்போது, இந்திரன் மேகநாதனிடம் தோற்ற கதையும் கண்ணனிடம் கர்வபங்கம் உற்ற கதையும் பண்டைய தமிழகத்தில் பெரு வழக்கு எய்தின என்றும் கருதலாம்

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூல் ஆகும்.[1] (பொருள். 649)

சிந்துவெளிச் சிவன் சங்க காலத்துக்கு முன்பே தென்னாடுடைய சிவன் ஆனதுடன், அப்பெருமானே நான்மறை நல்கினான் என்னும் ஒற்றுமைக் காட்சியைச் சங்க சான்றோர் கண்டனர். வேதவேள்வி இயற்றிய பூஞ்சாற்றூர்ப் பார்ப்பானைப் பாடும்போது,

நன்று ஆய்ந்த நீள்நிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகாது,
ஒன்றுபுரிந்த ஈர் – இரண்டின்
ஆறுஉயர்ந்த ஒருமுதுநூல்[2] (புறநா.166)

என்று வேதத்தைக் குறிப்பிடுவார் ஆலூர் மூலங்கிழார்.

ஞாலம்நாறும் நலங்கெழு நல்லிசை
நான்மறை முதுநூல் முக்கண் செல்வன்[3] (அகநா.181)

என்பர் பரணரும். இந்த மரபே, ''முத்தமிழும் நான்மறை ஆனான் கண்டாய்'' என்றும், ''வடமொழியும் தென் தமிழும் மறைகள் நான்கும்

---

1. கடவுளுக்குக் கர்ம பந்தம் இல்லை என்பது சைவ வைணவ நிலை. முன்பு இருந்த வினைக்கட்டைத் தவம் முதலியவற்றால் நீக்கி மெய்யறிவு பெற்றவர் அருகர் என்று சமணர் கூறுவர்; அவ்வாறு ஞானம் பெற்றவர் புத்தர் என்பர் பௌத்தர். ''இயல்பாகவே கருமத்திலிருந்து நீங்கி'' என்று சைவ வைணவரும், ''வினைக்கட்டை நீக்கி'' என்று சமண பௌத்தரும் பொருள் கொள்ளும் வகையின் 'வினையில் நீங்கி' என்ற தொடரை ஆள்கிறார் தொல்காப்பியர். விளங்கிய அறிவின் முனைவன் - அறிவு வடிவாக விளங்கும் கடவுள்.

2. முதுமுதல்வன் - சிவபெருமான். வாய் போகாது - வாக்கை விட்டு நீங்காது. ஒன்று புரிந்த - அறம் ஒன்றையே மேவிய. ஈர் - இரண்டின் - நான்கு பகுதி (ரிக், சாம, யஜுர், அதர்வ மறைகள்) உடையதாய். ஆறு - வேதாங்கம் ஆறு: வியாகரணம், சோதிடம், நிருத்தம், சந்தம், சிட்சை, கற்பம் என்பன. முதுநூல் - பழைய நூலாகிய வேதம்.

3. ஞாலம் நாறும் - உலகு எங்கும் பரவிய. நான் மறை முது நூல் - நான்கு வேதங்களை உடைய பழைய நூலை (அருளிய)

ஆனவன் காண்'' என்றும் அப்பர் அடிகள் திருவாய் மலர்ந்ததில் வெளியாகும். ரிக்வேதத்தில் ருத்திரன் அச்சுறுத்தும் தெய்வமாகக் காட்சி தருவதும், மங்கல வழக்காகவே அவனைச் சிவன் (நலம் செய்வோன்) எனப் புகழ்ந்த பழைய ஆரிய மரபும், பரமசிவன் வேதம் அருளினார் என்னும் கருத்து முன்னைய வட நூல்களில் இடம் பெறாமையும் கருதினால், சிந்து வெளியில் சிறப்பெய்திய சிவபெருமானின் அருட் கொடையாகத் தமிழகத்தில் நான்மறை கருதப் பெற்றதின் தனித்தன்மை விளங்கும். ஆம், சிந்துவெளி மரபின் உரத்தை உணர்த்துவது அது.

சங்க இலக்கியம் வடநூல்களைப் போலவே சிவனின் திருவுருவையும் சாதனைகளையும் பற்றிப் பேசுகிறது. அழல் போல் ஒளிரும் சடையும், நஞ்சு உண்ட கண்டமும், இமையா முக்கண்ணும் உடைய உமையொரு பங்கன் என்றும், எருதுக் கொடியும் மழுப்படையும்[1] உடையோன் என்றும் காலக்கடவுள் என்றும்[2] முப்புரம்

---

1. மழுப்புடைய - கோடரி ஆயுதம். அது பஞ்ச பூதங்களால் அமைந்தது என்பர் மாங்குடி மருதனார்:

நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவன் ஆக (மதுரைக் 453 - 55)
(வளி - காற்று; மாக விசும்பு - திக்குகளை உடைய ஆகாயம்)

நெடியோன் என்றதால் இது திருமாலைக் குறிக்கும் எனல் பொருந்தாது. நெடியோன் என்று இந்திரனை மோசிகீரனாரும் (புறநா. 241), பாரியைக் கபிலரும் (புறநா. 114), பாண்டியன் ஒருவனை நெட்டிமையாரும் (புறநா.9) குறிப்பிடுவதால், நெடியோன் என்பது உயர்ந்தோன் என்ற பொருளில் தெய்வத்தையானும், மனிதனையானும் குறிக்கலாமென்பது விளங்கும். மேலும் மழுப்படை சிவனுக்கும் பரசுராமனுக்குமே உரியது என்பதாலும் இங்கு பரசுராமனை என்று பொருள் காண முடியாது என்பதாலும் மதுரைக்காஞ்சி சிவனையே தலைமைத்தெய்வமாகக் கூறுகிறது என்பது உறுதி.

2. காலக்கடவுள் - அழித்தல் தொழிலைச் செய்யும் சிவன். எனவே 'கூற்று' என்பர் நக்கீரர் (புறநா. 56).

எரித்த செல்வன்[1] என்றும் சிவனைத் தொழுது ஏத்துவர் நக்கீரர்.[2] இமயமலையை வில்லாகவும் வாசுகி என்னும் பாம்பை நாணாகவும் கொண்டு ஒப்பிலா அம்பால் திரிபுரம் எரித்து அமரருக்கு அருளிய நெற்றிக் கண்ணன் என்று சிவனைப் புகழ்வர் மருதன் இள நாகனார் (புறநா.55).

பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணி மிடற்றுஒருவன்[3] (புறநா.91)

என்பர் ஔவையார். ''ஆல் அமர் கடவுள்'' என்றும் (புறநா.198),''ஆல் கெழு கடவுள்'' என்றும் (திருமுருகு 256) ''ஆல் அமர் செல்வன்'' என்றும் (சிறுபாண்.97) சிவ பெருமானைக் குறிப்பர் சங்கப்புலவர். ஆலமரத்தின் கீழ் அமர்ந்த இறைவன் என்று பொருள்படும் இத்தொடர்கள் தெற்கு நோக்கிய சந்நிதி உடைய தட்சிணாமூர்த்தியைக் குறிக்கின்றன.[4] எனவே தென்முகக் கடவுள் வழிபாடும் சங்ககாலத்தில் வழங்கியதென்பதை அறியலாம்.

பாரதம் பாடிய பெரும்தேவரின் பாடல்கள் சிவனின் ஆளுமையைச் செவ்விதாகப் புலப்படுத்துகின்றன. ஆலம் தங்கியதால் கருநிறம் பெற்ற கழுத்தை உடைய அந்தணனான சிவபெருமான், குற்றமற்ற பூணூலையும் கொன்றை மலரால் வேய்ந்த

---

1. அவுணருக்கு உரியனவும் விண்ணில் இயங்கியவையுமான மன்று கோட்டைகளைச் சிவன் எரித்தான் என்பது கதை. அந்நகரங்கள் முறையே பொன், வெள்ளி, இரும்புகளால் அமைந்த அரண்களை உடையன என்பது புராணம்.

2. புறநா. 56; திருமுருகு. 151 - 54

3. பால்புரை பிறைநுதல் - பால் போலும் வெண்மையான குழவித் திங்களை நெற்றியில் உடைய. நீலமணிமிடறு - நீலமணி போலும் கரிய கழுத்து.

4. சிலப்பதிகாரத்தில் மதுராபதி தெய்வம் கண்ணகியிடம் கூறும் கதையில், ஒரு பார்ப்பனச் சிறுவன் ''ஆல் அமர் செல்வன் பெயர் கொண்டு வளர்ந்தோன்'' (23: 91) என்று கூறப்பெறுகிறான். சில அடிகளுக்குப் பின் அவனே 'தக்கிணன்' என்று குறிப்பிடப் பெறுவான். எனவே ஆலமர் கடவுள் என்பது தட்சிணாமூர்த்தியையே குறிக்குமென்பது தெளிவு.

கண்ணிமாலைகளையும் தரித்தும், புலித்தோல் உடுத்தியும், குழவித்திங்களைச் சென்னியில் அணிந்தும், உமையொரு பாகனாகவும் தாழ்சடைப் பொலிந்த அருந்தவத்தோனாகவும் காட்சி தருகிறான். அவனுக்கு ஊர்தி எருது; கொடியும் அதுவே. மழுவும் முத்தலைச் சூலமும் அவனுக்கு ஆயுதங்கள். நீர் வற்றாத கமண்டலமும் உடையன் அவன். கண்டத்தில் தங்கிய நஞ்சும் நுதலுக்கு அணி செய்யும் பிறையும் அவன் அடியார் திறத்துச் செய்த கருணையைக் காட்டுவதால், அந்தணரும் அமரரும் அவற்றைப் புகழ்வர். இவ்வாறு சித்திரம் தீட்டுவர் பெருந்தேவனார்.[1]

அவனைக் கங்காதரனாகவும், கபாலமும் கொடுகொட்டியும் பாண்டரங்கமும் ஆடுவானாகவும் கலித்தொகையின் கடவுள் வாழ்த்து குறிப்பிடும். சிவனின் கைலாயத்தைத் தாக்க முற்பட்டு, மலையைப் பெயர்க்கவோ கையை விடுவிக்கவோ முடியாது இராவணன் வருந்தியதை உவமையாக ஆளும் கலித்தொகை (38):

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமை அமர்ந்து உயர்மலை இருந்தனனாக,
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையின் கீழ்ப்புகுந்து, அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல.[2]

திரிபுரம் எரித்த கதையின் வளர்ச்சியைப் பரிபாடலில் (5) காணலாம். உலகமாகிய தேரில் வேதங்களான குதிரைகளைப் பூட்டிப் பிரமன் செலுத்த, மலையை வில்லாகவும் பாம்பை நாணாகவும் கொண்டு, அழல் அம்பால் முப்புரம் எரித்தான் சிவன் என்று கூறும்

---

1. *புறநா. 1; அகநா. கடவுள் வாழ்த்து.*

2. *இமையவில் வாங்கிய - இமயத்தை வில்லாக வளைத்த, ஈர்ஞ்சடை - கங்கை தங்கும் சடை முடியை உடைய, அந்தனள் - சிவபெருமான், உயர்மலை - கயிலாயத்தில், ஐயிரு தலையின் அரக்கர் கோமான் - பத்துத் தலைகளை உடைய இராவணன், தொடி - வளை, பொலி - விளங்கும், தடக்கை - பெரிய கை, கீழ் புகுந்து - மலையின் கீழ் நுழைந்து, உழைப்பவன் - வருத்துவோன்.*

அப்பாட்டு; தக்கன் யாகத்தில் புகுந்து வேள்விப்பாகத்தைச் சிவன் உண்ட செய்தியும் அப்பாட்டில் இடம் பெறுகிறது:

ஆதி அந்தணன் அறிந்துபரி கொளுவ,
வேத மாபூண் வையத்தேர் ஊர்ந்து,
நாகம் நாணா, மலைவில் லாக,
மூவகை ஆர்எயில் ஓர்அழல் அம்பின்முனிய
மாதிரம் அழலஎய்து; அமரர் வேள்விப்
பாகம் உண்ட பைங்கண் பார்ப்பான்.[1]

சிவனுக்குப் புகாரில் இருந்த கோயிலைப் ''பிறவாயாக்கைப் பெரியோன் கோயில்''[2] என்றும் மதுரையில் இருநததை ''நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயில்'' என்றும் சிலப்பதிகாரம் கூறும். சேரன் தலைநகரிலும் சிவன் கோயில் சிறந்து விளங்கியது. செங்குட்டுவன் சிவபக்தனாகத் திகழ்ந்தான் என்பர் இளங்கோ. பிறை சூடிய பரமனை வணங்கி, அவன் திருவடி மலரை மணிமுடியில் அணிந்து, ஆலயம் வலம் வந்து. ஓமத்தீ வளர்த்த வேதியரின் வாழ்த்துப் பெற்று, அவன் வடபுலப் பயணம் தொடங்கினான் என்பது சிலப்பதிகாரக் காட்சி (26:54–60). இமயத்தின் கொடுமுடியில் இமையா முக்கண்ணன் வாழ்ந்தான் என்றும் இளங்கோ அடிகள் இயம்புவார்:

இமையவர் உறையும் இமயச் செவ்வரைச்
சிமையச் சென்னித் தெய்வம்[3] (28:65–77)

---

1. ஆதி அந்தணன் - முதலில் தோன்றிய மறையோன் (பிரமன்), அறிந்து - தேரோட்டும் கலை அறிந்து, பரிகொளுவ - குதிரையைச் செலுத்த, வேதமாபூண் வையத்தேர் - வேதங்களாகிய குதிரைகள் பூட்டப்பட்ட உலகமாகிய தேரில், நாணா - நாணாக, எயில் - கோட்டை, ஓர் - ஒப்பற்ற, முனிய - அழிக்க,மாதிரம் - திசை, அழல - வேக, பைங்கண் - பசுமையளே, கண்ணையுடைய, பார்ப்பான் - சிவபெருமான்.

2. பிறவா யாக்கைப் பெரியோன் - உடல் எடுக்காத சிவன்,சிவன் உலகில் அவதாரம் செய்யான்.

3. இமையவர் - தேவர், இமயச் செவ்வரை - இமயமலை, சிமையச் சென்னி - கொடுமுடியின் உச்சியிலுள்ள, தெய்வம் - சிவன்

இந்திர விழாவில், மாதவி ஆடிய பதினோரு ஆடல்களில், இறைவனுக்குரிய கொடுகொட்டியும்[1] பாண்டரங்கமும்[2] இடம் பெற்றன (5:40–45). வஞ்சியில் செங்குட்டுவன் முன்னிலையில் கூத்தச்சாக்கையன் கொடுகொட்டி ஆடினான் (28:65–77).

19. காளி வழிபாடு

கண்ணனோடு மாயோனும் கந்தனோடு முருகனும் ஒன்றியதைப் போல் சிவனில் ஒன்றிய தமிழ்த் தெய்வம் பற்றிய நினைவு எதுவும் சங்க நூல்களில் தென்படவில்லை. ஆனால் கொற்றவை என்னும் தமிழ்த் தெய்வமே சிவனின் சக்தியான உமையுடன் ஒன்றினாள் என்று ஊகிக்க இடமுண்டு. ''விறல் கெழு சூலி'' என்று அவளைக் குறுந்தொகை (218) கூறுவதாலும், முருகனைச் சிவகுமாரன் என்பதோடு கொற்றவை சிறுவன் என்றும் பழையோள் குழவி என்றும் நக்கீரர் குறிப்பிடுவதாலும்[3], சங்க காலத்திலேயே கொற்றவையான பழையோள் உமையாகவும் துர்க்கையாகவும்[4] காட்சி தரும் சிவசக்தியோடு ஒன்றிவிட்டாள் என்பது விளங்கும். மேலும், பிரிந்து சென்ற தலைவன் விரைவில் திரும்பி வந்து நீங்காது உறைதல் வேண்டுமென்றும் கொற்றவையைத் தலைவி வழிபடுவதைக் குறுந்தொகைப் பாட்டு (218) குறிப்பதால், குடும்ப வாழ்வுக்குக் கைகொடுத்து உதவும் தெய்வமாகக் கொற்றவை விளங்கியது புலனாகும். எனினும், சிறப்பாகப் போர்த் தெய்வமாகவே கொற்றவையைப் பழந்தமிழர் வழிபட்டனர். அவ்வாறு அவர்கள் வழிவழியாகத் தொழுது ஏற்றியதாலேயே, கொற்றவைக்குப் பலி யிட்டுப் பரவும் புறத்துறை தொல்காப்பியம் கூறும் இலக்கணத்தில் இடம்

---

1. *கொடுகொட்டி — திரிபுரம் எரியக் கண்டும் இரங்காது, சிவபெருமான் கைகொட்டி ஆடுதலால் பெயர் பெற்ற கூத்து.*

2. *பாண்டரங்கம்: திரிபுரம் எரிந்த போது, இறைவன் வெண்ணீற்றை அணிந்து ஆடிய கூத்து; இது நிறம் பற்றி வந்த பெயர்.*

3. *திருமுருகு. 256—59.*

4. *அவுணர்கள் பாம்பு, தேள் முதலியனவாக வஞ்ச உருவங் கொண்டு போர் புரிந்தபோது சீற்றம் கொண்டு துர்க்கை மரக்கால் கொண்டு, (மரத்தால் அமைந்த காலில் நின்று) ஆடிய கூத்தையும் மாதவி ஆடினாள் என்பர் இளங்கோ (6:58-59)*

பெற்றது (பொருள் 59). மேலும், முடக்கிய இரு கைகளையும் விலாப் புடைகளில் ஒற்றி அடித்துக் கொண்டு அசைந்தாடும் துணங்கைக் கூத்தைப் போர்க்களத்தில் ஆடும் பேய்க் கூட்டத்தைச் சுற்றமாக உடையவள் கொற்றவை. எனவே, அவளைத் 'துணங்கை அம் செல்வி' என்று குறிப்பிடும் பெரும்பாணாற்றுப்படை (459). முருகன் அவுணரைக் களத்தில் அழித்தபோது, அவுணரின் உதிரம் அளைந்த விரல்களால் அவர்தம் கண்களை உண்ட பேய்மகளிர், நிணம் தின்று துணங்கை ஆடினர் என்பர் நக்கீரர் (திருமுருகு.47–56).

கண்ணகியைக் கொற்றவைக்கும் காளிக்கும்[1] தனித் தனியே ஒப்பிட்டு வாயிலோன் பேசுவதால்,[2] தமிழ்க் கொற்றவை வேறு, துர்க்கை வேறு என்ற ஐதிகம் சிலப்பதிகார காலத்திலும் நிலவியது எனலாம். ஆனால் இருவரையும் ஒருத்தியாகக் கருதும் கொள்கை வலுப்பெற்று வந்ததென்பது வேட்டுவ வரியால் (சிலப்.12) விளங்கும். அதனுள் கொற்றவையைப் ''பலர் தொழும் அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி, மால்–அவற்கு இளங்கிளை''[3] (66–68) என்று புகழ்வர் இளங்கோ. மேலும், அவளே மகிஷாசுரனை வதைத்தாள் என்றும், மும்மூர்த்திகளின் உள்ளத்தாமரையில் ஒளிரும் சுடரும் அவளே என்றும், முக்கண்ணன் பாகத்து மறை ஏத்த மிளிர்வதும் அவள்தான் என்றும் கூறப்பெறும் (முன்னிலைப் பரவல்). இவ்வாறு, மகிஷாசுர மர்த்தனியான காளியையும், குமரியையும்,[4] இறைவன்பங்கில் உறையும் உமையையும்,

---

1. *காளி: கருநிறம் உடையள்: துர்க்கை.*

2. *வழக்குரை காதை: 34-40.*

3. *அமரி—அலங்கரித்தல் இல்லாதவள். கவுரி—பொன்னிறத்தை உடையவள். சமரி-போரில் வல்லவள். சூலி—சூலம் ஏந்தியவள், நீலி—நீலநிறமுடையோள். இளங்கிளை — (திருமாலுக்கு) இளையோள்.*

4. *குமரியாகவே பாரதநாட்டின் தெற்கு எல்லை காக்கிறாள் சக்தி. குமரி வழிபாட்டின் தொன்மையைப் பெரிப்ளூஸ் குறிப்பில் கண்டோம். தொடக்கத்தில் குமரி தனித்தெய்வமாகத் திகழ்ந்தனளாகலாம். உமாதேவி கன்னியாகவே இருந்து சிவபெருமானை எண்ணித் தவம் செய்கிறாள் என்றும், அதனால் அத்தலம் கன்னியாகுமரி என்று பெயர் பெற்றதென்றும் பின்னாளில் புராணம் எழுந்தது. இவ்வாறு கன்னி வழிபாடு சிவ வழிபாட்டுடன் இணைந்தது*

கொற்றவையையும் ஒரு தெய்வமாகக் காண்பதுடன், சாக்தர்போல், மும்மூர்த்திகளின் இதய ஒளியாகவே அவளைப் போற்றுகிறார் இளங்கோ.

காளியை வழிபடுவோர் தமது கழுத்தை அரிந்து காணிக்கை செலுத்துவர் என்று வேட்டுவவரி (அவிப்பலி) உணர்த்தும். காளிக்குத் தன் தலையைப் பலி கொடுக்கும் பக்தனை மாமல்லபுரச் சிற்பத்தில் காணலாம். இவ்வாறு தலையோ பிற உறுப்போ அரிந்து காணிக்கை செலுத்துவோரைக் கலிங்கத்துப் பரணி (12–ம் நூ.) புகழ்கிறது.

ஊர்த் தேவதைகளில் காளிக்கு முக்கிய இடம் உண்டு. மழை பொழிவித்துப் பஞ்சத்தையும் அம்மை முதலான தொத்து நோய்களையும் தவிர்க்கும் மாரியம்மனாகவும் காளிதேவி பரவப் பெறுகிறாள். பாரதக் கதையில் வரும் பாஞ்சாலி திரௌபதி அம்மன் என்ற வடிவில் காளி வடிவம் தரித்துத் தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள், மற்றொரு காவியத்தின் தலைவியான கண்ணகியின் வழிபாடும் காளி வழிபாட்டுடன் ஒன்றியது. மானிடச் செம்மை தெய்வநிலை மேவுவதையே சித்திரிப்பார் இளங்கோ. ஆனால் இவள் "துர்க்கையாகவே பிறந்தாள்"[1] என்று சிலப்பதிகாரம் கருதாத ஒன்றை அதன் அரும்பத உரையாசிரியர் கூறுவார். பின்னாளில் காளி அம்சமாகவே கண்ணகியைப் பரவினர் என்பதை இதிலிருந்து உய்த்துணரலாம். தன்னை வழிபடுவதற்குத் தடை விதித்த பாண்டியனைப் பழிவாங்கவே காளி கண்ணகியாகப் பிறந்தாளென்றும், அவள் ஐந்து வயதில் கோவலனுக்கு மாலையிட்டாள் என்றும், திருமண விழாவில் சதிராடவந்த மாதவி கோவலனை மயக்கித் தன்னோடு இட்டுச் சென்றாளென்றும், மாதவியைப் பிரிந்து வந்து கோவலன் கண்ணகியோடு மதுரை சென்றபோதும் இருவரும் தம்பதியாக வாழவில்லையென்றும் கதையை நடத்தி, அன்னை பராசக்தியின் அவதாரத்துக்குரிய தூய்மையைப் பாதுகாக்கிறது, பின்னாளைய அம்மானைப் பாடலான கோவிலன் கதை. மலையாள பகவதியான

1. *(வேட்டுவவரி), 47 - ன் உரை.*

கண்ணகி, இறுதியில் திருவொற்றியூரை அடைந்து வட்டபுரி அம்மனாக வழி பாட்டுக்கு உரியளானாள் என்று கதையை முடிக்கிறது கோவிலன் கதை. கண்ணகி வழிபாடு காளி வழிபாட்டுடன் இரண்டறக் கலந்ததை இதிலிருந்து அறியலாம்.

தில்லைக்காளி, காஞ்சிக் கொற்றவை, திருவொற்றியூர்த் துர்க்கை, காரைக்குடி கொப்புடையம்மன், நாட்டரசன் கோட்டைக் கண்ணாத்தாள் முதலிய தேவதைகளும் காளி உருவங்களே. தாய்த் தெய்வ வழிபாட்டின் தொன்மைக்கும் வலுவுக்கும் இந்த ஊர்த் தேவதைத் தொழுகை சான்றாம். சிவபெருமான் உக்கிரமாயிருந்த தில்லைக் காளியை நாட்டியப் போரில் வென்று எல்லைத் தெய்வமாக்கியதாகத் தில்லை மான்மியக் கதை கூறுவதிலிருந்தும் காளி வணக்கத்தின் பழமையையும், தந்தை வழிச் சமுதாயத்தில் அதனைச் சிவவழிபாடு தனக்குட்படுத்தியதையும் உணரலாம். உமையோடு காளிக்கும் சிவபெருமான் நாயகன் என்ற ஐதிகம் எழுந்த பின்பும், காளியைத் தனியே வழிபடும்முறை மறையவில்லை. எனினும், கிராம வாழ்வோடு மட்டும் தொடர்புடைய ஊர்த் தேவதையாகவே காளி வழிபடப் பெறுகிறாள் என்பது பெரும்பாலும் உண்மை.

20. பிரமனும் பிறரும்

பிரபஞ்ச தத்துவங்களைக் குறித்த தெய்வங்களில் பிரமன் முதலியோர் வடபுலத்தைப்போலவே தமிழகத்திலும் சிறு தெய்வங்களாக மாறினர். படைப்புக் கடவுளான பிரமன் திருமாலின் உந்தித் தாமரையிலிருந்து தோன்றினான் எனப் பெரும்பாணாற்றுப் படையும் (402–404) சிலப்பதிகாரமும் (14:48)கூறுவதைக் கண்டோம். எனவே அவனைத் திருமாலின் மகன் என்று மணிமேகலை குறிப்பிடும் (13:57–58). மும்மூர்த்திகளின் ஒருவன் என்றும் சிவனின் தேர்ப்பாகன்[1] என்றும், வேதமுதல்வன் என்றும் பிரமனைப் போற்றுவர். எனினும் இன்பத்தோடு துன்பமும் விரவியதாக உலகைப் படைத்த

1. *சிலப்பதிகாரம்: 6. 44.*

'பண்பிலாளன்' என்று அவனைப் பழிப்பார் ஒரு புலவர் (புறநா.194).

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான்[1] (1062)

என்றார் வள்ளுவரும். பிரமனின் மனைவி என்று போற்றப் பெறும் கலைமகளைச் 'சிந்தா விளக்கு'[2] என்று குறிப்பிட்டு, அவளுக்கு மதுரையில் ஓர் ஆலயம் இருந்ததென்று இயம்பும் மணிமேகலை (13:106). அவளை

நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதல்வி[3] (14:18–19)

என்றும் போற்றும் மணிமேகலை.
சூரிய சந்திரர் வழிபாடும் தமிழகம் பயின்றது.

முந்நீர் மீமிசைப் பலர் தொழத் தோன்றி
ஏமுற விளங்கிய சுடர்[4] (நற்றிணை:73)

என்று சங்கச் சான்றோர் கூறுவதால், கடலில் எழுந்த ஞாயிற்றை மக்கள் வழிபட்டனர் என்று உணரலாம். உதய சூரியனை வணங்குவர் என்று அகநானூறும் (263) சிலப்பதிகாரமும் (14:1–4)

---

1. இரந்தும்- (இவ்வுலகில் வாழ்வார்) பிச்சை எடுத்தும். பரந்து கெடுக-மிகக் கெடுவானாக. உலகு இயற்றியான்-உலக முறையை இவ்வாறு அமைத்த முதல்வன் (நான்முகன்).

2. சிந்தையை (அதாவது, மனத்தை அல்லது அறிவை) ஒளிரச் செய்வோள்.

3. நந்தா விளக்கு-அணையா விளக்கு. நாமிசைப் பாவை-நாமகள்.

4. முந்நீர்-கடல். மீமிசை-மேலிடத்தில், ஏமுற மகிழ்வுற.

குறிப்பிடும். இளங்கோ அடிகளின் கடவுள் வாழ்த்தில் ஞாயிறு வணக்கமும் இடம் பெறுகிறது.[1]

ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்
புல்லென் மாலை[2] (அகநா.239)

என்று இளங்கீரனார் இயம்புவர். வனிதையர் வளர் பிறையை வணங்கினர் என்பதை இது உணர்த்தும். குறுந்தொகையும் (178) பிறைதொழுவதைக் கூறும்.[3] சிலப்பதிகாரம் ''திங்களைப் போற்றுதும்!'' என்றே தொடங்குகிறது. புகாரில் நிலாக்கோட்டம் (சந்திரன் கோயில்) இருந்தது (சிலப்.9:13).

பஞ்சபூத வழிபாடும் பண்டைய தமிழகத்தில் இடம் பெற்றது.

நிலம், தீ, நீர், வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்[4] (பொருள்.644)

என்றார் தொல்காப்பியர். பூமிதேவியை 'மாநில மடந்தை' (சிறுபாண்.1) என்றும் 'நிலன் என்னும் நல்லாள்' (குறள் 1040) என்றும் கூறுவர். 'எல்லா உயிர்க்கும் ஏமமாகிய் நீர்''[5] உடைய கமண்டலம் சிவனிடம் உள்ளது என்பர் பெருந்தேவனார் (புறநா.1). அந்நீரை வழங்கும்

---

1. *பின்னாளிலும் சூரிய வழிபாடு நிலை கொண்டது. ஆறு இந்து சமயப் பிரிவுகளில் ஒன்றான சௌரமதம் சூரியனே முழுமுதற் கடவுள் என்று கூறும். சிவன், திருமால், சக்தி என்ற மும்மூர்த்திகளைத் தொழுவோரும் தத்தம் தெய்வம் சூரிய மண்டலத்தில் இருப்பதாகக் தியானிப்பர். ஆதிசங்கரர் நாள்தோறும் வீட்டில் வழிபாடு செய்வதற்கு வகுத்த ஏற்பாட்டில், கணபதி, திருமால், சிவன், உமை என்னும் நால்வருடன் சூரியனும் இடம் பெறுவான்.*

2. *ஒள்ளிழை-ஒளி வீசும் அணிகளை (அணிந்த). புல்எள்-பொலிவில்லாத.*

3. *முழுமதியைத் தொழக் கூடாதாம். புறநானூற்று-அறுபதாம் பாடலும் அதன் பழைய உரையும் பார்க்க.*

4. *வளி-காற்று. விசும்பு-ஆகாயம்*

5. *ஏமம்-பாதுகாப்பு*

மழையை வள்ளுவரும் (11–20) இளங்கோவும் (சிலப்.1:7) போற்றுவர். அக்கினிக் கடவுளை 'எரியங்கி வானவன்'[1] என்று கூறும் சிலப்பதிகாரம் (21:49). வாயுதேவனை ஏவல் கொண்ட வலியோனின் வழித்தோன்றல் என்று கரிகாலனைப் பாராட்டுவர் வெண்ணிக் குயத்தியார் (புறநா.66). விசும்பும் கடவுள் என்று பேசும் பரியாடல் (13).

திருப்பரங்குன்றம் ஆலயத்து ஓவிய மண்டபத்தில் காமன், இரதி ஆகியோரின் சித்திரங்கள் இருந்தன என்று பரிபாடல் கூறும் (19). காமனைத் திருக்குறள் குறிப்பிடும் (1197). அவனை உருவிலாளன் என்பர் இளங்கோ.[2] புகாரில் காமவேளுக்குக் கோயில் இருந்தது. சங்கமுகத்துக்கருகில் உள்ள சோமகுண்டம், சூரியகுண்டம் என்னும் இரண்டு பொய்கைகளில்[3] நீராடிக் காமவேள் கோட்டத்தில் தொழுவார், இப்பிறப்பில் கணவரைப் பிரியாது வாழ்ந்து இன்புற்று, மறுமையில் போக பூமியில் பிறப்பர் என்று தேவந்தி கண்ணகியிடம்மொழிவாள்[4]

---

1. எரி–எரித்தலை உடைய. அங்கி–அக்கினி. வானவன்–தேவன்.

2. 2:44; 5:224; 14:36; 30:25

3. இவற்றை 'இரு காமத்து இணை எரி' என்றார் பட்டினப்பாலையில் (39).

4. தேவந்தி கூறியவாறு அந்தக் குளங்களில் குளித்து காமனைத் தொழுவது தனக்குப் பெருமை அன்று என்று கூறும் முறையில் 'பீடு அன்று' என்பாள் கண்ணகி. கற்புடைப் பெண் கணவனையன்றி வேறு தெய்வத்தைத் தொழாள் என்பதாலேயே கண்ணகி இவ்வாறு மாற்றம் தந்தாள் என்பது உணர்ச்சி முனைப்பில் எழும் வாதமே. கண்ணகியே கடவுளரை வழிபட்டாள் என்று இளங்கோ கூறுவர் (10:9–25). காமனை வழிபடுமாறு கூறிய தேவந்தியும் கடவுளாம் சாத்தனைக் கணவனாகப் பெற்ற கற்புடைப் பெண்ணே. காமனைப் பெண்கள் வழிபடுவதற்கும் தடை இருந்ததில்லை. புகாரிலும் மதுரையிலும் காமன் வழிபாடு விளக்கம் பெற்றதென்பதே சிலப்பதிகாரக் காட்சி.

கண்ணகி ஜைன மதத்தைத் தழுவியவள். கணவனைப் பிரிந்து வாழும் மனைவி காமன் பெயரையும் சொல்லக் கூடாதென்பது ஜைனர் கொள்கை என்பது ஜைன காவியமான சீவக சிந்தாமணியில் (1598) விளக்கம் பெறும். கண்ணகி மாற்றத்துக்கு அதுவே காரணமாகும் (இந்தக் கருத்துக்களின் விரிவை இளங்கோவின் பாத்திரப் படைப்பு என்னும் நூலில் காண்க).

(9:57–62). மதுரையில் காமன் விழா நிகழ்ந்ததையும் **சிலப்பதிகாரம்** செப்பும் (14:111–112). காமவேள் விழாவைக் கலித்தொகையும் குறிப்பிடும் (27).

இளவேனில் விழாவே காமன் விழாவாக மாறியிருக்கலாம். தென்றலைத் தேராகவும், கரும்பை வில்லாகவும், மலர்ச்சோலையைப் பாசறையாகவும், மலர்களைக் கணைகளாகவும் கொண்டவன் காமன் என்று கூறப்பெறுவதிலிருந்தே, அவன் வசந்தகாலத் தேவனாகவே தோன்றியதைப் புரியலாம். எனவே இளவேனில் இன்பத்துக்கு உரிய தெய்வமாகத் தோன்றிய வேனிலான், ஆரியரது மன்மதனுடன் இரண்டறக் கலந்து காமவேளாகி, இந்திய மகளிரின் வழிபடு தெய்வமாக வளர்ந்தான் என்போம்.

காமனை உருவிலாளன் என்று இளங்கோ குறிப்பிடுவதிலிருந்தே, அவன் அனங்கன் ஆன கதையைப் பண்டைய தமிழர் அறிந்திருந்த விவரம் விளங்கும். மேலும், அக்கதையின் அடிப்படையில் எழுந்த எரித்த கட்சி–எரியாத கட்சிச் சொற்போர் இன்றும் தமிழ்நாட்டுக் காமன் பண்டிகையின் முக்கிய நிகழ்ச்சியாகும்.

21. நடுகல் வணக்கம்

கால்நடைகளைக் கவர்ந்து சென்றோரை எதிர்த்து வியத்தகு போர் புரிந்து மாய்ந்த ஆயர் வீரனைப் போற்றுவதாக நடுகல் வணக்கம் தோன்றியது.[1] ஏனைய போர்களில் அற்புதம் நிகழ்த்தி ஆருயிரை அர்ப்பணித்த வீரரையும் பரவுவதாக நடுகல் வழிபாடு சங்ககாலத்தில் ஏற்றம் பெற்றது. அதியமான் அஞ்சி நடுகல்லானதைக் கூறுவர் ஔவையார் (புறநா.232). கரந்தைப்பூச்சூடிய (முல்லைநில) வீரர் என்னாது, நடுகல்லான வீரரைப் பொதுவில் குறிப்பிடும் பாடல்கள் புறநானூற்றில் உள்ளன (304,314,329). திருக்குறளும் அவ்வாறே பொதுவில் குறிப்பிடும் (771).

✱ கரந்தைப் பூச்சூடிய ஆயர் வீரர் நடுகல்லானதைக் கூறும் பாட்டுக்கள்; புறநா. 260,261,263–65. அகநா. 53,67,131, ஐங்குறு. 352.

கல்லில் இறந்த வீரனின் உருவும் பெயரும் பெருமையும் எழுதி அதனை நட்டுத் தெய்வமாகக் கொண்டு, நன்னீராட்டியும் நறுமலரும் மயிலிறகும் சூட்டியும் பலி ஊட்டியும் நெய்விளக்கு ஏற்றியும் வழிபடுவர் என்று சங்கப் பாக்களிலிருந்து அறிகிறோம். வடக்கிருத்து உயிர் நீத்தோருக்கும் கல் நட்டனர் என்பதைக் கோப்பெருஞ் சோழனின் நடுகல் பற்றிய பாடல்கள் (புறநா.221,223) உணர்த்தும். கற்பிற் சிறந்த மகளிர்க்கும் கல் நட்டனர் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல் நட்டதைப் பேசும் சிலப்பதிகார வஞ்சிக் காண்டம்.

கல்நட்டு வழிபடுவதைப் பற்றிய இலக்கியத்துக்குக் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்னும் ஆறு துறைகள் அமையும் என்பர் தொல்காப்பியர்[1] (பொருள்.60). கல்லிருக்கும் இடம் கண்டு உரிய கல்லைத் தேர்ந்தெடுப்பதே காட்சி என்பர்.[2] நன்னாளில் தெய்வமான தியாகியின் உருவைக் கல்லில் வடிக்கத் தொடங்குவதே கால்கோள். நடுகல்லை நீராட்டித் தூய்மை செய்தல் நீர்ப்படை ஆகும். அக்கல்லை குறித்த இடத்தில் நடுதல் நடுகல் என்னும் துறை. அக்கல்லைத் தெய்வமாகக் கொண்டு, அதில் தியாகியின் பெயரும் புகழும் பொறித்துப் பெருஞ் சிறப்பாக உணவு படைத்தல் பெரும்படை எனப்படும்.[3] அக்கல்லுக்குப் பலியிட்டுப் பரவுதல் வாழ்த்து.[4]

---

1. பெரும்படை என்னும் பெயரை நீக்கி ஏனைய ஐந்து துறைப் பெயர்களையும் வஞ்சிக்காண்டத்தின் ஐந்து காதைகளுக்குத் தலைப்பாகக் கொள்வர் இளங்கோ.

2. கல்லெடுக்க உள்ளத்தால் உறுதி கொள்வதே காட்சி என்ற பொருளில் காட்சிக் காதை என்னும் தலைப்பை ஆள்கிறார் இளங்கோ. கண்ணகி விண்ணகம் சென்ற காட்சியை நேரில் கண்ட குன்றக் குறவர் கூற மதுரை நிகழ்ச்சிகளைச் சாத்தனார் மொழிய, இமயம் சென்று பத்தினித் தெய்வத்துக்குக் கல்லெடுத்து வரச்செங்குட்டுவன் உறுதி கொள்கிறான் என்பதைக் காட்சிக் காதை கூறும்.

3. பெரும்படை செய்யுமாறு செங்குட்டுவன் ஏவினான் என்று நடுகற்காதையின் முடிவில் கூறுவதுடன் அமைவர் இளங்கோ.

4. வாழ்த்துக்குப்பின் பத்தினித் தெய்வம் வரம் தருவதைப் பாடும் காதையும் (வரம் தரு காதை) இளங்கோ அமைப்பார்.

22. தமிழை வாழ்வித்த ஜைனம்

சங்க காலத்துக்கு முன்பே ஜைனம் தமிழர் வாழ்வில் இடம் பெற்றது. சந்திரகுப்த மௌரியரின் காலத்தில் இலங்கையை ஆண்ட பாண்டுகாபயன் நிகண்டரை[1] ஆதரித்தான் என்று மகாவமிசம் கூறும்; அந்நாளிலேயே ஜைனத் துறவிகள் தமிழகத்திலும் கால் கொண்டனராகலாம் என்பர். பத்திரபாகு முனிவர் தம் மாணாக்கருடன் தென்னகம் வந்து சிரவண பெள் குளத்தில் தங்கியபோது[2] விசாக முனிவர் என்பவரைச் சோழ பாண்டிய நாடுகளுக்கு அனுப்பி ஜைனக் கொள்கையைப் பரப்பச் செய்தாரென்று ஜைன மரபுரை கூறும். எனவே, கி.மு.மூன்றாம் நூற்றாண்டிலாயினும் ஜைனர் தமிழகத்தில் பணியாற்றத் தொடங்கினராகலாம். கி.மு.இரண்டாம் நூற்றாண்டுக்குரிய எழுத்தில் தமிழ்ச் செய்தி பொறித்த பாண்டிய நாட்டுக் குகைகளில் சிலவேனும் ஜைனத் துறவிகளுக்கு உரியதாகலாமென்பர். மாங்குளம் கல் வெட்டுக்கள்[3] (கி.மு.2 ஆம் நூ.) நந்தன் என்னும் கணிக்குப்[4] பள்ளி வழங்கியதைக் கூறும். ஆசிரியர் என்றும் குறிப்பிடப்பெறும் நந்தன் ஜைனத் துறவியாகலாம் என்பர் ஐராவதம் மகாதேவன்.

சங்க காலத்தில் மூவேந்தர் ஆதரவில் வைதிக நெறியே மேன்மை எய்தியதெனினும், ஜைனரும் பணியாற்றினர் என்பதற்கு நேரான, திட்டமான சான்றுகள் உள. முதலாவது; மதுரைக்காஞ்சி தரும் செய்தி. மலைகள் பலவும் திரண்டு பொலிவன போல் காட்சியளித்த ஜைனர் கோயிலையும்' அங்குக் கடுந்தவம் புரிந்த ஜைன ஞானிகளையும், பூவும் புகையும் ஏந்தி வந்து வழிபாடு செய்த சாவகர்களையும்[5] வர்ணிக்கிறது

---

1. நிகண்டர்-நீர்க்கந்தர் (எவ்வகையான பற்றும் அற்றவர்) என்ற வடமொழிச் சொல்லின் பிராகிருத வடிவம். ஜைனருக்கு அதுவும் ஒரு பெயர்.

2. சந்திரகுப்த மௌரியன் அரியணை துறந்து பத்திர பாகுவுடன் வந்தான் என்றும் மரபுரை கூறும். சிரவண பெள்குளம் (வெள்ளைக்குளம்) மைசூர் நாட்டில் உள்ளது.

3. மாங்குளம் மதுரைக்கு அருகில் உள்ளது.

4. கணி-சோதிடம் வல்லோன்.

5. சாவகர் - சைனரில் இல்லற நெறியில் நிற்பார்.

மதுரைக்காஞ்சி (475–88). இரண்டாவது, புகளூர்க் கல்வெட்டு[1] ஆகும். சேரன் ஒருவன் செங்காயபன் என்னும் சமணத்துறவிக்குக் குன்றில் இருக்கை அறுத்துக் கொடுத்த செய்தியை அக்கல்வெட்டு கூறுகிறது. மூன்றாவது, சங்கப் புலவர் இருவரது பெயரே அவர் ஜைனர் என்பதைக் காட்டுவதாகும். ஒருவர் பெயர் உலோச்சனார். ஜைனர் துறவியாகும் போது தம் மயிரைத் தம் கையால் பறிக்கும் கடிய நோன்பை உலோச்சு என்பர். எனவே, முப்பத்திஐந்து பாடல்களை ஆக்கியோராகச் சங்க நூல்களில் இடம் பெறும் உலோச்சனார் ஜைனரே என்று கொள்வதற்குத் தடையில்லை. ஜைனர் பிறவித் துன்பத்தை வற்புறுத்துவது போல் உலோச்சனாரும் அக ஒழுக்கத்தின் துன்ப நிலையாம் நெய்தல் திணையையே மிகுதியாகப் பாடுகிறார். நெய்தலே பாடும் கலைக் கோட்டுத் தண்டனார், நிகண்டன் என்ற அடைமொழியோடு குறிப்பிட பெறுவதால் அவரும் ஜைனரே என்று அனுமானிப்பர்.

தொல்காப்பியரின் இலக்கண நூலில் இடம் பெறும் அளவுக்கு ஜைனக் கொள்கைகள் தமிழகத்தில் பரவியிருந்தன. எடுத்துக்காட்டாக அவர் உயிர்களை வகைப்படுத்துவதைக் கூறலாம். எந்த உயிரையும் கொல்லலாகாது என்ற அறத்தைத் தலைமையாகப் போற்றிய ஜைனர் எவையெல்லாம் உயிர்கள் என்று கண்ணும் கருத்துமாக ஆராய்ந்தது இயல்பே. அவர்கள் உயிர்களை ஐவகையாகப் பாகுபாடு செய்தனர். அவையாவன: (1) உற்றறியும் (தொட்டால் உணரும்) திறன் மட்டும் உடைய புல், மரம் முதலிய ஓரறிவுயிர்; (2) உடம்பால் உற்றுணர்வதோடு நாவால் சுவையும் அறியும் நத்தை முதலிய ஈரறிவுயிர்; (3) அவ்விரண்டோடு மூக்கால் மணமும் உணரும் எறும்பு முதலிய

---

1. புகளூர்க் கல்வெட்டை முதலில் வெளியிட்டவர் ஐராவதம் மகாதேவன் ஆவர். அது கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குரியது என்ற அவர் கணிப்பு யாவர்க்கும் ஏற்புடைத்தே. கோ ஆதன் செல் இரும்பொறையின் மகனான பெருங்கடுங்கோன் என்பவனின் மகன் இளங்கடுங்கோ இளவரசுப் பட்டம் எய்தியபோது, இப்பள்ளியை அமைத்துக் கொடுத்தான் என்று புகளூர்க் கல்வெட்டு கூறும். இவர்கள் பதிற்றுப் பத்தில் 7,8,9 பத்துக்களில் பாடப்பெறும் சேரர்களே என்பதைக் கேரளப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பன்னீர்செல்வம் நிறுவினார்.

மூவறிவுயிர்; (4) அம் மூன்று அறிவோடு கண்ணால் உருவம் அறியும் நண்டு முதலிய நாலறிவுயிர்; (5) அந்த நான்கு அறிவோடு செவியால் ஒலியும் உணரும் விலங்கு, மக்கள் முதலிய ஐயறிவுயிர் ஐயறிவுயிரிகளை ஜைனர் இருவகைப் படுத்தினர்:– விலங்குகள் முதலிய மனமில்லாதன; மக்கள் முதலிய மனமுடையர். இவ்வாறு ஐயறிவுயிர்களை இருவகைப் படுத்துவதற்குப் பதிலாக, மனமும் உடைய ஐயறிவினரை ஆறறிவினர் என்று கொள்வதொன்றே தொல்காப்பியர் செய்த மாற்றம். அந்தத் திருத்தமும் முன்னோர் கண்ட கொள்கையைத் தெளிவாக உணர்த்துவதேயாம். எனவே, உயிர்களின் பாகுபாட்டை ''நேரிதின் உணர்தோர் நெறிப்படுத்தினரே'' என்று கூறுவர் தொல்காப்பியர்.

மாத்திரைக்குக் கால அளவாகக் கண்ணிமைப் பொழுதைக் கூறுவது பண்டைய பாரதத்தின் பொதுநெறி. அத்துடன் கைந்நொடியையும் கூறுவது ஜைனர் மரபாம். கண்ணிமைத்தல், கைந்நொடி என்னும் இரண்டையும் மாத்திரைக்கு அளவாக ''நுண்ணிதின் உணர்ந்தோர்'' கண்டனர் என்பர் தொல்காப்பியர் (எழுத்து 7). அதே போல், பேரெண்களுக்கு இலக்கணம் கூறும்போது, தாமரை, வெள்ளம் என்னும் அனைவரும் ஆண்ட எண்களோடு, ஆம்பல் என்னும் ஜைனர் ஆண்ட எண்ணையும் அவர் கூறுவர் (எழுத்து.393). ஜைனர் ஆண்ட செய்யுள் வகையான பண்ணத்தி என்பதற்குத் தொல்காப்பியர் இலக்கணம் தருவதால் (பொருள்.492), ஜைனர் செல்வாக்கால் தமிழிலும் பண்ணத்தி வகைச் செய்யுள் அமைந்ததெனலாம்.

இவையும் இவையனைய வேறு சில சான்றுகளும்[1] தொல் காப்பியர் ஜைனர் என்று உணர்த்துவதாகக் கூறுவர் பேராசிரியர்

---

1. 'படிமையோன்' என்று தொல்காப்பியரைப் புகழ்வர், அவரது பள்ளித் தோழரான பனம்பாரனார் (பாயிரம்). சாவகர் பயிலும் உயர்ந்த தவ ஒழுக்கங்களைப் படிமை (படிமா என்பது பிராகிருதம்) என்னும் பெயரால் ஜைனசமயம் குறிப்பிடுவதை வையாபுரிப்பிள்ளை எடுத்துக் காட்டுவார். (தொல்காப்பியர் திரு மேனி (விக்கிரகம்) என்ற பொருளில் படிமை (பிரதிமை என்பது வடமொழி) என்னும் சொல்லை ஆள்வர் (பொருள் 30); ஆனால் அப்பொருள் பனம்பாரனார் கூற்றுக்குப் பொருந்தாது. ஆனால் வேத வேள்வி

வையாபுரிப்பிள்ளை.[1] அக் கொள்கையை ஏற்கத் தயங்குவாரும் ஜைனக் கொள்கைகள் வழங்கியதைத் தொல்காப்பியம் உணர்த்துகிறது என்பதை மறுக்க முடியாது.

திருவள்ளுவர் ஜைனர் என்று பழைய நாளிலிருந்தே பலர் வற்புறுத்தி வருகின்றனர். தேவர் என அவருக்கு வழங்கிய பெயர் முன்னாளில் ஜைனப் பெயராகவே இருந்தது என்பர். 'எமது ஒத்து' என்று ஜைனரான நீலகேசி உரையாசிரியர் குறளைப் போற்றுவர். ''மலர்மிசை ஏகினான்'' (3), ''அறவாழி அந்தணன்'' (8), ''எண் குணத்தான்'' (9) என்னும் தொடர்கள் முன்னாளில் அருக தேவனையே குறித்தன என்றும், அவற்றைத் திருக்குறளின் கடவுள் வாழ்த்து ஆள்வதால், வள்ளுவர் ஜைனர் என்று கருதலாமென்றும் கூறுவர். மேலும், பரம்பொருளைக் கூறும் பிறமதத்தார் போலல்லாது, மனிதரே அவா அறுத்து வினைக் கட்டிலிருந்து விடுபட்டுக் கடவுள் நிலை எய்துவர் என்று ஜைனர் பௌத்தர் கூறுவதற்கு இணங்க, ''பொறிவாயில் ஐந்து அவித்தான்' '(6) என்று இறைவனைக் குறிப்பிடுவார் வள்ளுவர். தாம் கொல்லாது வந்த புலாலைப் பௌத்தர் உண்பதைக் குறள் (256) கண்டிப்பதால், ஐம்புலன் அவித்தவன் என்று வள்ளுவர் அருகதேவனையே கூறுவதாகக் கொள்வது சரியே. ஆதிபகவன் (1) என்று குறள் கூறுவதும் முதல் தீர்த்தங்கரரான ரிஷப தேவரையே என்பாரும் உளர். அளறு (919), இருள் (121), அண்ணாத்தல் செய்யாத அளறு (255) முதலிய நரகங்களைச் சமணர் கூறுவது போலத் திருவள்ளுவரும் கூறுவர். மேலும், பரதசக்கரவர்த்தியே சமுதாயத்தை அமைத்தார் என்ற குறிப்புத் தோன்ற 'உலகு இயற்றினான்' (1062) என்று

செய்த சேரனின் 'படிமை'யைப் பதிற்றுப் பத்து (74) குறிப்பிடுவதால், விரதம் என்னும் பொருளில் எல்லா சமயத்தாரும் ஆண்ட சொல்லே படிமை என்று ஊகிப்பர் சிலர். பாணினிக்குப் பின் ஐந்திரம் என்று பெயர் பெற்ற பழைய இலக்கண நெறியை (இந்திரன் அருளியது ஐந்திரம்) புறச் சமயத்தார் பெரிதும் போற்றினர் என்று வடநூல் வரலாறு கூறும்; தொல்காப்பியர் ஐந்திரத்தில் எய்திய புலமையைத் தனிப்படப் போற்றும் பனம்பாரனார் பாயிரம். அதுவும் அவர் சமணத் தொடர்பைச் சுட்டுவதாகலாம்.

1. *பார்க்க: தமிழ்ச் சுடர்மணிகள்: ''தொல்காப்பியர் 11 சமயம்.''*

அவர் இயம்புவதும் ஜைனக் கொள்கையைச் சுட்டுவதாகலாம். வள்ளுவர் ஜைனர் என்று கூறத் தயங்குவோரும் ஜைனத்தாலும் வளமுற்ற பண்பாட்டின் விளக்கமாகத் திருக்குறள் இலங்குவதை மறுக்க முடியாது.

சிலப்பதிகாரம் அருளிய இளங்கோ அடிகள் ஜைனர் என்பர் பலர், சைவர் என்பர் சிலர். அடிகள் அருகன் கோயிலில் துறவியாக வாழ்ந்தனரென்ற மரபுரையை அடியார்க்கு நல்லார் குறிப்பிடுவர். சிலப்பதிகாரம் சேரன் செங்குட்டுவனைச் சைவனாகச் சித்திரிக்கிறது. ஆனால் கண்ணகியும் கோவலனும் ஜைனர்களே.

உருவும் குலமும் உயர் பேர் ஒழுக்கமும்
பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்
உடையீர்! (10:46–48)

என்று அவர்களைக் கவுந்தி அடிகள் விளிப்பதிலிருந்தே இது விளங்கும். மாதரியும் கோவலனைச் சாவக நோன்பி என்று குறிப்பிடுவாள் (16.18). கவுந்தியடிகள் ஜைனத் துறவி என்பதும், சாரணர் நல்லுரை ஜைனக் கொள்கையின் விளக்கமாக அமைவதும் குறிப்பிடத்தக்கவை. எனவே, தமிழகத்தில் ஜைனம் மேவிய சிறப்பையும் சிலப்பதிகாரம் வெளியிடுகிறது என்று கூறலாம்.

ஐந்தாம் நூற்றாண்டில் மதுரையில் வச்சிரநந்தி என்பார் திராவிட சங்கம் என்னும் ஜைனத் துறவிகளின் சங்கத்தை அமைத்தார். அச்சங்கம் சமயப் பணியோடு தமிழ்த் தொண்டும் புரிந்தது என்பர். பின்னாளிலும் ஜைனர் ஆற்றிய தமிழ்ப் பணி பெரிது. நாலடியார், பழமொழி முதலிய நீதி நூல்களும், திவாகரம், பிங்கலத்தை என்னும் நிகண்டுகளும், பெருங்கதை, சீவகசிந்தாமணி, சூளாமணி, வளையாபதி, நீலகேசி முதலிய காப்பியங்களும் கலிங்கத்துப் பரணியும், யாப்பருங்கலம், யாப்பருங்கல காரிகை, நேமிநாதம், நன்னூல் முதலிய இலக்கணங்களும் ஜைனர் வழங்கிய கொடைகளே. ஆகவே, ஜைனத்தால் தமிழும் தமிழர் வாழ்வும் அடைந்த மேன்மையைக் குறைத்து மதிப்பிட முடியாது.

23. பௌத்தத்தால் வாய்த்த பேறு

பௌத்தம் தொல்காலத்திலேயே தமிழகத்தில் நிலை கொண்டது. அசோகன் அனுப்பிய துறவிகள் தமிழரிடையே பௌத்தத்தைப் பரப்பினர் என்று அவன் கல்வெட்டிலிருந்து அறிகிறோம். அசோகன் மகனும் இலங்கையில் பௌத்தத்தைப் பரப்பியவனுமான மகேந்திரன் (இவனை ஈழத்தில் மகிந்தன் என்பர்) கட்டியதாக வழங்கிய பௌத்தப் பள்ளியை மதுரையில் கண்டதாகச் சீனயாத்திரிகன் ஹியூன்சாங் (கி.பி.7 ஆம் நூ.) கூறுகிறான். புறாவுக்காகத் துலை புகுந்த சிபியைத் தம் முன்னோனாகச் சங்ககாலச் சோழர் பாராட்டியதும், அதே சிபியைப் புத்தரின் முற்பிறப்பாகக் கருதும் தென்னாட்டு ஜாதகக் கதை கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நாகார்ஜுனகொண்டா, அமராவதி என்னும் ஆந்திர நகரங்களில் அமைந்த சிற்பங்களில் புலனாவதும் குறிப்பிடத்தக்கன.[1] அதுவும் பௌத்தம் தென்னாட்டு மக்களோடு இரண்டறக் கலந்ததை உணர்த்தும். கி.மு.150 அளவில் பாரூத்தில் எழுந்த பௌத்தச் சிற்பங்களில் புகார் நகர்ப் பிக்குணி சோமாவின் கொடையாக ஒரு கற்றூண் (அதன் கல்வெட்டில்) குறிப்பிடப் பெறுகிறது என்பதும் இங்கு நினைவுகூரத் தக்கது.[2]

தமிழகத்திலுள்ள தொன்மையான கல்வெட்டுக்கள் பௌத்தச் சார்பானவை. அவை பாண்டிய நாட்டு மலைக்குகைகளில் காணப்படுகின்றன. மாஸ்க்கி, பிரமகிரி முதலிய இடங்களில் அசோகன் பொறித்த பிராகிருத மொழிக் கல்வெட்டுக்களின் தென்னாட்டுப் பிராமி எழுத்தைத் தமிழின் ஒலிக்கணத்துக்கு ஏற்றவாறு திருத்தம் செய்து,

---

1. பார்க்க: இந்தியப் பண்பாடும் தமிழரும் IV,10 (ஆ)

2. இன்றைய இந்திய நெடுங்கணக்கு முறைகளுக்குத் தாயான பிராமி சிந்துவெளி எழுத்திலிருந்து உருவானதா, மேற்கு ஆசியாவிலிருந்து வந்த எழுத்து வர்க்கத்திலிருந்து வளர்ந்ததா என்பது இன்னமும் விளங்கவில்லை. அசோகன் ஆண்ட பிராமி எழுத்தொலி இயல் அறிவுக்கு உகந்தது. பிரதேச வேற்றுமைகளும் உடையது. எனவே, இந்திய ஒலிகளுக்கு ஏற்றவாறு, எண்ணித்துணிந்து வகுக்கப் பெற்றது எனலாம். அசோகன் தக்கணக் கல்வெட்டுக்களில் ஆண்ட பிராமி சில தனி இயல்புகளை உடையது. அதனைத் தென்னாட்டுப் பிராமி என்பர்.

பாண்டிய நாட்டுப் பாறைச் சாசனங்களில் ஆண்டுள்ளனர். இந்தத் தமிழ்–பிராமியைத்தான் பண்டைய சமண, பௌத்த நூல்கள் தாமிழி என்றும் திராவிடி என்றும் குறித்தனர். பிராகிருதத்துக்கும் தமிழுக்கும் பொதுவான ஒலிகளுக்குரிய வரிவடிவங்களில் பிராமிக்கும் தாமிழிக்கும் வேற்றுமை இல்லை. தமிழில் இல்லாத பிராகிருத ஒலிகளுக்குரிய பிராமி எழுத்துக்களில் பலவும் தாமிழியில் இல்லை. பிராகிருதத்தில் இல்லாதனவும், தமிழுக்கு உரியனவுமான ழ, ள, ற, ன என்னும் ஒலிகளுக்குரிய எழுத்துக்கள் தாமிழியில் உள்ளன. வேறு சில சிறு வேறுபாடுகளும் உள. இவ்வாறு உருவான தாமிழியை[1] முதலில் பௌத்தச் சார்பான பாறைச் சாசனங்களிலேயே காண்கிறோம், எனவே அதைப் பௌத்தத் துறவிகள் உருவாக்கினர் என்று துணியலாம். பௌத்தரோடு ஜைனரும் தாமிழியைப் பரப்புவதில் பங்கு கொண்டனர் என்பர். காலப்போக்கில் காணப்பெறும் இயல்பான மாற்றத்தோடு, தாமிழியைச் சங்ககாலத் தமிழர் ஆண்டனர் என்பது, அந்நாளைய கல்வெட்டுக்களிலிருந்தும், அரிக்கன் மேட்டிலும், உரையூரிலும் கிடைத்த புதை பொருள்களிலிருந்தும் விளங்குகிறது. சங்ககால மட்கல உடைசல்களில்கூடத் தாமிழி எழுத்துத் தென்படுவதால், நகரங்களிலும் வாணிக மையங்களிலுமாகிலும் சாமானிய மக்கள் தாமிழியை அறிந்து அன்றாடத் தேவைகளுக்குப் பயன்படுத்தினர் என்று ஊகிப்பர்.

சங்ககாலத்திலும் ஜைனத்தைப் போல் பௌத்தமும் வழங்கியது. பேரிளம் பெண்கள் தம் கணவரோடும் குழந்தைகளோடும் பூவும்

---

1. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் நடத்திய கருத்தரங்குகளில் (கோலாலம்பூர்,1966; சென்னை 1968) ஐராவதம் மகாதேவன் வெளியிட்ட ஆராய்ச்சி முடிவுகளையே இங்குச் சுருக்கிக் கூறுகிறோம். தமிழ் பிராமிக் கல்வெட்டின் மொழி பிராகிருதம் என்றும் தமிழ் – பிராகிருதக் கலப்பு என்றும் மயங்கினார் உளர். கல் வெட்டின் மொழி தமிழே என்று நிறுவி, ழ, ள,ற, ன என்னும் தமிழ் ஒலிகளுக்குரிய எழுத்துக்களை இனம் கண்டு செயற்கரிய சாதித்த பெருமகன் கே.வி.சுப்பிரமணிய ஐயர் ஆவர். ஐயர் படித்ததில் இருந்த குறைகளைக் களைந்து, கல்வெட்டுச் செய்திகளைத் தெளிவாகப் புலப்படுத்தியவர் மகாதேவன் அவர்களே. தமிழ்–பிராமி என்னும் தாமிழி காலப் போக்கில் அடைந்த மாறுதல்களையும் ஏழாம் நூற்றாண்டில் வட்டெழுத்தாக வளர்ந்ததையும் அவர் மெய்ப்பித்துள்ளார்.

புகையும் ஏந்திச் சென்று கடவுட் பள்ளியில் தொழுது துதி செய்தனர் என்றும் மதுரைக் காஞ்சி கூறுவது (461–67) புத்தர் வழிபாடு பற்றியதே என்பர் நச்சினார்க்கினியர். அரிக்கமேட்டு முத்திரையொன்றில் பௌத்தமதத் திருவாக்கியம் காணப்பெறுவதால், அங்குப் பௌத்தர் இருந்தனர் என்று உணரலாம். புத்தர் பெருமானின் திருநாமங்களில் ஒன்றான சாத்தன்[1] என்ற பெயரை உடைய பத்தொன்பது பாவாணர்கள் சங்கப் புலவர் வரிசையில் இடம் பெறுகின்றனர். பௌத்தராகவோ பௌத்தர் வழிமுறையினராகவோ[2] அவர்களைக் கருதலாம். போதியார் என்று ஞானசம்பந்தர் பௌத்தரைக் குறிப்பதால் இளம்போதியார் என்னும் சங்கப் புலவர் பௌத்தரே ஆவர். இளம்போதியார் என்ற பெயரே மூத்தபோதியார் ஒருவர் புலவராக விளங்கினர் என்று ஊகிப்பதற்கு இடம் தரும்.

வஞ்சியிலும் காஞ்சியிலும் பௌத்த முனிவர்கள் தவச்சாலைகளில் வாழ்ந்தனர் என்று மணிமேகலை கூறும். பூம்புகாரில் ஏழு விகாரைகள் இருந்தன என்பது சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வழங்கும் செய்தி. பூம்புகாரின் பகுதியாக விளங்கிய இந்நாளைய மேலையூரில் பூமிக்கடியில் புதையுண்டிருந்த புத்த விகாரைப் பகுதியைத் தொல்பொருளாராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்பகுதியில் ஏழு அறைகள் உள்ளன; ஒவ்வொன்றும் எட்டடிச் சதுரமாம். அவற்றில் துறவிகள் வாழ்ந்தனர் என்று ஊகிப்பர். அறைகளுக்கு அருகில் அணி வேலைப்பாடுடன் கூடிய அமைப்பும் புலனாகிறது. அது மண்டபத்தின் பகுதி என்று கருதுவர். விகாரைச் சுவர்கள் சுதை ஓவியங்களால் ஒப்பனை செய்யப்பட்டிருந்ததென்பதும் விளங்குகிறது. ஓர் அறையில் தியானநிலைப் புத்தரின் செப்புப் படிமமும் கிடைத்தது. அமராவதி,

---

1. சிவபெருமானுக்கும் மோகினியாக வந்த திருமாலுக்கும் பிறந்தவன் சாத்தன் என்பது பின்னாளைய புராணம். சாத்தனார், ஐயனார், தருமராசர், போதிராசர் என்றெல்லாம் தமிழர் வழிபடுவது பழைய புத்தரையே!

2. பாட்டன் பெயரைப் பேரனுக்கு வைக்கும் மரபு சங்ககாலத்திலும் நிலைகொண்டிருந்ததால், பௌத்தராயில்லாதவரும். பௌத்தராயிருந்த முன்னோரின் பெயரை வைத்துக்கொள்வது இயல்பே.

நாகார்ஜுன கொண்டா முதலிய இடங்களில் காணப்படும் ஒருவகைச் சுண்ணாம்புக்கல்லில் செய்த புத்த பீடிகையும் வேறு சில திருச் சின்னங்களும் கண்டெடுத்திருக்கிறார்கள்.

24. சான்றோர் நெறி

இவ்வாறு பல்வேறு சமயநெறிகளுக்குச் சமவாய்ப்புத் தரும் பொது நோக்கால் பண்பட்டது தமிழகம். சிவன், முருகன், பலராமன், மாயோன் என்னும் நால்வரையும் நக்கீரர் ஒருசேரக் கூறுவதும் (புறநா.56), பௌத்தர், அந்தணர், அமணர் முதலியோரை மதுரைக்காஞ்சி ஒருபடித்தாகப் போற்றுவதும் (461–88), அனைத்துத் தெய்வ வழிபாடாக இந்திர விழா ஏற்றம் பெற்றதும் தொல்லோரின் பொதுநோக்குக்குச் சான்றுகளாம். இந்தப் பண்பாட்டின் விளக்கமாக அமைவது சிலப்பதிகாரம். ஜைனரான கோவலனும் கண்ணகியும் புகாரை நீங்கும்போது அருகன் கோயிலில் தொழுவதுடன் திருமால் ஆலயத்தை வலம் வருகின்றனர்; புத்த விகாரைகளையும் முறையே தரிசிக்கின்றனர். அவர்களுக்கு வழிநடைத் துணைவியாகும் கவுந்தி அடிகள் வாய்ப்புக் கிட்டும்போதெல்லாம் சமணக் கொள்கையை ஓதுவது உண்மையே. அம்மூவர் முன் திருவரங்கச் சோலையில் சாரணர் தோன்றுவதாக இளங்கோ அமைத்துக் கொள்வதும் அருகன் பெருமையைப் பேசும் வாய்ப்பினைப் பெறவே என்பதும் மெய்தான். ஆனால் அதே போல கொற்றவை, திருமால், முருகன் ஆகியோரைப் பரவும் நெஞ்சை அள்ளும் வரிப் பாடல்களைப் பாடும் வாய்ப்பும் தேடி அடைகிறார் அவர். மேலும், நான்மறை போற்றும் சைவனாகவே சேரன் செங்குட்டுவன் காட்சி தருகிறான் சிலப்பதிகாரத்தில். துறவிகளாக ஓடிப்போன கனகவிசயரைச் சிறை செய்தது சிறியர் செயல் என்று சோழ பாண்டியர் சாடியது கேட்டு சீற்றங்கொண்ட செங்குட்டுவனை அமைதிப்படுத்துவதும் மாடலமறையோனே. சாரணரோ ஜைன முனிவரோ அல்லர். மாடலன் மெய்யுரையால் மனந்திருந்திய மன்னன் வேதவேள்வி செய்வதாகவே கதை வளர்கிறது. எல்லாச்

சமயங்களுக்கும் ஏற்றம் தந்து அனைத்துக்கும் பொதுவாகப் பத்தினி வழிபாட்டை சிறப்பிப்பது சிலம்பின் சாதனையாம். இமயத்தில் கல் எடுத்துக் கங்கையில் நீராட்டி வஞ்சியில் கோயில் எடுக்கிறான் சேரன். முன்பே ஜைனர் கவுந்தியால் கற்புத் தெய்வம் என்று போற்றப்பெற்ற கண்ணகிக்குச் சைவன் எடுக்கும் கோயிலில், கடவுளாம் சாத்தனைக் கணவனாகப் பெற்ற தேவந்தி பூசைப் பொறுப்பு ஏற்கிறாள். கண்ணனைத் தொழுது வாழும் ஆயர்குல ஐயை கண்ணகி கோயிலில் வழிபடுகிறாள். இந்திய இலங்கை அரசர் யாவரும் சேர்ந்து நின்று கண்ணகியைப் பரவி வரம் பெறுகின்றனர். இவ்வாறு பன்மையில் ஒருமைகாணும் பண்பாட்டுச் சிறப்பு இளங்கோ காவியத்தில் குன்றிலிட்ட விளக்காக ஒளிர்கிறது.

பொதுநோக்கின் பெயரால் கருத்துரிமையை மறுக்கவோ, சாரமில்லாத பன்னெறித் திரட்டை உருவாக்கவோ முன்னோர் முயன்றாரல்லர்; மாறாக, நிறைவான கருத்துரிமையை யாவர்க்கும் உறுதி செய்தனர். ஆன்றோர் மரபை அறிந்த ஞானிகள் கொடிகட்டி வாதம் செய்வர் என்று கூறும் பட்டினப்பாலை:

> பல்கேள்வித் துறை போகிய
> தொல்லாணை நல்லாசிரியர்
> உறழ்குறித்து எடுத்த உருகெழு கொடி[1] (169–171)

வேதநெறிக்கு விரோதமான நூல்களைப் போற்றுவோர் (ஜைனர், பௌத்தர்) பெருகினாராக, மெய்போலத் தோன்றும் அவர்தம் கொள்கையில் பொய்ம்மையை உணர்ந்து, அவர்களுக்கு மெய்யறிவு கொளுத்திய மேதைகளின் வழித்தோன்றல் என்று பூஞ்சாற்றூர்ப் பார்ப்பானை புகழ்வர் ஆவூர் மூலங்கிழார் (புறநா.166). துடிப்பான அறிவு விளக்கச் சொற்போர் நடந்ததையே இதுவும் உணர்த்தும் அரசன் கொலு வீற்றிருக்கும் அவையிலேயே இத்தகைய சொற்போர் நடந்ததென்று ஊகிக்கலாம்; அத்தாணி மண்டபம் என்று பொருள்படும்

---

1. *உறழ்குறித்து–வாதம் செய்யக் கருதி. எடுத்த கட்டிய. உருகெழு–(மாற்றாருக்கு) அச்சம் விளைவிக்கும்.*

பட்டி மண்டபம்[1] என்னும் சொல்லே மெய்யறிவு தரும் சொற்போர் நிலையம் என்ற பொருளில் வருவது கொண்டு இவ்வாறு ஊகிக்கிறோம். விழாக்காலத்தில் இத்தகு சொற்போர்கள் சிறப்பிடம் பெற்றன; இந்திர விழா பற்றி முரசறைந்து அறிவிப்புச் செய்த வள்ளுவன்,

ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டிமண்டபத்துப் பாங்கிறந்து ஏறுமின்[2] (1:60–61)

என விளம்பினானென்று மொழியும் மணிமேகலை. பின்னாளிலும் இந்த மரபு நீடித்தது. ''பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை'' என்று கூறுவர் மாணிக்கவாசகர். ''பன்னருங்கலைதெரி பட்டிமண்டபம்''அயோத்தியில் இயங்கியதென்பது கம்பன் கண்ட காட்சி (1,3,62).

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (423)

என்பர் வள்ளுவர். எனவே, பல மதங்களின் கொள்கையையும் விருப்பு வெறுப்பின்றி பயின்று உண்மையை அறிவதை முன்னோர் போற்றினரென்று துணியலாம். மணிமேகலா தெய்வமும் கண்ணகியும் மணிமேகலைக்கு வழங்கிய அறிவுரையும் அதற்குச் சான்று பகர்கிறது. ஏனைய சமயத்தினர் கொள்கைகளைக் கேட்டு அவற்றின் பொய்ம்மையை உணர்ந்த பின்னர் புத்தன் நெறியைப் பற்றுக்கோடாகக் கொண்டு உய்வாயாக என்று அவர்கள் அவளிடம் கூறினர். அவ்வாறே மணிமேகலை பல மதங்களின் கொள்கைகளையும் அறிய முயல்வதை வாய்ப்பாகக் கொண்டு, அந்நாளில் நாட்டில் விளங்கிய எல்லா மதங்களின் கொள்கைகளையும் சாத்தனார் கூறுவார். மணிமேகலைக் காப்பியம் அடிஎடுத்துக் கொடுத்த அந்நெறியில், குண்டலகேசி, நீலகேசி முதலிய காப்பியங்கள் எழுந்தன. பெண் ஒருத்தி மெய்யறிவு பெற முயல்வதையும் பல சமயத்தினரோடு வாதித்துத் தான் கொண்ட உண்மையினை நிலைநாட்டுவதையும் அவை பேசும்.

---

1. *சிலப்பதிகாரம் 5,102 (அரும்பதவுரை).*

2. *ஒட்டிய - சபதம் செய்த. பாங்கு - முறைமை.*

சமயக்காழ்ப்பு மணிமேகலையில் தலைகாட்டுவது மெய்யே. சுதமதி கதை மூலம் (காதை 5) ஜைனத்தையும், ஆபுத்திரன் கதை வாயிலாக (காதை 13) வைதிக மதத்தையும் இகழ்ந்து பேசுவதற்கு வாய்ப்பைப் படைத்துக் கொள்கிறார் சாத்தனார். பின்னாளில் இந்தப் போக்கு வளர்ந்தது. சமயப்பகை மூண்டதற்குக் களப்பிரர் ஆட்சியின் கொள்கை அடிகோலியது என்பர். பேரரசர் பலரை வீழ்த்தியும் பிரமதேய ஊர்களின் உரிமைகளைப் பறித்தும் கொடுமை இழைத்த கலிஅரசன் என்று களப்பிரனைக் குறிப்பிடும் வேள்வி குடிச்செப்பேடு.[1] களப்பிர குல வேந்தனான அச்சுதன் காலத்தில்[2] காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து பௌத்த நூல்களை எழுதிய புத்ததத்தர், அந்நாளில் பௌத்தப் பள்ளிகள் புகாரில் சிறந்து விளங்கியதைக் குறிப்பிடுவர். இந்த அச்சுதனைப் பற்றி சில பழம் பாடல்களை யாப்பருங்கலக் காரிகை (கி.பி.10 ஆம் நூ.) மேற்கோளாகத் தரும். அவன் மூவேந்தர்களையும் சிறை வைத்தான் என்ற மரபுரையைத் தமிழ் நாவலர் சரிதையில் காணலாம். எனவே, களப்பிரர் பௌத்தரே என்றும், அவர்கள் மூவேந்தர்க்கும் வேத நெறிக்கும் பகையாக வந்தனர் என்றும் ஊகிப்பர். பல்லவர் எழுச்சியுற்ற பிறகும், ஜைனரான தருமசேனர் சைவராக மாறித் திருநாவுக்கரசர் என்னும் திருநாமத்துடன் தொண்டாற்றிய போது, ஜைனத் துறவிகள் பல்லவ வேந்தன் மூலம் அவருக்குத் தொல்லை கொடுத்தனர் என்பர். அப்பரைச் சுண்ணாம்புக் காளவாயில் இட்டனர் என்றும், கல்லோடு கட்டிக் கடலில் இட்டனர் என்றும் கூறுவதெல்லாம் மிகையென்றாலும், அப்பர் அமணரால் அல்லலுற்றார் என்பது உண்மையாகலாம். இந்தச் சூழலில் தோன்றிய பக்தி இயக்கம் ஜைனரையும் பௌத்தரையும் இழிவாகப் பேசுவதும் குறிப்பிடத்தக்கது. மதுரையில் ஞானசம்பந்தப்

---

1. வேள்வி குடிச்செப்பேடுகள் (கி.பி.770). பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, வேள்வி செய்தவேதியருக்குத் தானமாகக் கொடுத்து வேள்விக் குடி என்று பெயரிட்டான் என அச்செப்பேடுகள் கூறும்.

2. அச்சுதன் காலம் விளங்கவில்லை. கி.பி. 575 அளவில் பல்லவரும் பாண்டியரும் களப்பிரரை வென்று உயர்ந்தனர். அதற்கு முன் களப்பிரர் தமிழகத்தை எப்போது கைப்பற்றினர் என்பதை அறியோம். கி.பி.300-க்குப் பின் கி.பி.575 வரையில் தமிழக அரசியல் வரலாற்றை அறிய முடியவில்லை.

பெருமான் எட்டாயிரம் சமணர்களைக் கழுவிலேற்றினார் என்பது பின்னாளைய பிள்ளைமதிக் கதையே ஆயினும், நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஜைன பௌத்த மதங்களை வெறுத்து ஒறுத்தனர் என்று கருதலாம். ஒழுக்க உயர்வாலும் பொதுநலத் தொண்டாலும் மக்கள் உள்ளத்தில் இடம்பெற்ற சமண பௌத்தப் பள்ளிகள், வேந்தர் வணிகர் ஆதரவால் நிலமும் பொருளும் நிறையத் திரட்டி ஊழலுக்கு உறைவிடமானதும் அவற்றுக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்குக் காரணமாகலாம்.

ஆனால் சங்கம் மருவிய காலத்தின் பிற்பகுதியிலேயே சமயக் காழ்ப்பு இங்குத் தோன்றியது. அதற்குமுன் ஒத்துழைப்புச் சகவாழ்வுக் கொள்கையை அனைத்துச் சமயங்களும் பேணின. கருத்துப் போரால் அந்தச் சூழல் கெடவில்லை. எல்லா மதங்களுக்கும் உள்ள பொதுவான அடிப்படையைப் போற்றி, அனைவரும் ஒப்பும் வகையில் தம் கொள்கைகளை எடுத்துரைப்பதில் சங்கச் சான்றோருக்கு இருந்த சிரத்தைக்கு கணியன் பூங்குன்றனார் பாட்டை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்:

> யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
> தீதும் நன்றும் பிறர்தர வாரா;
> நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன;
> சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
> இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
> இன்னாது என்றலும் இலமே; 'மின்னொடு
> வானம் தண்துளி தலைஇ, ஆனாது
> கல்பொருது இரங்கும் மல்லல் பேரியாற்று
> நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்
> முறைவழிப் படூஉம்' என்பது திறவோர்
> காட்சியில் தெளிந்தனம் ஆதலின், மாட்சியின்
> பெரியோரை வியத்தலும் இலமே;
> சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே[1] (புறநா.192)

---

1. *கேளிர் - உறவினர். பிறர்தர வாரா – தாமே வரும் (அவரவர் வினையின் பயனாகவே ஆக்கமும் கேடும் வரும் என்பது கருத்து. குறளும் (505) இதனைக் கூறும்.)*

ஊழின் வழி உயிர் இயங்குவதை உணர்ந்து சமநிலை எய்திய சான்றோனின் ஒழுக்கச் சிறப்பைப் புலப்படுத்தும் அரிய பாடல் இது. இது போலவே, சங்க இலக்கியத்தின் மற்றொரு முடிமணியாக ஒளிரும் இளம்பெருவழுதி பாட்டும் எம்மதத்திற்கும் சம்மதமானதென்று கூறத்தக்கதே:

உண்டால் அம்ம இவ்வுலகம்—இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் 'இனிது' எனத்
தமியர் உண்டலுமிலரே; முனிவிலர்;
துஞ்சலு மிலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி,
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.[1] (புறநா.182)

தணிதல் - நோய் தீர்தல். சாதலும் புதுவது அன்றே - சாவும் புதிதன்று; பிறப்பென்றால் இறப்பும் உண்டு. மகிழ்ந்தன்றும் இலமே-மகிழோம். முனிவின் - வெறுப்பு வந்தால். இன்னாது - துன்பம் தருவது. வானம் - மழை. தண்துளி - குளிர்ந்த துளியினை. தலைஇ—பெய்தலால். ஆனாது – அமையாமல். கல் பொருது – கல்லை அலைத்து. இரங்கும் – ஒலிக்கும். மல்லல்–வளப்பத்தை உடைய. புணை – தெப்பம். முறை–ஊழ், விதி. திறவோர் – தக்க இன்ன, தகாதன இன்ன என்பதை அறிந்தவர் (ஞானிகள்). காட்சி - நூல். தெளிந்தனம் - ஆன்மாவின் அனுபவத்தால் உணர்ந்தனம்.

பெரியோரை வியத்தல் இந்து, பௌத்த ஜைன சமயங்களின் மரபு. கோசாலனின் ஆசீவக நெறியே (பார்க்க: 4 ''புதிய நெறிகள்'') மகாத்மாவாக மிளிர்வதும் அற்பாத்மாவாகத் தேய்வதும் ஊழாலேயே தேர்வதென்று இடம்பி, வினைப்பயன் பற்றிய கொள்கையை மறுத்ததால், பூங்குன்றனார் பாட்டில் ஆசீவகர் கொள்கையின் செல்வாக்குப் புலனாகிறது எனலாம்.

1. இயைவது-சேர்வது. தமியர்–தனியராக, முனிவு இலர்–யாரோடும் வெறுப்புக் கொள்ளார். துஞ்சல்–சோம்புதல். பிறர் அஞ்சுவது–உயர்ந்தோர் அஞ்சுவது ('அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' என்பது குறள் (428). புகழ்–அறத்தால் வருவது. எனவே பெருமை அதிகாரம் (98) போல் பொருட்பால் ஒழிபு இயலில் அமைக்காது, அறத்துப் பாலிலேயே இல்லற

இந்திரர் என்று பன்மையில் கூறுவதென்றே இதனைப் பாடிய (கடலுள் மாய்ந்த) இளம்பெருவழுதி ஜைனர் என்பதை உணர்த்தும்.[1] தாம் ஜைனர் என்று சாற்றாது, நிகண்டர் கண்ட தொண்டு நெறியின் சிறப்பை யாவர்க்கும் ஏற்புடைத்தாகப் பாடுகிறார் பாவாணர். அறவாழ்வுக்கு விளக்கமாக உள்ள திருக்குறள் இப் பொதுநோக்கில் அமைந்ததாலேயே, ஒவ்வொரு சமயத்தினரும் தமது நூலாக அதனைப் பாராட்டுகின்றனர்.

25. தென்னாடு கண்ட தத்துவ விளக்கம்

வடபுலம் கண்ட மெய்யறிவுத் தேட்ட முயற்சிகளின் பயனையெல்லாம் சீரணித்துத் தன்மயமாக்கித் தன் பண்பாட்டுக்கு வளம் கூட்டியதுடன் தமிழகம் அமையவில்லை. அனைத்திந்திய சமய வாழ்வுக்கு அது அளப்பரிய ஆற்றல் அளித்தது.

வைதிக நெறிகளில் ஒன்று பூர்வ மீமாம்சை. இதன் முதல் நூல் ஜைமினி முனிவர் இயற்றிய சூத்திரமாகும். பூர்வ மீமாம்சகர்கள் வேதம் விளம்பும் சடங்குகளைத் தவறாது செய்வர்; ஆனால் அவர்களுக்கு இறைவன் என்று ஒருவன் இலன். ''கருமத்தின் விளைவிலிருந்து தப்ப முடியாது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். இவ்வாறு வினைச்சட்டம் வையத்தில் ஆட்சி புரியும்போது, ஈசுவரன் என்று ஒருவன் எங்கிருந்து வந்தான்?''என்று பேசுவதால், அது நாஸ்திக மீமாம்சை எனப்படும். ''கடவுள் என்ற சர்வவல்லமையுள்ள சர்வ வியாபி ஒருவர் இருந்தால், தீமை எங்கிருந்து முளைத்தது?'' என்றும் அவர்கள் கேட்பார்கள். ''பெருமையா, சிறுமையா என்று தீர்மானிப்பது கருமமே என்பதால், அநாதியான நான்மறை நவிலும்

இயலுக்கு மகுடம் போல் புகழ் அதிகாரத்தை (24) அமைப்பர் வள்ளுவர். அயர்வு இலர்-கவலை (அல்லது வருத்தம்) இல்லாதவர். அள்ளமாட்சி அனையர்-அத்தகைய சிறப்பு உடையவர். நோன்தாள் - வலிய முயற்சி.

1 'தேவர்' என்னும் பொருளில் 'இந்திரர்' என்னும் சொல்லை ஆள்வது ஜைன மரபு. பார்க்க: சிலப்பதிகாரம் 16.173, அடியார்க்கு நல்லார் உரை; சீவக சிந்தாமணி 1239, 3085, 3121.

அறநெறிக்கருமங்களைச் செய்ய வேண்டும்; ஆன்மாவைப் பற்றியும் பிரமத்தைப் பற்றியும் ஆராய்ச்சி செய்வதோடு அமைகின்றதும் செயலுக்கு உதவாததுமான உபநிடத ஞானத்தால் பயனில்லை'' என்பது அவர்கள் கட்சி. ஆக, கடவுள் மறுப்பில் மீமாம்சகர்கள் பௌத்தர்களோடு உடன்படுவர்; ஆனால் வைதிக கருமங்களைப் புரியக்கூடாதென்று பௌத்தம் புகல்வதற்கு மாறாக, அக்கருமங்களை விருப்பும் வெறுப்புமின்றி ஆற்றவேண்டுமென்பது மீமாம்சை.

ஜைமினி முனிவர் கண்ட மீமாம்சைக்கு விளக்கம் தந்த இரு பெரியாரும் தென்னிந்தியரே. அவர்களே குமாரில பட்டரும் பிரபாகரரும் ஆவர். ஆதி சங்கரர் காலத்தவரான பட்டர் ஆந்திர நாட்டினர்; பிரபாகரர் கேரளத்தில் பிறந்தவர். மீமாம்சை மதத்தை விளக்கி வரையறுத்த பட்டர், பல பௌத்தரை வாதிட்டு வென்றாரென்பது வரலாறு. அவரது சிறப்பான தொண்டால், அவர்தம் கொள்கைகள் பாட்டமதம் என்றே பெயர் பெற்றது. பாட்டருடைய கொள்கைகள் பலவற்றை மறுத்துப் பேசியவர் பிரபாகரர். நாஸ்திக மீமாம்சையை ஆஸ்திக மீமாம்சையாக மாற்றும் முறையில் ஜைமினி கருத்துக்களை விளக்கிய ஸ்ரீவேதாந்த தேசிகரும் தென்னாட்டவரே.

மீமாம்சைக்குப் புரிந்த தொண்டினைக் காட்டிலும் வேதாந்தத்துக்குத் தென்னகம் புரிந்த தொண்டு பன்மடங்கு சிறந்ததாகும். வேதாந்தம் என்பது வேதத்தின் முடியெனப் பாராட்டப் பெறும் உபநிடதத்தைக் குறிக்கும். உபநிடத ஞானத்துக்கு உரிய விளக்கம் தந்து அதனை நிலைபெறச் செய்த மும்மூர்த்திகளான சங்கரரும் இராமானுஜரும் மத்துவரும் தென்னாட்டவரே.

ஆதிசங்கரர் அவதரித்த ஊர், கேரள நாட்டிலுள்ள காலடி என்பதாகும். முக்கியமான உபநிடதங்கள், பிரமசூத்திரம், பகவத் கீதை ஆகியவற்றுக்கு அருளிய உரையின் மூலமும் வேறு சில தனி நூல்களிலும் அவர் அரங்கேற்றிய தத்துவம் அத்வைதம் என்பதாகும். துறவிக்கோலம் பூண்ட சங்கரர் காசிக்குச் சென்றிருந்தபோது, சிவபெருமான் புலையன் உருவில் வந்ததாகவும், சங்கரரின் சீடர்கள் அவனை விலகச்

சொன்னபோது, ''எதை விலகச் சொல்கிறீர்கள்? உடலையா, ஆன்மாவையா? உடலுக்குத் தீட்டு ஏது? ஆன்மாக்கள் அனைத்தும் ஒரே பொருள் என்பதால் பிரிதலும் தொடுதலும் ஏது?'' என்று அவன் அவர்களைக் கேட்டதாகவும், வந்தவன் ஞானி என்பதை அறிந்த சங்கரர் அவன் காலடியில் விழுந்து, ''அந்தணனாயினும் ஆவுரித்துத் தின்னும் புலையனாயினும், ஆன்மாவின் உண்மையை உணர்ந்தவனே என் குரு''என்று கூறியதாகவும் ஒரு வரலாறு உண்டு. சங்கரரது அத்வைதத்தை இக் கதையிலிருந்தே ஒருவாறு புரியலாம். அத்வைதம் என்றால் இரண்டல்ல என்று பொருள். ''பிரமம் இரண்டற்ற மூலப் பொருள்; அதற்கு வேறாகத் தோன்றும் உலகம் மாயையின் காரியம். பலவாகக் காணப்படும் சீவர்களெல்லாம் பிரமத்தினின்றும் வேறு அல்லர்'' என்பது அதன் கருத்தாகும். கருமங்களைப் புரிவதே முக்கியம் என்ற மீமாம்சையினையும், சமண பௌத்த தத்துவங்களையும் எதிர்த்து வாதப்போர் நிகழ்த்தும் பொருட்டுப் பாரத நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்தார் சங்கரர். அவர்தம் வாதத்தின் தெளிவும் ஆழமும் திட்பமும் நுட்பமும் கற்றோர் அனைவரையும் அவர்பால் ஈர்த்தன. சென்றவிடமெல்லாம் வாதப்போரில் வாகைசூடி, அத்வைதத்துக்கு அனைத்திந்தியத் தலைமை நிலையைத் தேடிக் கொடுத்தார் சங்கரர்.

சங்கரருக்கு முன்பும் அத்வைத வேதாந்திகள் இருந்தனர். அவர்களில் ஒருவர் திராவிடர் என்பவர். அவர் திராவிடாச்சாரியார் என்றே குறிப்பிடப் பெறுகிறார். சங்கரரின் சீடரான சுரேஸ்வரர், தம் குருவைத் திராவிடர் என்றே குறிப்பிடுவதும் ஈண்டு நோக்குவதற்கு உரியது.

தத்துவ ஞானத்தில் தமக்குவமையில்லாது திகழ்ந்த சங்கரர், இந்து சமுதாயத்திலும் ஆலயங்களிலும் புகுந்த கேடுகளைச் சாடினார். அவரை ''வேதாந்தம் பேசி வஞ்சிக்கும் பௌத்தன்'' என்றே பிற்போக்காளர்கள் தூற்றினார்கள். ஆனால் எதற்கும் அஞ்சாத அந்த ஞானி அறிவின் துணை கொண்டே அகில இந்தியாவிலும் வெற்றிக் கொடி நாட்டினார். பரதகண்டத்தின் பண்பாட்டு ஒருமையைத் தேர்ந்து

தெளிந்த சங்கரர், நாட்டின் நாலாபுறத்திலும் அத்வைதமடங்களை அமைத்தார். பனிமுடி தரித்த இமயத்திலுள்ள பத்ரியிலும், பூரி, துவாரகை, சிருங்கேரி, காஞ்சி என்ற நான்கு இடங்களிலும் அமைந்தவை அவற்றில் முக்கியமானவையாகும். சங்கரர் கருத்துலகில் சாதித்த புரட்சியின் செம்மையைக் கண்டு வியந்த சான்றோர், அவரைச் சிவபெருமானது அவதாரமாகவே கருதினர்; காஞ்சியில் காமாட்சி அம்மன் கோயிலில் அவர் சந்நிதியும் சிலையும் உள்ளன.

விசிஷ்டாத்வைதம் என்ற தத்துவத்தை நிறுவிய இராமானுஜர் சென்னைக்கு அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தவர். திருமந்திரத்தின் பொருளை அவருக்கு உபதேசித்த திருக்கோஷ்டியூர் நம்பி, அதை எவருக்கும் உரைக்கக்கூடாது என்று ஆணையிட்டாரென்றும், யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டுமென்று கருதிய இராமானுஜர் அதனை மக்கள் மன்றத்தில் எடுத்துரைத்தாரென்றும், நானிலத்தோரின் நன்மைக்காக நரகமும் செல்வேனென்று அவர் நவின்றதைக் கேட்ட குரு கோபம் தணிந்து நல்லாசி வழங்கினாரென்றும் இவரைப்பற்றி மரபுரை உண்டு. பஞ்சமர்கட்குத் திருக்குலத்தார் என்று பெயரளித்த பெருமான் இவர். உபநிடதம், பிரமசூத்திரம், கீதை என்ற வடமொழியிலுள்ள மூலநூல்களும் ஆழ்வாரது பிரபந்தங்களும் ஒரே மெய்ப்பொருளைப் போதிக்கின்றன என்று நிறுவினார் இராமானுஜர். ஞானம், பக்தி இரண்டும் ஒன்றே என்று அவர் வற்புறுத்தினார். அவரது அறிவுரைகள் வட நாட்டிலும் வைணவம் தழைக்க வழி செய்தன. வட நாட்டில் பல பக்தி இயக்கங்கள் வெள்ளமெனப் பெருகுவதில் அவரது தெளிவுரைகள் பெரும்பங்கு வகித்தன.

விசிஷ்டாத்வைதத்தைப் போலவே வேதாந்தத்துடன் இணைந்த தத்துவமான துவைதத்தை நிறுவிய மத்துவர் என்பவரும் தென்னிந்தியரே; பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மத்துவர், இராமானுஜரையும்விடத் தீவிரமாகச் சங்கரரது அத்வைதத்தை எதிர்த்தார். உலகில் உண்மைப் பொருள்கள் பலவுள என்பதும் அவற்றை நடாத்தி வரும் உயர் செம்பொருளே ஆண்டவன் என்பதும் துவைத

வாதமாகும். மத்துவரும் பரதகண்டம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்தார். ஜலாலுத்தீன் போன்ற முஸ்லீம் அரசர்களும் இவருக்குச் சிறப்புச் செய்தனர். இவருக்கு வடபுலத்தில் பலர் சீடரானதின் விளைவாக அங்குப் பல கிருஷ்ண மதங்கள் தோன்றின. வங்கத்தில் புகழெய்திய சைதன்யரின் இயக்கம் மத்துவரின் ஞானத்தைத் தழுவியதாகும்.

இந்திய நாட்டுத் தத்துவங்களில் இன்னொன்றான சைவ சித்தாந்தத்தை உருவாக்கியதில் தமிழ் நாட்டின் பங்கு மிகப் பெரிது. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் முதலான பெரியார்களது உள்ளொளியில் பிறந்து பிரவாகமெனப் பாய்ந்த தேவாரமும் திருவாசகமுமே சைவ சித்தாந்தத்தின் ஆதாரமெனலாம். மெய்கண்டார் அருளிய சிவஞான போதமே இதன் மூல நூலாகும். பதி (இறைவன்), பசு (உயிர்), பாசம் (கட்டு) என்ற மூன்றும் உண்மையதானவை என்பது சைவ சித்தாந்தம். உயிர் சிறுமை உறுவதற்குக் காரணமாவது கட்டு. கட்டு நீங்கி கடவுளையடைந்த நிலையிலும், அவரே உயிருக்குத் தலைவர். எனவே அவரைத் தொழுதலே முறையென்பார் மெய்கண்டார். சைவ சித்தாந்தத்தின் வேதாந்தத் தொடர்பை மறுப்பவரெல்லாம் விவரம் அறியாப் பேதையரே. பூர்வமீமாம்சை, அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம் முதலானவை புறநெறிகள் என்றும் சைவ சித்தாந்தமே வேதாந்தத் தெளிவென்றும் இதனைத் தழுவி நிற்போர் உரைப்பர்.

ஆக, இந்நாட்டுத் தத்துவங்கள் பலவாயினும், அவை அனைத்திந்திய அடிப்படையிலேயே வளர்ந்தன என்பதும், அவற்றுக்கு வளம் கூட்டுவதில் தென்னகம் வகித்த பாத்திரம் மிகப் பெரிது என்பதும் தெளிவு. மேலும் மெய்ப் பொருளினை அறிவதே முக்கியம் என்று இந்நாட்டினர் கருதியதால் பல தத்துவங்கள் அடுத்தடுத்து வாழ வழி ஏற்பட்டதைக் காண்கிறோம். வன்முறையினைத் தழுவாது கருத்தின் வலிவால் மனத்தை மாற்றும் பண்பினையே பாரதம் நாடியது; எனவே பல்வேறு தத்துவ ஞானிகளும் அப்பண்புக்குரிய பாதையினையே பெரும்பாலும் பின்பற்றியதைப் பார்க்கிறோம்.

26. பக்தி இயக்கத்தின் சக்தி

பாரத நாட்டு வரலாற்றில் பக்தி இயக்கத்தின் பாத்திரம் பெரிது. இந்திய மக்கள் பண்படுவதில், மன விரிவும் உளத் தன்மையும் இதயக் கனிவும் அடையப் பெறுவதில், பல்கலைச் செல்வத்தைப் படைத்துத் துய்ப்பதில், பக்தி இயக்கம் ஆற்றிய தொண்டினை மிகைப்படுத்த முடியாது. இந்தப் பக்தி இயக்க வரலாறும் இந்திய மக்களின் தேசிய ஒருமைப்பாட்டுக்கே சான்று பகர்கிறது.

தென்னகமே பக்தியின் பிறப்பிடம் என்பது பதும புராணத்தின் கூற்று. பொருநை, வைகை, காவிரி, பாலாறு என்னும் ஆறுகளின் கரைகளில் பேரன்பர்கள் தோன்றுவர் என்று பாகவதம் புகன்றது. ஆழ்வார்களும் நாயன்மார்களுமே பரத கண்டத்தில் பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்த பெரியார்களாவார்கள்.

நாயன்மார்களது தேவார திருவாசகமும் ஆழ்வார்களது திவ்யப் பிரபந்தமும் எளிய தமிழில் அமைந்தவை. பொருளாழமும் உணர்ச்சி வேகமும் இசைநயமும் ஒருசேரப்பெற்றவை. கற்றவரோடு கல்லாத வரும் அவற்றைப் பாடிக் களித்தனர். இவ்வாறு தமிழோடு இன்னிசையும் ஆக்கம் பெற்றது. "முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்" என்று பாடி, நான்கு வேதத்துக்கு நிகராக முத்தமிழுக்கும் இறைமை கற்பிக்கிறார் அப்பர். சம்பந்தரோ தமிழ் விரகர் என்றே தம்மைப் பல இடங்களில் கூறிக்கொள்கிறார். "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்" என்பார் சுந்தரர். கர்நாடக இசையில் தேவாரப் பண்களே மிகப் பழமையான உருப்படிகள் என்பதும் நாம் இங்குக் கருதத்தக்கது. மக்களை மனதார நேசித்து வாழ்ந்த இச்சான்றோர்கள் குடிமக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட நாட்டுப் பாடல்களைப் போற்றினர். திருப்பாவை, திருவெம்பாவை, திருப் பள்ளியெழுச்சி, திருப்பொற்சுண்ணம் முதலியவை அந்நாளைய நாட்டுப் பாடலகள் பெற்ற நல்லுருவங்களாகும்.

இராமாயண பாரதக் கதைகள் பக்தி இயக்கத்துக்கு ஊற்றம் அளித்தன. மாமல்லபுரத்து சிற்ப விசித்திரங்களுக்கும் காஞ்சி நகர கோவில்களுக்கும் இவற்றைத் தொடர்ந்து தஞ்சைக் கோவில் முதலான ஆலயங்கள் அமைவதற்கும் பக்தி இயக்கமே ஆதாரம் என்போம். ஆலயங்களது விழாக்கள், ஆடல்பாடல் கலைகளுக்கும் காலட்சேபங்களுக்கும் வாய்ப்பு அளித்தன. இவ்வாறெல்லாம், பொதுமக்கள் ''செல்வத்துட் செல்வ'' மான கேள்வி ஞானத்தால் பண்படுவதற்கும், நுண்கலைகளது அறிவும் ரசனையும் பெருகுவதற்கும், அனைத்து அம்சங்களையும் தழுவியதாக வாழ்வு நிறைவு பெறுவதற்கும் பக்தி இயக்கம் வகை செய்தது.

தொழில் பிரிவினை அடிப்படையில் தோன்றிய சாதி முறை, ஏற்றத் தாழ்வு பாராட்டும் சமுதாய ஏற்பாடாக வளர்ந்து கொடுமை இயற்றுவதைச் சாடியது பக்தி இயக்கம். நந்தனையும், திருப்பாணாழ வாரையும் படைத்து பெருமை பெற்றது. ஆண்டவனது சந்நிதானத்தில் அனைவரும் சமம் என்று சாற்றி, சமுதாயம் பராமரித்த சிறுமையை எதிர்த்தது. வழிபாட்டுக்கு உரிய பசுவின் இறைச்சியைத் தின்னும் புலையரே ஆயினும், சிவ பக்தர் எனில் அவரைக் கண்கண்ட தெய்வ மாகப் பரவுவேன் என்பார் அப்பர் பெருமான்:

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியோடு வானாளத் தருவரேனும்,
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லார் ஆகில்.
அங்கமெல்லாம் குறைந்து அழுகுதொழு நோயராய்
ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.[1]

(6 95.9)

1 சங்கநிதி, பதுமநிதி-குபேரனுடைய நவநிதியங்களில் இரண்டு. வாள்-சுவர்க்கம். ஏகாந்தர்-அந்தரங்க பக்தர். தொழுநோயர்-குட்ட நோயால் துன்பறுவோர். கங்கைவார்ச் சடைக்கரந்தார் - கங்கையைத் தன் சடையில் அடக்கிய (சிவ) பெருமான்.

பிறப்பும் படிப்பும் செல்வமும் செல்வாக்கும் ஒருபொருட்டன்று என்பதை உணர்ந்து, உளத்தூய்மையே போற்றத்தக்கது என்பதைத் தெளிந்து பாடும் திருமங்கையாழ்வார் நாவாய் வேட்டுவனாம் குகனைத் தோழனாக வரித்த இறைவனின் பெருமையை விதந்தோதுகிறார்:

ஏழை, ஏதலன், கீழ்மகன் என்னாது
இரங்கி, மற்று அவற்கு இன்னருள் சுரந்து,
''மாழை மான் மட நோக்கி உன் தோழி,
உம்பி எம்பி என்று ஒழிந்திலை; உகந்து
தோழன் நீ எனக்கு இங்கு ஒழி'' என்ற
சொற்கள் வந்து அடியேன் மனத்து இருந்திட,
ஆழிவண்ண! நின் அடியினை அடைந்தேன்–
அணி பொழில் திருவரங்கத்தம்மானே.[1]

ஆடிப் பதினெட்டாம் பெருக்காகத் தமிழகத்தை ஆட்கொண்ட பக்தி இயக்கத்தின் சூழலே, ''மண்ணினை அளந்து நீண்ட மால்என'' வளர்ந்து தன்னேரில்லாத் தமிழ்க் கவிஞனாகத் திகழும் கம்பனைப் படைத்தது. சோழநாட்டுத் திருவழுந்தூரில், கைம்மணியடித்துக் காளிக்குப் பூஜை செய்யும் உவச்சர் குலத்தில் உதித்த புலவன், உலக மகாகாவியங்களுடன் ஒப்பிடத்தக்க பேரிதிஹாசத்தைப் படைத்து, உழைக்கும் மக்களின் படைப்பாற்றலுக்கு ஒப்புயர்வில்லாச் சாட்சியாகத் துலங்குகிறான். ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' அவனிவாழ் மாந்தரை அணைத்துக் கொள்ளும் கனிவும், நெடிது நோக்கும் நோன்மையுடன் மக்களை அறநெறியில் செலுத்தும் மனோ பாவனையும், மனித இயல்பினைப் பல்வேறு கோணங்களில் நுணுகி ஆய்ந்த அறிவும் முரணின்றி ஒருசேரப் பொருந்தப் பெற்ற கவிஞனின் தோற்றம் மொழிக்கும் நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் கிடைத்தற்கரிய நற்பேறாயிற்று.

---

1. *பெரிய திருமொழி – 5.8.1 ஏதலன் – அயலான்; மாழை – இளமை. மடநோக்கி – மென்மையான பார்வையை உடையவள் (சீதை). உம்பி எம்பி என்று-எம்பிஉம்பி (என் தம்பி உன்தம்பி) என்று; ஒழிந்திலை, சொல்வதோடு முடித்தாய் இல்லை. இங்கு ஒழி-இங்குத் தங்கு வாயாக.*

சமரச சன்மார்க்கமே சாலவும் சிறந்த சமயநெறி என்று தெளிந்த புலவன், பக்தி இயக்கத்தில் தலைகாட்டிய குரோதங்கள் கொள்ளத் தக்கனவன்று என்று தள்ளினான். பௌத்த ஜைன நெறிகளைச் சாடவோ எள்ளி நகையாடவோ ஒருப்படாது கம்பன் உள்ளம். மேலும்,

நீ ஆதி பரம்பரமும்;
நின்னவே உலகங்கள்;
ஆயாத சமயமும் நின்
அடியவே; அயல் இல்லை [1] (III,1,53)

என்று இராமனைப் போற்றும் வீராதன் வாயிலாக, புற சமயங்களும் இந்து நெறிகள் போற்றும் பரம்பொருளையே காரணமாகக் கொண்டவை என்று தெளிவுரை வழங்குவான் கம்பன். இன்னொன்று: நாராயணனே இராமனாக அவதரித்தான் என்னும் வழிவழி நம்பிக்கையை நேராக அறைகூவான் எனினும், வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம், மும்மூர்த்தி களின் கூட்டு அவதாரமாகவே, மும்மூர்த்திகளுக்கும் மூலமான முழு முதற் பொருளின் அவதாரமாகவே இராமனைச் சித்திரிப்பான். எடுத்துகாட்டு: அனுமன் இராவணனிடம் இயம்புவான்

மூலமும் நடுவும் ஈறும்
இல்லதுஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த
காரணன்–கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும்
கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்
பொருப்பும்விட்டு அயோத்தி வந்தான் [2]

---

1 பரம்பரம் – மேன்மையான பொருள். நின் அடியவே– உன்னைக் காரணமாகப் பற்றியவே.

2 V.12.80 சூலம் சிவனுக்கும், சங்கும் சக்கரமும் (திகிரி) திருமாலுக்கும் கரகம் பிரமனுக்கும் உரியன. ஆலம் – (பாற்) கடல். வெள்ளிப் பொருப்பு–கைலாயம். மும்மூர்தி வடிவான முழுமுதற் பொருள், அவர் படைகளை விடுத்து, இருப்பிடங்களை நீங்கி, இராமனாக அயோத்தியில் அவதரித்தது

8

இந்நாளிலேயே, விஞ்ஞானமும் பொறிஇயலும் இயற்றிய வியத்தகு சாதனைகளால், இல்லாமையும் கல்லாமையும் இல்லாது ஒழிந்த பொன்னுலகைச் சமைக்கும் வாய்ப்பு கைகூடியிருக்கிறது. ஆனால் அன்றோ, உழவும் தொழிலும் உள்நாட்டு வெளிநாட்டு வாணிகமும் பல்கிப்பெருகும் சூழலில் வளர்ந்த கவிஞன், யாவர்க்கும் நலமே நாடும் அருள்நோக்கில் அப்பொருட் செல்வம் பயன்பட்டால், இன்மையும் புன்மையும் அறவே நீங்கிய இலட்சியப் பொதுவுடைமைச் சமுதாயம் மலரும் என்று கற்பனை ஆற்றலால் கனவு கண்டான். அதுவே இராமனை ஈன்றெடுத்த கோசலமாக உருவெடுத்தது. அச்சமுதாயத்தின் எழுச்சிக்குத் தடையாகத் தனிஉடைமை வெறி, சாதிச்செருக்கும் சமயத்தருக்கும் அதிகார ஆணவமும் போர்வெறியும் புடைசூழ, கடிவாளம் அறியாப் பேய்க் குதிரையாகக் கொட்டமடிப்பதைக் கண்டு கவிஞன் உள்ளம் கதறியது. பொருள் நசையால் வசையுற்றோரால் மாந்தர்க்கு நேரு இன்னலை அரக்கர் கண்ட இலங்கைச் சமுதாய வாயிலாகப் புலப்படுத்தினான் புலவன். இரக்கம் அறியா அரக்கர் அரசியலின் அழிவைக் குறிப்பது இராவண வதம்.

''எல்லாரும் எல்லாப்பெருஞ் செல்வமும்'' பெற்றுப் பொலிவதால், ''இல்லாரும் இல்லை, உடையார்களும் இல்லை'' கள்வரும் இலர், காவலரும் இலர், கொள்வாரும் இலர், கொடுப்பாரும் இலர் என்னும் மேனிலை மேவிய கோசலத்தில் அவதரிக்கும் இராமன், ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்னும் செந்நெறிக்குச் சாட்சியாக வாழ்கிறான். காடுவாழ் குகனையும், வனநரன் எனத்தக்க வானரனாம் சுக்கிரீவனையும், மனைவியைக் கவர்ந்த மாற்றானின் இளவலான வீடணனையும் தம்பியராகத் தழுவும் மனவிரிவு அவனுடையது.[1]

---

1. *வீடணனை உடன்பிறப்பாக ஏற்றுக்கொள்ளும் ராமன் இசைப்பான்:*
குகனோடும் ஐவர் ஆனோம்
முன்பு, பின், குன்று சூழ்வான்
மகனோடும் அறுவர் ஆனோம்,
எம்முழை அன்பின் வந்த
அகனமர்க் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனோம்!
புகலருங் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் நுந்தை! **(VI,4,143)**

வன்முறைக் கருவிகளுக்கும் புன்நெறிச் சூழ்ச்சிகளுக்கும் இடமில்லாத பொதுவுடைமை அறத்தை நிலைநாட்டும் புரட்சித்தலைவனாகக் காகுத்தனைப் படைத்த கம்பன் சாதனையே பக்தி இயக்கத்தின் உயிராற்றலை மலை இலக்காகப் புலப்படுத்தும்.

ஆழ்வார்களின் பக்தி இயக்கம் இராமானுஜரால் புதுப் பொலிவும் வலிவும் பெற்றது; வடநாட்டிலும் பரவியது. வடபுலத்தில் பக்தி இயக்கம் தழைத்தோங்குவதற்குப் பெருந் தொண்டாற்றியவர் இராமானந்தர் ஆவார். பிராகையில் பிராமண குலத்தில் பிறந்த இராமானந்தர் இராமானுஜரது கொள்கைகளைத் தழுவியபின், குலநலம் நோக்கும் குன்றிய வட்டத்தில் சுற்றிச் சுழல மறுத்தார்.

''குடிகள் அனைவரும் கடவுளின் கோத்திரத்தைச் சேர்ந்த ஓர் இனத்தவரே'' என்று உபதேசித்து அதன் வழிநடந்த பெருமகன் இராமானந்தர். எல்லோரும் எளிதில் தெரிந்துகொள்ளும் வகையில், சமயநூல்களைத் தாய்மொழியில் எழுதவேண்டுமென்று இவர் வற்புறுத்தினார். இவரால் இவரது தாய்மொழியான இந்தி வளர்ச்சியடைந்தது.

ஆழ்வார்களது பக்திமார்க்கத்தின் பெருமையை வடநாட்டில் பரவச் செய்வதில் இராமானந்தரைத் தொடர்ந்து அவரது பன்னிரண்டு சீடர்களும் ஈடுபட்டனர். அவர்களில் ஒருவர் கபீர்தாசர் ஆவார். தமிழகத்தில் வழங்கிவரும் பக்திவிஜயம் என்ற நூல் கபீரின் வாழ்க்கை வரலாற்றை ஓதுகிறது. கபீர்தாசர் ஒரு முஸ்லீம். அவரைப் புரட்சிக்காரர் என்றே கூறவேண்டும். அரியும் அல்லாவும் ஒன்றே என்றுரைத்துச் சமய வெறியை எதிர்த்த சமரசத் தூதர் அவர். பல அரிய இன்னிசைப் பாசுரங்களை இயற்றிய கபீர்தாசரே இந்திமொழியின் ஆதிகவி என்பர்.

குன்று சூழ்வான் மகன் – மேருமலையினைச் சுற்றி வரும் சூரியனின் மைந்தனான சுக்ரீவன். எம்முழை – எம்மிடம் . அகன் அமர் – மனத்தில் பொருந்திய. புகலரும் – புகுதற்கு அரிய. நுந்தை – உன் தந்தை. உடன் பிறப்பை வலியுறுத்தவே, 'எந்தை' என்னாது 'நுந்தை' என்றான்.இராமனைக் காட்டுக்கு அனுப்பியதால், தயரதனுக்குப் புத்திரப்பேறு பெருகிற்று என்பது கடைசி அடியின் பொருள்.)

இந்து அத்வைதமும் முஸ்லீம் சூபிகளின் தத்துவமும் கபீரின் கொள்கைகளில் இடம் பெற்றுள்ளன. அவர், ஆழ்வார்களைப் போலவே, கடவுளை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் பாவித்துப் பாடியுள்ளார்.

இந்து-முஸ்லீம் ஐக்கியத்துக்காகப் பாடுபட்ட கபீரின் சீடரான குருநானக் சீக்கிய மதத்தை நிறுவினார். அகத் தூய்மையினை நாடாது, செயல் செம்மையை விரும்பாது, புறக்குறிகளிலேயே ஈடுபடுவதைக் கபீரைப் போலவே குருநானக்கும் எதிர்த்தார். அறவழிப் பிழையா வாழ்வே சமயநெறி என்பது குருநானக் கொள்கையின் அடிப்படை. கபீரும் குருநானக்கும் பாடிய கீர்த்தனங்கள் சீக்கிய சமயத்தின் திருநூலான ஆதிகிரந்தத்தில் உள்ளன.

இந்தி மொழியில் இராம சரிதம் இயற்றிப் புகழ்பெற்ற மகானான துளசிதாசரும் சுவாமி இராமனந்தருடைய சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவரே. கிருஷ்ண பக்தி மார்க்கப் புலவர்களுள் புகழ்பெற்றவர் சூர்தாசர். இவர் பல இசைப்பாக்களை இயற்றினார். இன்னும் பல கவிஞர்கள் பக்தி மார்க்கப்பாடல்களை பாடியுள்ளனர். ஸ்ரீகிருஷ்ண சைதன்யரது பக்தி இயக்கம் வங்க மக்களது வாழ்வுக்கும் இலக்கியத்துக்கும் வளம் கூட்டியது. ஞானதேவர், ஏகநாதர், துக்காராம், இராமதாசர் முதலான பக்தர்களால் மகாராஷ்டிரம் கண்ட மேன்மை மகத்தானது. சத்ரபதி சிவாஜியின் தலைமையில் மகாராஷ்டிர மக்கள் தேசிய ஆவேசம் கொண்டவராய்த் திரண்டெழுவதற்கு இராமதாசர் செய்த உதவி பெரிது. அந்தச் சாதுவே சிவாஜியின் குருநாதனாகத் திகழ்ந்தார்.

ஆக, பக்தி இயக்கம் தமிழகத்தில் தோன்றிப் பாரத நாடெங்கும் பரவியது; வாழ்வையும் கலை இலக்கியங்களையும் சிறக்கச் செய்தது; இந்திய மக்களின் ஐக்கியத்தைப் பறைசாற்றியதோடு அதற்குப் பேருக்கமும், ஊற்றமும் அளித்தது.

27. பண்டிகைகளில் துலங்கும் பண்பு

பன்மையில் ஒருமைகாணும் பாரதப் பண்பாட்டின் தன்மை, பண்டிகைகள் கொண்டாடுவதிலும் குன்றிலிட்ட விளக்காக ஒளிர்கிறது.

தமிழ் மக்களின் தலையாய பண்டிகையாகப் பொலிவது பொங்கல் விழா. இது அனைத்து நாடுகளிலும் உழவர்கள் வழிவழியாக எடுத்த அறுவடை விழாவை ஒத்ததே என்பது மெய். ஆயினும் இவ்விழாவிலும் தமிழர்தம் இனவழி மரபும் இந்தியப் பண்பாட்டுப் பொதுமையும் ஒருசேரத் துலங்குவதை மறுத்தற்கில்லை. ஆடிப்பட்டம் தேடி விதைத்து, மழையின் உதவியால் கழனியில் பயிர்செய்து, உழைத்துச் சேர்த்த நெல்லை வீட்டுக்குக் கொண்டுவரும் உழவர்கள், பொங்கல் விழாவை எவ்வாறு கொண்டாடி வந்திருக்கின்றனர்? மார்கழி மாதக் கடைசி நாளில் **போகிப் பண்டிகை** (போகி என்பது இந்திரனைக் குறிக்கும்); மறுநாளான தை முதல் நாளில் புத்தாடை அணிந்து புதிய பானையில் புதிய அரிசியினைப் பொங்கிச் சூரியனை வழிபடும் **பொங்கல் பண்டிகை**; தைமாதம் இரண்டாம் நாள் மாடுகளைக் குளிப்பாட்டிப் பொங்கல் படைத்து வழிபடும் **மாட்டுப் பொங்கல்**; மறுநாளில் ஒருவரையொருவர் கண்டு நலமுரைத்து மகிழும் **காணும் பொங்கல்**. இவ்வாறு நான்கு நாட்கள் விழாக் கொண்டாடுவது மரபு.

கழனியும் கழனிசார்ந்த இடமுமான மருதநிலம் மழையினைப் பெரிதும் நம்பியிருப்பது. எனவே மழைக் கடவுளான இந்திரன் மருதநில மக்களது தெய்வமென்றார் தொல்காப்பியர் ('வேந்தன் மேய தீம்புனல் உலகம்'). மழை வழங்கி உழவுத் தொழிலின் செழிப்பை உறுதி செய்த இந்திரனை வணங்குவதே போகிப் பண்டிகை. பண்டைய தமிழகத்தில் இந்திர விழா சித்திரையில் நிகழ்ந்ததென்பதை மணிமேகலைக் காப்பியத்திலிருந்து அறிகிறோம். உழவரது அறுவடைக் காலத்துடன் ஒத்துப் போகச் செய்யவே அது மார்கழி மாத இறுதி நாள் பண்டிகையாக மாறியதெனக் கருதலாம். மழைக்கும் கதிரவனே ஆதாரம். எனவே

பொங்கல் நாளில் கதிரவன் வணக்கம் தலைமை நிலை எய்தியது. தவிர, தை மாதம் முதல் நாளன்று சூரியன் மகரராசியில் பிரவேசித்து உத்தராயணம் (வடக்குமுகமாகச் செல்லும் காலம்) தொடங்குவதால், அந்நாளைச் சங்கிராந்தியாகக் கொண்டாடுவது வைதிக மரபு. உழவர் திருநாளே சங்கிராந்தியானதால், அந்நாள் சமுதாயத்தின் பொதுவான பெருநாளானது.

உழவுக்கு உறுதுணையான் மாடுகளுக்குப் பொங்கலிடுவதுடன், சல்லிக் கட்டு (மஞ்சு விரட்டி) விழாவும் நடை பெறுவது உண்டு. இது பண்டைய தமிழகத்தில் நிகழ்ந்த ஏறு தழுவல் என்பதை (பார்க்க: **கலித்தொகை**, 101, 102, 103, 105, 106, **சிலப்பதிகாரம்** 17;) நினைவூட்டுகிறது.

காணும் பொங்கல் நாள் (தை மூன்றாம் நாள்) சமுதாய ஒற்றுமையை வளர்ப்பதாகும். அன்றே சில இடங்களில் கன்னிப் பெண்கள் பொங்கலிடுவதால் கன்னிப் பொங்கல் என்றும் அந்நாள் பெயர் பெறும். அதிகாலையில் குளத்திலோ ஆற்றிலோ குளித்துவிட்டு நோன்பு நோற்ற கன்னிப் பெண்களைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் படிக்கிறோம். தைந் நீராடல் என்று குறிப்பிடப்பெறும் அப்பழக்கமே இக்காலத்தில் கன்னிப் பொங்கலாகக் காட்சி தருகிறது எனலாம்.

இவ்வாறாக, சூரிய வணக்கமும், ரிக்வேதமும் தொல்காப் பியமும் போற்றும் இந்திர வழிபாடும், பண்டைய சமுதாய பழக்க வழக்கங்களும், உழவர்களது அறுவடை விழாவும் ஒன்றி அமைந்ததாக உள்ளது பொங்கல் விழா.

இதிகாச புராணங்களில் சங்கிராந்தியைப் பற்றி உள்ள கதையும் இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆயர்கள் இந்திரனை வணங்குவதைக் கண்ணன் நிறுத்தினான். சீற்றம் கொண்ட இந்திரன் பெருமழை பொழியச் செய்தபோது, கண்ணன் கோவர்த்தன மலையினைக் குடையாகப் பிடித்து இடையரையும் கால்நடைகளையும் காப்பாற்றினான். அந்நன்னாளே சங்கிராந்தி. தோற்ற இந்திரன், கண்ணனை வணங்கித்

தன்னையும் இடையர் தொழுவதற்கு அருள் வேண்டினான். அவ்வாறே சங்கிராந்திக்கு முதல் நாள் இந்திர வணக்கமாகப் போகிப் பண்டிகை நடைபெறச் செய்தான் கண்ணன்.

இந்திரன் ஆரியர் தெய்வமென்பதையும் கண்ணன் பூர்வீக இந்தியரது கடவுள் என்பதையும் கருத்தில் கொண்டால் இக்கதையின் உட்பொருளைத் தெரிந்து தெளியலாம். ஆரிய தெய்வம் முன்னாள் விழாவில் ஒடுங்க, ஆதி இந்தியர் கடவுளான கண்ணன் விழா பொங்கல் நாளில் தலைமை நிலை மேவியது. கண்ணன் விழாவும், சூரிய வணக்கமும் இரண்டறக் கலந்ததால், பொங்கல் நாளில் சூரிய நாராயணனை வழிபடுவதே வழக்கமானது. ஆக, ஆரியரும் பண்டைய இந்தியரும் கூடி உறவாடி ஒன்றாகக் கலந்த சமுதாயத்தின் சிறப்புக்குச் சான்றாக விளங்குகிறது பொங்கல் விழா.

தீபாவளிப் பண்டிகையும் பன்மையில் ஒருமை கண்ட பாரத நாட்டுப் பெருமைக்குச் சான்றாக உள்ளது. தீபாவளியினைப் பற்றிய ஐதிகங்கள் பலவாக உள்ளதே, பல இன நம்பிக்கைகளது கூட்டுறவைப் புலப்படுத்துவதாகும். கண்ணனால் வதம் செய்யப்பெற்ற நரகன் என்ற அரக்கன். கடைசியாக விடுத்த வேண்டுகோளுக்கேற்பத் தீபாவளிப் பண்டிகை அமாவாசைக்கு முதல் நாளான சதுர்த்தசி நாளில் நடைபெறுகிறது என்பது தமிழ் நாட்டில் வழங்கும் கதை. வடநாட்டிலும் சில இடங்களில் கண்ணனது வெற்றியைக் கொண்டாடுகிறார்கள். நரகனது உருவங்களைக் கொளுத்தவும் செய்கின்றனர். ஆனால் புராணங்களில் இந்தக் கதை இடம் பெறவில்லை. இது தமிழர்களுக்கே உரிய பூர்வகதை மரபிற்கு உரியது என்போம்.

மண்ணுலகை நீத்த முன்னோர்கள், விண்ணுலகம் செல்லாது நரகம் போயிருந்தால், அல்லது பிதிர்லோகத்தில் தங்கியிருந்தால், அவர்கள் ஆண்டுக்கொரு முறை பூவுலகம் வருவார்களென்றும், அவர்களுக்குப் பிண்டமும் தர்ப்பணமும் அளிக்க வேண்டுமென்றும் தரும நூல்களும் புராணங்களும் கூறுகின்றன. நரக சதுர்த்தசிக்கு வைதிக வியாக்கியானம் இதுவே.

தென்னாட்டில் சதுர்த்தசி நாளே தீபாவளி நாள். குஜராத்தியரும், மார்வாரிகளும் ஐப்பசி அமாவாசையிலும் மறுநாளிலும் தீபாவளி கொண்டாடுவர். லட்சுமி பூஜையும் குபேர பூஜையும் அவற்றில் சிறப்பிடம் பெறும். பழங்கணக்கை முடித்துப் புதுக் கணக்கைத் தொடங்குவர். வணிகத்தில் ஏற்றமடைந்த சமுதாயத்தின் மரபினை இங்குக் காண்கிறோம்.

விக்கிரமாதித்தன் திருமுடி சூடி விக்கிரம சகாப்தம் தொடங்கிய நாளென்று தீபாவளிக்கு வடநாட்டு இந்துக்களில் பலர் விளக்கம் தருவர்.

பிரகலாதனின் பெயரனும், வாமனாவதாரம் எடுத்த திருமாலுக்கு மூன்று அடி நிலம் வழங்கி, அவர் விசுவரூபமெடுத்து மண்ணையும் விண்ணையும் இரண்டு அடியில் அளந்ததால், மூன்றாம் அடிக்குத் தன் தலையினைக் காட்டி பாதாளம் அடைந்தவனுமான மாவலிச் (மகாபலி) சக்கரவர்த்தி அரியணை ஏறிய நாளே தீபாவளி என்று வாமன புராணம் கூறும். மகாராஷ்டிரத்தில் சில இடங்களில் தீபாவளியன்று மாவலியை வழிபடுவதும் உண்டு.

இராவணவதம் செய்து மீண்ட இராமன் அயோத்தியை அடைந்தபோது, பதினான்கு ஆண்டாகத் துயருற்றிருந்த மக்கள் இரவில் விளக்கு வரிசைகளை ஏற்றி ஆனந்தமாக விழாக் கொண்டாடியதையே தீபாவளி குறிக்குமென்பர் வேறு சிலர். மகாவீரர் பரிநிர்வாணம் எய்திய நாளே தீபாவளி என்பது ஜைனர் கொள்கை

இவ்வாறுபல நம்பிக்கைகள் தீபாவளி கொண்டாடுவதில் ஒன்றுபடுகின்றன. சீக்கியரும் இத்திருநாளைக் கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது. பாரத நாட்டு மக்கள் வேற்றுமையில் ஒற்றுமை கண்ட சிறப்புக்குச் சான்றாகத் தீபாவளி விளங்குவதால்தான், சக்கரவர்த்தி அக்பரும் அந்நாளைக் கொண்டாடினார்.

எருமைக்கடா முகமுடைய மகிஷன் (மகிஷம்–எருமை) என்ற அசுரனை வதம் செய்த காளியம்மன் (மகிஷாசுர

மர்த்தனி) வழிபாட்டை[1] முன்னிட்டு நாம் நவராத்திரி விழா எடுக்கிறோம். பத்தாம் நாளான விஜயதசமியையும் சேர்த்துப் பத்துநாள் (தசரா) விழா எடுப்பர் வடநாட்டில்.

இந்திய மக்கள் கார்த்திகை மாத நிறைமதி நாளில் ஆடிப்பாடி விழாக் கொண்டாடியதைப் பற்றி வடநூல்கள் குறிப்பிடுகின்றன. அந்த நினைவைப் போற்றுவதாக உள்ளது கார்த்திகை விளக்கு. கார்த்திகை அக்கினியைக் கடவுளாகக் கொண்டதென்று சங்ககாலச் சான்றோர் நம்பினர். எனவே கார்த்திகையை அழல் என்றே புறநானூறும் (229) சிலப்பதிகாரமும் (23.134) குறிப்பிடும். கார்த்திகை விளக்கைப் பற்றி சீவகசிந்தாமணி (256) குறிப்பிடுகிறது. கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாளில் திருவண்ணாமலை மீதும் வேறுசில குன்றுகளின் உச்சியிலும் விளக்கேற்றுவதும், வீடுதோறும் விளக்கேற்றி ஒளிக்காட்சி அமைப்பதும், வீதிகளில் சொக்கப்பனை கொளுத்துவதும் தமிழகத்தின் வழக்கமாகும். அடைமழையில் ஆதவனைக் காணாத மக்களின் ஒளி வேட்கையை இது புலப்படுத்துகிறது. மேலும், சிவன் திரிபுரத்தை எரித்த விழா இதே நாளில் கொண்டாடப் பெறும். சிவன் திருக்கோயில்களில் சொக்கப்பனை கொளுத்துவதே திரிபுர அசுரர் எரிக்கப்பட்டதைக் குறிப்பதாகும்.

28. விதேசிச் சமயங்களுக்கும்[2] முழு உரிமை

ஒவ்வொருவனும் தன் மனச்சாட்சிக்கு உகந்த வகையில் ஆஸ்திகனாகவோ, நாஸ்திகனாகவோ அன்றி, சம்சயவாதியாகவோ

---

1. பண்டொழிந்த நாளில், தாய் வழிச் சமுதாயம் காட்டெருமை போன்ற வள விலங்குகளை எதிர்த்துப் போராடிய நினைவே மகிஷாசுரமர்த்தனி கதையின் கருவாகும். எனவே இக்கதையும் காளி வழிபாட்டின் தொன்மைக்குச் சான்று பகர்கிறது.

2. யூத, ஏசு,இஸ்லாமிய, ஜாரதுஷ்டிர மதங்கள் வெளிநாடுகளில் தோன்றி இவண் வந்தவை என்ற பொருளிலேயே 'விதேசிச் (அன்னியச்) சமயங்கள்' என்று அவற்றைக் குறிப்பிடுகிறோம். அவையும்இந்தியாவில் வழக்கிலுள்ள இந்தியச் சமயங்களே.

வாழ்வதற்கு உரிமை வழங்குவதே நயத்தக்க நாகரிகம் என்பது நம்காலக் கருத்து. முற்போக்கான நாடுகள் தமது அரசியல் சட்டங்களில் இதனை அடிப்படையான உரிமையாகவே வழங்கி இருக்கின்றன. என்றாலும், தனி உரிமை கொண்டாடித் தரணி ஆளப் புறப்பட்ட மதங்களால் நேர்ந்த கொடுமைகளும், போர்களும் பலவென்பதை வெளிநாடுகளின் வரலாறுகளில் படித்தறியலாம். ஆனால் அத்தகைய மதக் கொடுமைகள் பண்டைய பாரதத்தில் விதி விலக்கான நிகழ்ச்சிகளாகவே அமைந்தன. எம்மதத்துக்கும் முழு உரிமையை வழங்கியதைப் பாரதத்தின் பெருமை என்போம். உள்நாட்டுச் சமயங்களோடு அந்நியச் சமயங்களுக்கும் இச்சுதந்திரம் வழங்கப்பட்டது.

''அன்னிய தேவதைகளை நம்பிக்கையுடன் தொழும் அன்பரும், குந்தியின் மகனே, விதி வழுவி என்னையே தொழுகிறார்'' (9,23)

என்றும்

''...பிறர் அன்னியரிடமிருந்து பெற்ற சுருதிகளை (சுருதி-வேதம்) வழிபடுகிறார்கள். அவர்களும் அந்தச் சுருதிகளின் படி ஒழுகுவராயின் மரணத்தை வெல்வர்'' (13,26).

என்றும் இந்துமதத்தின் திருநூலான பகவத் கீதையில் கண்ணன் கூறுவான்.

இது வாய்ச்சொல்லாகவே அமைந்து விடவில்லை. கி.பி. முதல் நூற்றாண்டில் ரோமானியர் (பாலஸ்தீனத்திலுள்ள) எருசலேம் நகரை அழித்தபோது, ஆயிரக்கணக்கான யூதர்கள் கேரளத்துக்கு வந்தனர். அந்நாள் தொட்டு அவர்கள் விவசாயத்திலும் வணிகத்திலும் பங்குபெறும் பேறு பெற்றதோடு, யெஹோவா என்ற தமது கடவுளுக்கு ஆலயம் அமைத்து வழிபடும் உரிமையும் நிறைவாகப் பெற்று வாழ்ந்து வந்தனர். இந்நாட்டவரோடு கலப்பு மணம் செய்து கொண்ட கறுப்பு யூதரும் தனித்தே வாழும் வெள்ளை யூதரும் இன்றும் கேரளத்தில் உள்ளனர்.

யூதர் குலத்தில் பிறந்தவரான ஏசுநாதர் யூத மதக் கொள்கைகளில் செய்த புரட்சியால் தோன்றிய கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய ஐரோப்பிய நாடுகள், பத்தாம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டு வரையில், ஐரோப்பாவில் குடியேறிய யூதர்கட்கு இழைத்த இன்னல்களை விரித்தால், அது சோகம் மிக்க நெடுங்கதையாகும். அந்நிலையுடன் பாரதத்தில் யூதர்கள் பெற்ற உரிமை வாழ்வை ஒப்பிட்டால், நம்நாட்டுப் பண்பாட்டின் சகிப்புத் தன்மை நன்கு விளங்கும்.

கி.பி.முதல் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவ அடியார் செயின்ட் தாமஸ் கடல் வழியே மயிலாப்பூர் வந்தாரென்று சொல்லப்படுகிறது. அதன் உண்மை யாதாயினும் ஆகுக; மயிலாப்பூரில் கிறிஸ்தவர் நீண்ட காலத்துக்கு முன்பே வாழ்ந்தனர் என்பதை மெய்யெனக் கொள்வர் வரலாற்றாசிரியர். தவிர, ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, கேரளத்திலுள்ள கொல்லத்தில் நெஸ்டோரிய கிளைக்கு உரிய கிறிஸ்தவ தேவாலயம் தோன்றியது. அந்நாளில் இருந்தே கேரளத்தில் சிரிய கிறிஸ்தவர்களோடு நெஸ்டோரிய கிறிஸ்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர்.

ஏழாம் நூற்றாண்டில், அரேபியர் ஈரானை வென்று, ஈரானியரை இஸ்லாமியராகும்படிக் கட்டாயம் செய்தபோது, தமது பழைய மதத்திலிருந்து விலக விரும்பாத ஈரானியர் இந்தியாவுக்கு வந்தனர். அன்று முதல் இன்று வரை, பார்ஸிகள் எனப்படும் அந்த ஈரானியர்கள், தமது ஜாரதுஷ்டிர மதத்தைத் தழுவி வாழ்ந்து வருகின்றனர்.

இஸ்லாமும் இந்தியாவுக்கு நண்பனாக வந்து நல்வரவுக்கு உரியதானது. எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் முஸ்லீம் வணிகர்கள் மலையாளக் கடற்கரையின் பல பகுதிகளில் குடியேறி, கேரளப் பெண்களை மணந்து, மாப்பிள்ளை சமூகத்தைத் தோற்றுவித்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகளது நண்பரான சேரமான் பெருமாள் நாயனார் மெக்காவுக்கு புனித யாத்திரை சென்றாரென்றும் இஸ்லாமைத் தழுவினாரென்றும் ஒரு கதை உண்டு. அது உண்மை என்று உரைப்பதற்கில்லை; ஆனால் சேரமான் பெருமாள் நாயனார் இஸ்லாமிய

மதத்திடம் காட்டிய ஆர்வமும் ஆதரவுமே அக்கட்டுக்கதையைத் தோற்றுவித்திருக்க வேண்டும். அரசர்களும் குடிகளும் இஸ்லாத்துக்குச் சம உரிமை வழங்கியதால், பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கேரளத்தில் பல மசூதிகள் அமைந்தன; அநேக முஸ்லீம்கள் வாழ்ந்தனர். இதனை வெளிநாடுகளிலிருந்து வந்த யாத்திரீகர்களது குறிப்புக்கள் மெய்ப்பிக்கின்றன. தமிழ் நாட்டுக் கடற்கரையில் அமைந்த முஸ்லீம் குடியிருப்புகளில் காயற்பட்டினமும் நாகூரும் குறிப்பிடத்தக்கவை. நாகூரில் துறவி மீரான் அவர்களின் சமாதியில் நடைபெறும் ஆண்டு விழாவில், பல்லாயிரக்கணக்கான இந்துக்களும் முஸ்லீம்களும் சேர்ந்து வழிபடுவதை நாம் அறிவோம். சோழ சாம்ராஜ்யத்தின் பொற்காலமான 11-ம் நூற்றாண்டில், ஒரு சாயித் இளவரசர் திருச்சி நகரில் தீவிரமாக இஸ்லாமியப் பிரசாரம் செய்தாரென்பது செவிவழிச் செய்தி.

சிந்து மாகாணத்தில் மட்டுமே அரேபியர் (கி.பி.712) படையெடுத்து வென்றனர். ஆனால் விரைவில் சிந்து முஸ்லீம் அரசும் அரேபிய சாம்ராஜ்யத்திலிருந்து விடுபட்டுத் தனியரசானது. தவிர, அரேபியர் பேரரசுக்கும் பாரத அரசுகட்கும் இடையே வணிக உறவோடு கலை, விஞ்ஞான உறவுகளும் வளர்ந்தன. இன்று உலகம் பயன்படுத்தும் எண் முறையை இந்தியாவிடம் கற்று ஐரோப்பாவுக்குக் கற்பித்தவர்கள் அரேபியர்கள். கணிதத்தோடு, வான இயலிலும் வைத்தியத்திலும் வல்லவராக இருந்த இந்தியர், அரேபியர் பேரரசின் தலைநகரான பாக்தாதுக்குச் சென்றனர். இந்திய நூல்கள் அரேபிய மொழியில் வடிவெடுத்தன.

ஆக, இஸ்லாம் தோன்றியவுடனேயே, அரசியல் சக்தியாக வருவதற்கும் பல நூற்றாண்டுகட்கு முன்பே, சமயம் என்ற முறையில் பாரதத்துக்கு வந்தது என்பதும், முஸ்லீம்கள் தம் வழியில் வாழ்வதோடு பிறரைத் தம் மதத்துக்குச் சமாதான முறையில் மாற்றுவதற்கும் உரிமை பெற்றிருந்தனரென்பதும், இந்திய-அரேபிய வணிக உறவு வளர்ந்ததோடு, இந்திய அறிவுச் செல்வம் அரேபியர் பண்பாட்டுக்கு உரம் அளித்ததென்பதும் விளங்கும்.

11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான், இஸ்லாமின் பெயரால் பலாத்கார வெறி கொண்ட படைகள் பாரதத்தில் புகுந்தன. கஜனிசுல்தானாக விளங்கிய மாமூது பன்முறை படையெடுத்துக் கொள்ளையடித்ததோடு பஞ்சாபையும் வென்றான். ஆனால் மாமூதைச் சமயவாதி என்று கொள்ளாது, சமயத்தைப் பயன்படுத்திய போர் வெறியனாகக் கருதுவதே பொருத்தமாகும். அவன் இந்தியாவிலேயே திலக் என்ற இந்துவைத் தளபதியாகக் கொண்ட படையினைத் திரட்டி, மத்திய ஆசியாவிலிருந்த தன் முஸ்லிம் சோதரர்களுக்கு எதிராகப் பயன்படுத்தினான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாமூதுக்குப்பின், 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் முகம்மது கோரி தில்லியை வென்றான். தில்லி சுல்தான்கள் இந்தியாவையே தாயகமாகக் கொண்டனர். எனினும், இந்து முஸ்லிம் குரோதம் மிகுந்திருந்தது. இந்துப் பண்பாட்டைப் பாதுகாப்பதற்கென்றே விஜயநகரப் பேரரசு தென்னாட்டில் தோன்றியது. ஆனால் அதே போதில், இந்தியர் என்ற உணர்வோடு இந்துக்களும் முஸ்லிம்களும் உறவாடும் போக்கு வளர்ந்ததை மறுக்க முடியாது. இஸ்லாத்தின் சிறப்பியல்புகளையும் சீரணித்துக் கொண்டு முன்னேற பாரதம் விரும்பியது. கபீர்தாசர், குருநானக் ஆகியோர் இந்த வேட்கையின் வெளியீடுகளாக விளங்கியதை முன்பே கண்டோம். மறுபுறத்தில் இந்நாட்டினராக மாறிய அன்னியர்களும் இந்தி கற்று அம்மொழியில் நூல்கள் எழுதினர். அமீர் குஸ்ரூ என்ற துருக்கியர் பாரசீக மொழியில் சிறந்த கவியாக விளங்கியதோடு, இந்தியில் ஜனரஞ்சிதமான பாடல்களையும் இயற்றினார்.

மொகலாயர் ஆட்சியில், அக்பர் காலத்தில், இந்து முஸ்லிம் பண்பாட்டுக் கலப்பு பெரிய அளவில் நிகழ்ந்தது. இந்தியப் பண்பாட்டின் சர்வ சமய சமரசத் தன்மை அக்பரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவர் இந்துக்களுக்கு முழு உரிமை வழங்கியதோடு, பல்வேறு சமயத் தலைவர்களைக் கூட்டிச் சமயங்களைப் பற்றி விவாதம் நடத்தினார். அவர் இதர சமயங்களுக்கு அளித்த ஆதரவைக் கண்டு சில

'வைதிக' முஸ்லீம்கள் அவரிடம் ஆத்திரப்பட்டனர். தேசிய ஒருமைப்பாட்டுக்காக மொகலாய சக்கரவர்த்திகள் ஆற்றிய தொண்டினை ஔரங்கசீப் கெடுத்தார். இந்திய வேந்தனாக இல்லாமல், இந்துக்கள், சீக்கியர்கள் முதலானோருக்கு விரோதமான மன்னனாகவே ஔரங்கசீப் செயல் பட்டதால், மொகலாயர் பேரரசு சீர்குலைந்தது. ராஜ புத்திரர்கள், சீக்கியர்கள், மராத்தியர்கள் முதலானோரின் கிளர்ச்சிகள் தோன்றின. மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர், மராத்தியர் கை ஓங்கியது. ஆனால் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியாரே இறுதி வெற்றி கண்டனர்.

அரசியல் மாறுதல்கள் எவ்வாறு ஆயினும், இந்துக்களும் இந்திய முஸ்லீம்களும் பல பொதுவான பண்புகளைப் பெற்றிருந்தனர். முஸ்லீம்களில் பலர் முன்னர் இந்துக்களாக இருந்தவர்கள். தவிர, நீண்ட நாளையத் தொடர்பும் இரு சமூகங்களையும் நெருங்கிய உறவு கொள்ளச் செய்தது. உணவால், உடையால், மொழியால், மரபால், நாட்டுப் பாடல்களால் முஸ்லீம்கள் பிற இந்தியர்களோடு ஒன்றுபட்டிருந்தனர்.

29. இந்து 'மதத்தின்' தனிப்பண்பு

இந்து மதம் என்பதே இந்திய மக்களது ஒற்றுமை வேட்கையின் வெளியீடாக வடிவெடுத்தது. வடிவெடுத்ததென்பதே பிழைபடப் பேசுவதாகும். ஏனெனில் திட்டமான உருவம் பெறாத ஒன்றே 'இந்து மதம்' என்பது. தனக்கென்று ஒரு கறாரான நம்பிக்கையும் வழிபாட்டு முறையும் கொண்டதே மதம் அல்லது சமயம் என்பர். இந்தப் பொருளைப் பற்றுக்கோடாகக் கொண்டு பார்த்தால், "இந்து மதம்" என்பது ஒரு சமயம் அல்ல என்றே உரைக்க வேண்டும். பிரமம் என்ற பரம்பொருள் உருவமற்றது, குணமற்றது என்று வேதாந்திகள் கூறுவதை ஏற்றாலும் ஏற்காவிடினும், "இந்து மதம்" என்று குறிப்பிடப் பெறுவதற்கு கறாரான வடிவமோ பண்பு நலனோ இல்லையெனலாம். 'இந்துமதம்' இனங்காண முடியாத ஒன்று. பன்முகப்பட்டதாய், வெவ்வேறான பொருள் தருவதாய் அது உள்ளது.

இந்துக்களில்தான் எத்தனை ரகம்! கிராம தேவதைக்கு ஆட்டைப் பலி கொடுத்து வழிபடுவோனும், உயிர் வதையைச் சமய விரோதமான தீவினையென்று கருதிக் கொல்லாமையை விரதமாகக் கொண்டவனும் ஒரே சமயத்தினர்!

அரன் (சிவன்) அதிகன் என்பானும் உலகு அளந்த அரி (திருமால்) அதிகன் என்பானும், சக்தி வழிபாடே சிறந்தது என்பானும் ஒரே சமயத்தினர்! வினையின் பயனைத் துய்த்தாக வேண்டும் என்பவனும், கடவுட் கருணையால் தீவினையின் பயனைத் துய்ப்பதைத் தவிர்க்கலாம் என்பவனும் ஒரே சமயத்தினர்!

பல தெய்வங்களைச் சம நோக்கில் தொழுவோனும், ஒவ்வொரு தெய்வத்தை ஒவ்வொரு சமயத்தில் மிக்குயர் பரம்பொருளாகப் போற்றுவோனும் (Henotheism) 'ஒருவனே தேவன்' என்பவனும், அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்த நிர்க்குண அருவப் பிரமமாகப் பரம் பொருளைக் கருதுவோனும், கடவுளே இல்லை என்பவனும் (உம்: பூர்வமீமாம்சை வழியினர்) ஒரே மதத்தினர்!

இந்துக்களுக்கு நான்மறையே பிரமாணம் என்பர். ஆனால் பேய்கள், பூதங்கள், மந்திர தந்திரங்கள், வசியமுறைகள் முதலியவற்றை அதர்வவேதம் பேசிய போதிலும், அவற்றை நம்பாத பல இந்துக்களும் உள்ளனர். ரிக்வேதம் போற்றும் இந்திரனை, அகலிகையிடம் ஒழுக்கம் தவறி நடந்தவனாகவும், கண்ணனிடம் தோற்றவனாகவும், மும்மூர்த்திகட்கு அடங்கியவனாகவும் பெரும்பாலான 'இந்துக்கள்' கருதுவர். தெய்வங்கள் உள்ளனவா என்ற ஐயமும் அவற்றின் ஆற்றல் குறித்த சந்தேகமும் ரிக்வேதத்திலேயே உள்ளன. ''உலகம் எங்கிருந்து தோன்றியது- படைக்கப் பட்டதோ? அன்றோ? விண்ணில் உறையும் தெய்வம் மண்ணுலகம் தன்னை அறியுமோ?'' என்றே வினவும் ஒரு ரிக்வேதப் பாசுரம் (X,129). ஆக, 'வேதமே பிரமாணம்' என்ற வாசகத்தைக் கொண்டு இந்து மதத்துக்குக் கறாரான பொருள் தர முடியாது.

வேதத்தின் முடிவென்று உபநிடதங்களைக் கொள்வர். ஆனால் வேதங்களில் யாகம் முதலான கர்மங்கள் ஏற்றம் பெற, உபநிடதங்கள் ஞானத்தால் முக்தி அடைவதைப் பற்றிப் பேசுகின்றன. பண்டைய இந்திய ஞானிகளது உள்ளொளிக்கும் ஆன்மீக ஆராய்ச்சி நுட்பத்திற்கும் சாட்சியாக விளங்கும் உபநிடதங்களின் ஞானமும், அதன் சாரமான பிரமசூத்திரமும், கண்ணன் காட்டிய வழி என்ற பாராட்டுக்குரிய பகவத்கீதையும், பல்வேறு தத்துவ தரிசனங்களைத் தோற்றுவித்துள்ளன. ஆக, வேதாந்தச் சமயமே இந்துமதம் என்றால், வேதாந்தச் சமயங்கள் பல உள (அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம், சைவ சித்தாந்தம் முதலியன) என்றும், இவற்றைத் தழுவாத பாமரர்களும் இந்துக்களாகவே கருதப்பெறுகின்றனர் என்றும் விடை தருவோம்.

சாதி முறையே இந்துமத அடிப்படை என்பர் சிலர். சாதிமுறை என்பது பண்டைய இந்தியச் சமுதாயத்தில் அமைந்த வம்ச பரம்பரைத் தொழில் பிரிவினை ஏற்பாடே ஆகும். நந்தனையும் திருப்பாணாழ் வாரையும் போற்றும் சமயத்துக்கு சாதி முறையின் உயர்வு தாழ்வை அடிப்படையாகக் கொள்வது, தானடித்த மூப்பாகச் செய்யும் முயற்சியாகும். சாதி முறை என்பது சமுதாய அமைப்பின் ஓர் ஏற்பாடு. அதனைச் சாடிய சமய ஞானிகள் பலர். விக்கிரக ஆராதனையையும் இந்துமத அடிப்படையென்று கருத முடியாது—உருவ வழிபாடு செய்யாத இந்துக்கள் அன்றும் இருந்தனர், இன்றும் உள்ளனர்.

ஆக, சமயம் என்ற சொல்லுக்கு வழக்கிலுள்ள பொருளைக் கொண்டு ஆய்ந்தால் 'இந்துச் சமயம்' ஒரு சமயமே அல்ல என்போம்.

'இந்துச் சமயம்' இவ்வாறு பன்முகப்பட்டதேன்? இந்திய மக்கள் பாரத சமுதாயமாக ஒன்றுபட்ட சூழலில், அவர்களிடையே நின்று நிலவிய நம்பிக்கைகள், கொள்கைகள், வழி பாட்டு முறைகள் அனைத்தும் ஒருசேரப் பொருந்தப்பெற்றன. கிராமதேவதைவணக்கம் முதல் வேதாந்தம் வரையில் பல வகையான முரண்பட்ட கருத் தோட்டங்கள் 'இந்துச் சமயமாகக் குறிப்பிடப் பெறுவதற்கு இது ஒரு காரணம், வழி வழி வந்த ஞானிகள் தத்தம் காலத்தின் சமுதாய முன்னேற்றத் தேவைகளை

நிறைவு செய்யும் வகையில், தம் உள்ளொளியாலும் மெய்யறிவாலும் கொள்கைகளை வகுத்தனர். இதுவே இந்துச் சமயப் பன்மை நிலைக்கு இரண்டாவது முக்கிய காரணமாகும்.

இரண்டாவது காரணத்திலிருந்து ஓர் உண்மை விளங்கும். அதாவது, தங்கு தடையின்றிச் சிந்தனை செய்யும் சுதந்திரம் இந்நாட்டில் நிறைவாக விளங்கியது என்பதே. முன்னோர் கூற்று என்பதால் அதனைப் பின்பற்ற வேண்டுமென்ற கட்டாயமோ, அதற்கு அப்பால் சிந்தனை செல்லக்கூடாதென்ற விதிமுறையோ இந்நாட்டில் இல்லை. முன்னோரைப் போற்றும் மரபு உண்டு என்பது மெய். பின்னர்த் தோன்றிய பெரியார்கள் முன்னோரின் கருத்துக்களையே விரிவுரை செய்வதாகக் கூறிக்கொண்டு புதிய கருத்துக்களை வழங்கியதும் உண்டு என்பது மெய். சங்கரரை இதற்குச் சான்றாகக் காட்டலாம். ஆனால் சங்கரரை மறுத்து இராமானுஜர் தந்துவம் வகுத்ததையும், இருவரையும் மறுத்து மத்துவர் தத்துவத்தை உருவாக்கியதையும் எண்ணிப் பார்த்தால் சிந்தனை சுதந்திரச் சிறப்பு புலனாகும். முன்னோரைத் தழுவியோ, திருத்தியோ, மறுத்தோ தத்தம் கருத்தை வழங்கும் வாய்ப்பை அளித்த நாடு இந்தியா. மெய்ப்பொருளை அறிவதற்குள்ள – கருத்துரிமையே 'இந்து மதத்தின்' அடிப்படை எனலாம்.

எனவே மகாத்மா காந்தி மொழிந்தார்;

> இந்துக் கொள்கைக்கு வரையிலக்கணம் என்ன
> என்று என்னைக் கேட்டால், அஹிம்சா முறையில்
> சத்தியத்தை அறிய முற்படுவது என்பேன்.
> ஒருவன் கடவுளிருப்பதில் நம்பிக்கை கொள்ளாத போதிலும்,
> தன்னை இந்து என்று அழைத்துக் கொள்ள முடியும். இந்து
> மதம் என்பது பேருண்மையை அறிவதற்காகக் கடுமையாக
> முயல்வதாகும்...இந்து மதம் சத்திய மதமாகும்.
> சத்தியமே கடவுள். கடவுள் இல்லை என்று
> கூறுவோரை நாம் அறிவோம். சத்தியத்தை மறுப்பாரை நாம்
> அறிந்ததில்லை.

சத்தியமும் அஹிம்சையுமே இந்துமதம் என்பது மகாத்மாவின் கணிப்பு. ஆனால் அஹிம்சை இந்துமத அடிப்படை என்பதை மறுப்பதற்குச் சான்றுகள் பல உள. எனவே உண்மைத் தேட்டமே இந்துமதம் என்றாகிறது. இது ஒரு வரையிலக்கணம் என்றே கொள்வதற்கில்லை. அதனால்தான் கம்பன் நகைச்சுவையோடு, யுத்த காண்டக் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடினான்:

'ஒன்றே' என்னின், ஒன்றே ஆம்;
'பல' என்று உரைக்கின் பலவே ஆம்;
'அன்றே' என்னின் அன்றே ஆம்;
'ஆம்' என்று உரைக்கின் ஆமே ஆம்;
'இன்றே' என்னின் இன்றே ஆம்;
'உளது' என்று உரைக்கின் உளதே ஆம்;
நன்றே, நம்பி குடிவாழ்க்கை!
நமக்கு இங்கு என்னோ பிழைப்பு? அம்மா![1]

கடவுளை ஒருவன் என்பார், பலர் என்பார், இன்ன தன்மையன் என்பார், அன்னதன்மையின் அல்லன் என்பார், உளன் என்பார், இலன் என்பார் ஆகிய அனைவருமே இந்துக்களாக வாழ்ந்த நிலையினை இப்பாட்டு புலப்படுத்தும்.

உண்மைத் தேட்டமும் அதன் விளைவான சகிப்புத் தன்மையும் பண்டைய பண்பாட்டின் சிறப்பியல்புகளாக இருந்ததால்தான், வாழ்க்கையின் நன்னோக்கம் எதுவாயினும், அதை விளக்கி நிறைவேற்ற உதவும் கொள்கையும் சமயம்தான் என்ற வழக்காறு ஏற்பட்டது. எனவே, கடவுளைப் பற்றிக்கவலைப்படாத பௌத்தமும் மீமாம்சையும் சமயங்க ளாயின. உலகமே உண்மை என்றும் கடவுளே இல்லையென்றும் சாற்றிய உலோகாயதமும் (சார்வாகம்) மதம் என்று கூறப்பெற்றது. பொது வுடைமை மதம் என்று கம்யூனிசத்தைப் பாரதி குறிப்பிடுவதும் இங்குக் கருதத் தக்கது.

---

1. நம்பி – சிறந்தோன், இங்கு இறைவன். "இறைவன் வாழ்வே இப்படியென்றால் நம் பிழைப்பை என்னவென்று சொல்வது?" என்பது கடைசி அடியின் பொருள்.

எங்கெல்லாம் புனித உணர்வு வெளிப்படுகிறதோ, அங்கெல்லாம் சமயம் விளக்கம் பெறுவதாகப் பண்டைய சான்றோர் கருதினர். எனவே, வழக்கிலிருந்த பலவகையான வழிபாட்டு முறைகளும் 'இந்துச் சமயத்தில்' இடம் பெற்றன.

கடவுள் உளன் என்றோ, இலன் என்றோ கூறுவதைக் கொண்டு ஒருவனைச் சமயவாதி என்றும் அல்லன் என்றும் கூறுவதை ஒற்றைச் சாண் நினைப்பாகக் கருதிய பெரியார்கள், கருமத்தை உரைகல்லாகக் கொண்டு பெருமையும் சிறுமையும் அறிய முற்பட்டனர்.[1] எனவே மனிதனை மனிதன் சுரண்டும் முறைக்கு முடிவு கட்டும் பொதுவுடைமைச் சமுதாய அமைப்புப் பணியில் இன்னுயிரையும் அர்ப்பணிக்கும் புனிதன் நாத்திகனாயினும் அவனைச் சமய உணர்வு பெற்றவனாகவே இந்நாட்டு இலக்கணம் கூறும்.

ஆக, உண்மைத் தேட்டம், சகிப்புத் தன்மை, புனித உணர்வு, தனக்கென வாழாது பிறர்க்குரியாளராகும் சால்பு ஆகியவை பண்டைய இந்தியப் பண்புகளென்பதும், இவையும் இந்நாட்டில் நிலவிய பலவகை நம்பிக்கைகளும் கொள்கைகளும் வழிபாட்டு முறைகளும் சேர்ந்த குவியலே, அவியலே இந்துமதம் எனப்படுகிறது என்பதும் பெறப்படும்.

உண்மைத் தேட்டமே முன்னாளைய முழு முதற் நோக்கமாக இருந்ததை,

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு. (355)

என்று துறவற இயலில் மெய்யுணர்தல் அதிகாரத்தில் எடுத்துரைத்தார் வள்ளுவர்.

---

1 பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல் (505) என்றார் வள்ளுவர்.

30. வேதாந்த மறுமலர்ச்சி

இந்திய வரலாறு கண்டறியாத வேதனைமிக்க சோதனையாக வாய்த்தது ஆங்கிலேயர் வருகை. அந்தக் கேட்டுக்கு ஈடு கொடுத்துப் பீடு எய்துவதற்கு வாய்ப்புத் தந்தது, வழி வழிவந்த ஆன்மீக வளத்தின் புத்தாக்கமே.

பன்னூறு ஆண்டுகளாகப் படையெடுத்து வந்த பரதேசிகளையெல்லாம் ஜீரணித்துத் தன்மயமாக்கிய பாரத சமுதாயம் பிரிட்டிஷாரின் பகாசூரச் சுரண்டலுக்குத் தலை வணங்கியது எவ்வாறு? இந்திய அரசர்களுக்கிடையே முற்றியிருந்த பகைகளையும் பொறாமையையும் ஆங்கிலேயர் பயன்படுத்தினர் என்பதும் மெய். ஆனால் இதனையனைய உண்மைகளை மட்டும் சுட்டுவது மேற்போக்கான வரலாறாகவே முடியும். இயக்கம் அறியாத் தேக்கத்தை இயல்பாகக் கொண்ட கிராம சமூகத்தைக் குவிமையமாக உடைய இந்தியச் சமுதாயம் – பிற்பட்ட நிலையில் புதைந்து கிடந்த பாரத சமுதாயம் – எந்திரத் தொழிற் புரட்சியால் எழுந்த வளர்பிறைப்பருவ முதலாளித்துவத்தால் நிலைகுலைந்து சின்ன பின்னமாயிற்று என்பதே நுழைந்த நோக்கில் துலங்கும் பேருண்மை.[1] பிரிட்டிஷ் ஆலை முதலாளித்துவத்தின் மூலப் பொருள் பண்ணையாகவும் அதன் செய்பண்டங்களின் விற்பனைச் சந்தையாகவும் இழிவுற்றது இந்தியா.

முதல் கட்டத்தில், இந்தியாவைக் கொள்ளையடிப்பதிலேயே பிரிட்டிஷ் வணிகர்கள் கருத்தாயிருந்தனர் என்பதும், விலையைக் குறைத்துப் போட்டியிட்டு இந்தியச்சரக்குகளின் சந்தையைக்

---

1. இந்தியாவைப்பற்றி கார்ல் மார்க்ஸ் என்னும் நூலில் தொகுக்கப்பட்டுள்ள மார்க்ஸ் கட்டுரைகள் பிரிட்டிஷ் வருகையால் ஏற்பட்ட விளைவுகளை ஆராய்கிறது. அடுத்த இரு பாராக்களில் **(Paragraphs)** *மார்க்ஸ் ஆய்வின் சுருக்கமே பெரும்பாலும் இடம் பெறுகிறது.*

கைப்பற்றுவதிலேயே ஆலை முதலாளிகள் முனைந்து நின்றனர் என்பதும் உண்மையே. ஆனால் இந்தியாவைத் தொடர்ந்து சுரண்டுவதற்கே ஆங்கிலேய ஆலை முதலாளிகள் சில காரியங்களைச் செய்ய வேண்டியதாயிற்று. முதலாவதாக, மொகலாயப் பேரரசரது பொற்காலத்தில் இருந்ததைக் காட்டிலும் விரிவாகவும் உறுதியாகவும் அனைத்திந்திய அரசாங்க அமைப்பை நிறுவினர். இரண்டாவதாக, தமது தலைமையில் இந்திய ராணுவத்தைப் படைத்தனர். மூன்றாவதாக, கலகங்களை அடக்கி ஆதிக்கத்தைக் காப்பாற்றவும், இந்திய கிராமங்கள் அனைத்திலும் தம் பொருட்களை விற்கவும் இந்தியரது பொருட்களை வாங்கவும், இருப்புப் பாதைகளை அமைத்தனர். சாலைகளைச் சீரமைத்தனர். இரும்பும் நிலக்கரியும் உள்ள நாட்டில், இருப்புப் பாதைகளை வலைப்பின்னல் போல அமைக்கவும் அவற்றின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதற்கான இன்றியமையாத தொழில்களைத் தொடங்கவும் முன்வந்ததால் அவற்றுடன் நேரடியான தொடர்பில்லாத வேறு சில தொழில்களும் எந்திரமயமாவதைத் தவிர்க்க முடியாது. எனவேதான் இரயில்வே அமைப்பு நவீனத் தொழிலின் முன்னோடியானது. அத்துடன் அதுவும் மின்சாரத் தந்தியும் இந்திய ஐக்கியத்தைப் பலப்படுத்தின. நான்காவதாக, பஞ்சு முதலான தமக்கு இன்றியமையா மூலப்பொருட்களைப் பெறுவதற்கே, சில நீர்ப்பாசன வேலைகளை மேற்கொள்வதும் அவர்களது கடமையாக அமைந்தது. ஐந்தாவதாக, இவ்வாறாக இந்திய மக்கள் முறையாகப் பொருட்களை உற்பத்தி செய்து பிரிட்டிஷ் முதலாளிகளின் பகாசுரப் பசிக்குத் தீனி போட வேண்டுமானால், இந்தியரிலேயே சிலருக்கு வேண்டா வெறுப்பாக நவீனக் கல்வியை அளிக்க வேண்டியதாயிற்று. எனவே மேனாட்டு விஞ்ஞானத்தையும் சமுதாய இயல் சிந்தனைகளையும் கற்றறிந்த புதிய படிப்பாளி வர்க்கம் உருவாகும் நிலை ஏற்பட்டது.

ஆக, தன்னலம் கருதி ஆங்கிலேயராட்சி இயற்றிய கருமங்களே, நவீனத் தொழிலாளி வர்க்கமும் நவீனப் படிப்பாளி வர்க்கமும் இந்தியாவில் தோன்றுவதற்கு வகை செய்தன. நவீன உழைப்பு முறைகளுக்குத் தம்மைத் தகுதியாக்கிக் கொள்வதற்கும் தேவையான

பொறிஇயல் அறிவை அடைவதற்கும் தனித்திறன் பெற்றிருந்த நாட்டில் இந்த வர்க்கங்கள் உதயமாயின என்பதைக் காரல் மார்க்ஸ் சிறப்பாக குறிப்பிடுவார். தொழிற் புரட்சியைச் சாதிக்கும் வழியினைத் தழுவும் வர்க்கங்கள் இவை. மேலும் ''இந்தியர் முன்னேற்றத்துக்கும் ஆற்றலுக்கும் பெருந்தடையான இந்தியச் சாதிகளுக்கு அடிப்படையான பரம்பரைத் தொழில் பிரிவினைகளை, இரயில்வே ஏற்பாட்டின் விளைவாக உருவாகப் போகும் நவீனத் தொழில் அழித்து விடும்', என்று கார்ல் மார்க்ஸ் தீர்க்க தரிசனத்துடன் கூறியதையும் இங்கு நினைவு கூர்வோம்.

இன்னொன்று: வரிச் சுமை, (மேல்) வாரச் சுமை, வட்டிச் சுமை ஆகியவற்றால் விவசாயிகள் அல்லலுற்றனர். நிலம் தனி உடமையான சூழலில், விவசாயிகள் அதனை லேவாதேவிக்காரரிடம் பறிகொடுத்து விட்டுப் பதறும் சூழலில், உழவனுக்கே நிலம் என்ற கோஷத்தில் முடியும் பாதையில் விவசாயிகள் ஒன்று திரள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு எதிராக இந்திய விடுதலைப் போராட்டத்தை நடத்தும் அணியில், ஆலை முதலாளி வர்க்கம், படிப்பாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம் ஆகிய மூன்றும் விவசாய மக்களும் ஒன்று திரண்டு எழுவதற்கு ஏற்ற சூழல் உருவாகிக் கொண்டிருந்தது.

இந்தப் பாதையில் இந்திய மக்களை உந்துவதற்கு உறுதுணையாக அமைந்தது வேதாந்த மறுமலர்ச்சி. அநித்திய வாழ்வையும் ஊழின் வலுவையும் பற்றி சக்கர வட்டமாகப் பேசிச் செயல் வேண்டா சோம்பலுக்கு மூடுதிரையிட்ட பிற்போக்குத்தனத்தை எதிர்த்து நெற்றிக் கண் திறந்த தத்துவ எழுச்சி அது. மறுமலர்ச்சியின் விடிவெள்ளியாகத் தோன்றிய விவேகானந்தரின் தொண்டு நாட்டு மக்களைக் கிளர்ந்தெழச் செய்தது. கண்ணன் காட்டிய வழியில், கைம்மாறு கருதாது கருமம் புரிதலே கடமை என்று வற்புறுத்தி, விடுதலைப் போரில் மக்களைத் திரட்டினார், கீதா ரகசியம் எழுதிய லோகமான்ய பாலகங்காதர திலகர். தீண்டாமை ஒழிப்பையும், இந்து-முஸ்லிம் ஒற்றுமையையும், அன்னிய

ஆட்சியுடன் அஞ்சா நெஞ்சத்துடன் அறப்போர் புரியும் கொள்கையையும் நாட்டுத் திட்டங்களாக ஏற்றம் பெறச் செய்த காந்திஜியும் கீதையையே திருநூலாகப் போற்றினர்.

வேதாந்த மறுமலர்ச்சியின் பேராற்றலை நிறைவாகப் புலப்படுத்துவது பாரதியின் கவிதையே. சுய விமோசனத்துக்காக வேள்வி அனைய வினையாற்றுவதெல்லாம் வழியலா வழிமேல் படர்வதாகுமென்றும், சமுதாய வாழ்வுக்காகச் சர்வ பரித்தியாகம் செய்வதே சாலவும் சிறந்த வேள்வி என்றும் சத்ரபதி சிவாஜி வாயிலாகப் பேசுவான் பாரதி:

போர் எனில் இது போர்! புண்ணியத் திருப்போர்!
பாரினில் இதுபோல் பார்த்திடற்கு எளிதோ?
ஆட்டினைக் கொன்று வேள்விகள் இயற்றி
வீட்டினைப் பெறுவான் விரும்புவார் சிலரே;
நெஞ்சகக் குருதியை நிலத்திடை வடித்து
வஞ்சகம் அழிக்கும் மாமகம் புரிவம் யாம்.
வேள்வியில் இதுபோல் வேள்வி ஒன்றில்லை;
தவத்தினில் இதுபோல் தவம் பிறிதில்லை. (129,136)

கண்ணன் பார்த்தனுக்கருளிய அறிவுரையும் இதுவே என்பான் சிவாஜி. ''ஆரிய தரிசனம்'' என்னும் பாட்டிலும்,

வில்லினை எடடா! – கையில்
வில்லினை எடடா! – அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா!

என்று அர்ஜுனனுக்குக் கிருஷ்ணன் ஆவேசம் ஊட்டியதை நினைவு கூர்வான் பாரதி.

''அண்டம் சிதறினாலும் அஞ்சமாட்டோம்!''

என்று துணிந்து,

சுற்றி நில்லாதே போ! – பகையே!
துள்ளி வருகுது வேல்

என்று கோஷித்துக் கொண்டு விடுதலைப் போராட்டத்தில் குதிப்பதற்கு மக்களைத் திரட்டினான் புரட்சிக் கவிஞன்.

அன்னிய ஆதிக்கம் என்னும் அவலத்தை அகற்றுவதற்கு அணிதிரட்டும் தேசியத்தை ஒரு சமயமாகவே படைத்தான் பாரதி. பாரததேவி பராசக்தியின் மூர்த்தம்; காயழல் ஏந்திய பித்தனின் காதலி.[1] அவள் ''வெண்மை வளர் இமயாசலன் தந்த விறன் மகள்;'' செப்பும் மொழி பதினெட்டாயினும் சிந்தனை ஒன்றுடையாள்.[2] வேதம் வரைந்தது அவள் கரம்; கீதை புகன்றது அவள் வாய்; காண்டிவம் ஏந்தியது அவள் தோள்; இலங்கை அரக்கரை அழித்ததும் அந்த ஆரியராணியின் வில்லே.[3] அறம் கொன்ற அரசரை விழுங்கிப் பின் ஆனந்தக் கூத்தாடுவாள் அவள்.[4] அவளுக்கு நாடு பரதகண்டம்; நகர் காசி; ஆறு கங்கை; மலை இமயம்; ஊர்தி சிங்கம்; முரசு வேதம்.[5] அவள் பெயரைச் சொல்லியே பயமும் பகையும் வெல்வர் பாரத வீரர்.[6] இவ்வாறெல்லாம் வழிவழி வந்து நம் குருதியில் கலந்த கதைகளையும் கருத்துக்களையும் தொடுத்து, பாரததேவி வழிபாட்டு மதத்தைப் படைத்தான் பாரதி.

இந்தியத் தாயின் பன்முகங்களில் ஒன்றாகத் தமிழ்த் தாயைக் கண்டான் பாரதி. ''மன்னும் இமயமலை எங்கள் மலையே'' என்றும் ''பன்னரு உபநிட நூல் எங்கள் நூலே'' என்றும் இதயம் விம்ம இசைக்கும் பாரதியே,[7]

தமிழ்த் திருநாடு தன்னைப்பெற்ற – எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!

என்றும் பாடுவான். செந்தமிழ் நாடு என்னும் ஓசையே இன்பத்தேனாக அவன் காதில் பாய்கிறது. புனித உணர்வோடு, தமிழ், தமிழகம், பாரத நாடு என்னும் மூன்றையும் வழிபடுவது பாரதி கொள்கை:

---

1. ''வெறி கொண்ட தாய்''
2. ''எங்கள் தாய்.''
3. ''பாரதமாதா''
4. ''எங்கள்தாய்''
5. 'பாரத தேவியின் திருத்தசாங்கம்''
6. ''பாரத தேசம்''
7. ''எங்கள் நாடு''

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித் திருநாடு![1]

அனைத்து உயிர்களிலும் இறைமையைக் கண்ட அத்வைதி பாரதி. எல்லாச்சமயங்களையும் சமநோக்குடன் போற்றும் மனவிரிவைத் தந்தது அத்வைதம். புதிய ஆத்தி சூடியின் பரம்பொருள் வாழ்த்து இதனைத் தெளிவுபடுத்தும்:

ஆத்திசூடி, இளம்பிறை அணிந்து,
மோனத்து இருக்கும் முழுவெண்மேனியான்;
கருநிறம் கொண்டு கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை, எனப் பல மதத்தினர்
உருகத்தாலே உணர்ந்து உணராது
பல்வகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதன் இயல் ஒளியுறும் அறிவாம்.
அதன் நிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதன் அருள் வாழ்த்தி அமர வாழ்வு எய்துவோம்

''முரசு'' என்னும் பாட்டில் மொழிவான் பாரதி:

தீயினைக் கும்பிடும் பார்ப்பார் – நித்தம்
　　திக்கை வணங்கும் துருக்கர்,
கோயிற் சிலுவையின் முன்னே – நின்று
　　கும்பிடும் யேசு மதத்தார்,
யாரும் பணிந்திடும் தெய்வம் – பொருள்
　　யாவினும் நின்றிடும் தெய்வம்,
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று – இதில்
　　பற்பல சண்டைகள் வேண்டாம்.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைமையைக் காண்பதற்கு ஈரமும், வீரமும் தேவை என்பார் கோவிந்தஸ்வாமி;

1　*''வாழிய செந்தமிழ்*

ஈரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்;...
வீரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்.[1]

ஈரமும் வீரமும் நிறைவாகப் பெற்ற பாரதி, அத்வைத ஞானம் எய்தி ஜயபேரிகை கொட்டுகிறான்

காக்கை, குருவி எங்கள் ஜாதி – நீள்
கடலும், மலையும் எங்கள் கூட்டம்;
நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை;
நோக்க நோக்கக் களியாட்டம்.

இத்தகைய அத்வைதி, சாதிக் கொடுமைகளோடு சாதிப் பிரிவுகளையும் சாடுவதில் வியப்பில்லை;

தகரென்று கொட்டு முரசே – பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்...
அன்பென்று கொட்டு முரசே – மக்கள்
அத்தனை பேரும் நிகராம்

என்று பாடும் பாரதி, சாதியால் உயர்வு தாழ்வு பாராட்டுவது சமய விரோதமான தீவினை என்றே பாப்பாவுக்குப் போதிப்பான்:

சாதிகள் இல்லையடி பாப்பா! – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்.

சாதிக் கொடுமையோடு பெண்ணடிமை முறையும் பாரதியின் கண்டனக் கணைக்கு இலக்காகிறது.

உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவள் என்று அறியீரோ? உணர்ச்சி கெட்டீர்!
......பெண்மை அடிமையுற்றால்
மக்களெல்லாம் அடிமையுறல் வியப்பொன்றாமோ?[2]

---

1. *"பாரதி அறுபத்தாறு", 64*

2. *"பாரதி அறுபத்தாறு", 46,47.*

பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் முன்வந்தோம் எனப் பெண்கள் கும்மியடிக்கும் காட்சியை,

''நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்'' என்று தெளிந்து, நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறியும் திமிர்ந்த ஞானச் செருக்கும் உடையளாகப் புதுமைப்பெண் பாரத தேசம் ஓங்க உழைத்திடும் காட்சியைக் கற்பனை செய்கிறான் பாரதி.

சர்வ வியாபியாக இறைமையைக் கண்ட பாரதி லெனின் தலைமையில் வாகை சூடிய ரஷியப் புரட்சியை மாகாளி பராசக்தியின் கடைக்கண் பார்வையால் நேர்ந்ததாகச் சித்திரிக்கிறான்.

இம் என்றால் சிறைவாசம்; ஏனென்றால்
வனவாசம்; இவ்வாறு அங்கே
செம்மையெலாம் பாழ்கிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்,
அம்மை மனம் கனிந்திட்டாள்; அடிபரவி
உண்மை சொலும் அடியார் தம்மை
மும்மையிலும் காத்திடுதல் விழியாலே
நோக்கினாள்; முடிந்தான் காலன்

ஜாராட்சியின் வீழச்சியில் எழுந்த குடியாட்சியைக் கிருதயுகத் தோற்றமாக வர்ணிப்பான் பாரதி:

இடிபட்ட சுவர்போல கலி விழுந்தான்,
கிருத யுகம் எழுக மாதோ!

கண்ணன் காட்டிய வழியே பொதுவுடைமை நெறி என்பது பாரதியின் கணிப்பு. எனவே,

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கு ஒரு புதுமை

யாக பாரத சமுதாயம் வாழவேண்டுமென்று பாடும் போது' கீதையையே தன் கருத்துக்கு ஆதாரமாகக் காட்டுகிறான்.

''எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்''

என்றுரைத்தான் கண்ணபெருமான் என்பதால், ''எல்லாரும் அமரநிலை எய்தும் நன் முறையை'' (பொதுவுடைமைச் சமுதாய ஏற்பாட்டை) ''இந்தியா உலகிற்கு அளிக்கும்'' என்று அறுதியிட்டு உரைப்பான். கண்ணனுக்கு வர்க்கப் பார்வையே கற்பிப்பான் பாரதி:

ஏழைகளைத் தோழமை கொள்வான்; – செல்வம்
ஏறியார் தமைக் கண்டு சீறி விழுவான்.

''இல்லை என்னும் கொடுமையை உலகில் இல்லையாக வைப்பேன்'' என்று சூளுரைத்த கவிஞன், அதற்கான ஆற்றலை அளிக்குமாறு சிவசக்தியை வேண்டுகிறான்:

நல்லதோர் வீணை செய்தே – அதை
நலங் கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி! – எனைச்
சுடர்மிகு அறிவுடன் படைத்துவிட்டாய்,
வல்லமை தாராயோ, – இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி, சிவசக்தி! – நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?

அந்த வேண்டுகோள் வீண்போகவில்லை. சொல்லும் சுவையும் பொருளும் புதுக்கிய மாகவிதையை – பன்றி போத்தையும் சிங்க ஏறாக்கும் வீரப்பாட்டை, நெஞ்சத்தில் படர்ந்த இருளை நீக்கி ஒளிமயமாக்கும் மந்திரக் கவிதையை – இசைத்தது பாவலன் நா. அந்த இறை நம்பிக்கையே, தாழ்வைத் துடைத்து வாழ்வில் சிறக்கும் பொன்னாளைக் காணும் நெடிது நோக்கும் நோன்மையைக் கவிஞனுக்கு அளித்தது. அன்னிய ஆதிக்கத்துக்கு இறுதி சூழ்ந்து, எல்லோரும் சமம்

என்பதை உறுதி செய்யும் சமதர்மச் சமுதாயத்தைச் சமைக்கும் பணியில் பாரதம் வாகைமாலை சூடி நிற்பதையே கண்ணால் கண்டவனாக,

ஆடுவோமே – பள்ளுப் பாடுவோமே!
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று
ஆடுவோமே – பள்ளுப் பாடுவோமே!

என்று ஏறமுடியாத எவரெஸ்ட் மலைமுடிமீது ஏறிநின்று, உள்ளம் துள்ளப் பாடுகிறான்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்போம் – வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்,
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம் – வெறும்
வீணருக்கு உழைத்து உடலம் ஓயமாட்டோம்!

என்று புதுயுகம் கண்ட பாரத மக்களைப் பாட்டுவிக்கிறான் பாரதி.

நெட்டை மரங்கள் என நின்று புலம்பிய தமிழ் மக்களைக் கூற்றினுக்கு உயிர் கோடி கொடுத்தும் விடுதலைப் பேற்றினை அடையத் துணிந்தவராக மாற்றும் இரசவாதத்தைச் சாதித்தது பாரதி கவிதை. இன்றும், பாரதப் போரில் முழங்கிய கண்ணனின் பாஞ்சஜன்யம் போல், சமுதாய விடுதலைக்காகப் பாடுபடும் மக்களை ஆர்த்தெழச் செய்யும் ஆற்றலூட்டியாக விளங்குவது ப்ாரதி பாட்டு. பாரதி தரிசனத்தின் வலுவில், தொடர்பு முறியாத் தொன்மைக்குரிய பண்பாட்டு வளம் புத்தாக்கம் எய்திச் சிறப்புறும் நேர்த்தி விளக்கம் பெறுகிறது.

முற்றும்